விலை: 30.00
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
(C-532)
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 07 வெள்ளிக்கிழமை (23.10.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 309

# 20 பாராளுமன்றில் நிறைவேறியது

## ஆதரவாக 156 வாக்குகள் எதிராக 65 வாக்குகள்

## எதிரணியின் காலைவாரிய முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள்

(கொழும்பு) 20ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் நேற்று சட்டமாக நிறைவேற்றப்பட்டது. 20ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவாக 156 வாக்குகளும் எதிராக 65 வாக்குகளும் அளிக்கப்பட்டன. முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் நால்வர் உள்ளிட்ட எட்டு உறுப்பினர்கள் 20ஆவது திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்து எதிரணியினரின் காலை வாரினர்.

(23ஆம் பக்கம் பார்க்க)

## வைரஸால் ஆபத்து மதுச்சாலைகளை மூடுமாறு கோரிக்கை

(கொழும்பு)
கொரோனா வைரஸ் மேலும் பரவுவதற்கான அதிக ஆபத்து உள்ள நேரத தில் மதுபானக் கடை ➤23



## கொரோனாவை அழிக்க முடியாது

அதன் பாதிப்பு எப்போதும் இருக்கும்

பிரிட்டன் விஞ்ஞானிகள்

5ஆம் பக்கம் பார்க்க

# கொரோனாவால் இலங்கையில் 14 ஆவது மரணம்

(கொழும்பு)
கொரோனா தொற்றுக் காரணமாக மேலும் ஒருவர் இலங்கையில் உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

குளியாபிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 50 வயதுடைய பெண் ஒருவர் கொரோனா தொற்றுக் காரணமாக ஐ.டி.எச் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் சிகிச்சை பலனின்றி இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

(23ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர்களுக்கு சுகாதாரப் பிரிவு அவசர அறிவித்தல்

## பேலியகொட மீன் சந்தைக்கு மீன் கொண்டு செல்பவர்கள் உடனடியாக தங்களை அடையாளப்படுத்துக

(யாழ்ப்பாணம்)
யாழ்.மாவட்டத்திலிருந்து பேலியகொட மீன் சந்தைக்கு கூலர் வாகனங்களில் மீன் கொண்டு செல்லப்பட்டமை கண்டறியப்பட்டிருக்கும் நிலையில், கூலர் வாகனங்களை கொண்டு சென்றவர்கள் மற்றும் பேலியகொட சந்தை ➤23

## கோப்பாய் தனிமைப்படுத்தல் முகாமில் 3 பேருக்கு திடீர் சுகயீனம்

(யாழ்ப்பாணம்)
கோப்பாய் தேசிய கல்வியற் கல்லூரியில் தனிமைப்படுத்தப்பட் ➤23

# குளவி கொட்டியதில் விவசாயி உயிரிழப்பு

## விசுவமடுப் பகுதியில் சம்பவம்

(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு விசுவமடு பகுதியில் குளவி கொட்டுக்கு இலக்காகிய விவ ➤23

## நெஞ்சுவலி தாங்க முடியாமல் கிணற்றில் விழுந்த முதியவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)
நெஞ்சு வலி தாங்க முடியாத முதியவர் ஒருவர் கிணற்றில் விழுந்து உயிரிழந்துள்ளார்.

கடந்த 11ஆம் திகதி நெஞ்சு வலி தாங்க முடியாத முதியவர் ஒருவர் ➤23

## மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் இரட்டை பிரஜாவுரிமையும் சபையில் நிறைவேற்றம்

(கொழும்பு)
இரட்டை பிரஜாவுரிமை தொடர்பான அரசியலமைப்பின் 20ஆவது திருத்தத்தின் 17 ஆவது சரத்து மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் பாராளுமன்ற குழு நிலை விவாதத்தின்போது நேற்று நிறைவேற்றப்பட்டது.

20ஆவது திருத்தத்தில் உள்ள இரட்டை பிரஜாவுரிமை தொடர்பான ➤23

# கற்கோவளம் கடற்பரப்பில் 82 கிலோ கஞ்சா மீட்பு

கற்கோவளம் கடற்பரப்பினூடாக இலங்கைக்கு கடத்தி வரப்பட்ட 82 கிலோ கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளதுடன் மூவர் கடற்படையினரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கறகோவளம்கடற்பரப்பில்நேற்று வியாழக்கிழமை அதிகாலை 3.15 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் அல்வாய், மருதங்கேணியைச் சேர்ந்தவர்கள் என கடற்படையினர் தெரிவித்தனர். (ம-3,60)

## இலங்கையில் நேற்று மட்டும் +309 கொரோனா தொற்று உறுதி

(கொழும்பு)
இலங்கையில் நேற்று இரவு 9.50 வரையான சுகாதார அமைச்சின் தரவுகளின் பிரகாரம் 309 கோவிட்-19 தொற்று நோயாளிகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர்.

நேற்றுப் பதிவான புதிய தொற்று நோயாளர்களுடன் தற்போது மருத்துவமனைகளில் சிகிச்சையில் உள்ள தொற்று நோயாளர் எண்ணி ➤23

## கொரோனாவின் வீரியம் அதிகரித்தால்

# நாட்டை முடக்குவோம் ஒருபோதும் பின்நிற்க மாட்டோம்

## இராணுவத் தளபதி சவேந்திர சில்வா

(கொழும்பு)
கொரோனா வைரஸின் வீரியம் அதிகரித்தால் நாட்டை முடக்க ஒருபோதும் பின்நிற்க மாட்டோம் என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா ➤23

# இரு மீனவர்கள் மீது பருத்தித்துறையில் தாக்குதல்

(கரணவாய்)

பருத்தித்துறையில் இருந்து மீன் பிடிக்க சென்ற இரு மீனவர்கள் மீது மர்ம நபர்கள் மேற்கொண்ட தாக்குதலில் இருவர் படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

பருத்தித்துறை எரிந்த அம்மன் கோவில் அடிப்பகுதியிலிருந்து நேற்று முன்தினம் புதன்கிழமை (21) கடற் தொழிலுக்கு சென்ற இரண்டு கடற் தொழிலாளர்கள் மாலை 6.30 மணியளவில் நாகர் கோவில் கடற்பரப்பில் வைத்து முகங்களை மறைத்துக் கொண்டு மூன்று படகுகளில் வந்த 9 பேரினால் கட்டிவைத்து தாக்கப்பட்டதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு தாக்கப்பட்ட நிலையில் நேற்று வியாழக்கிழமை (22) அதிகாலை 3 மணியளவில் அவர்களை விடுவித்ததையடுத்து அவர்கள் பருத்தித்துறை வந்தடைந்தனர். தாக்குதல் மேற்கொண்டவர்கள் உள்ளூர் மீனவர்களின் ஜிபிஎஸ் கருவி, நங்கூரம் மற்றும் ஒரு பெரல் மண்ணெண்ணை என்பவற்றையும் பறித்தெடுத்துள்ளனர்.

தாக்குதலுக்கு உள்ளானவர்கள் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் மதியம் முறையிட்டுள்ளனர். தாக்குதல் மேற்கொண்டவர்கள் 40 குதிரைவலு வெளியிணைப்பு இயந்திரத்தினை பயன்படுத்தியுள்ளதால் அவர்கள் வடமராட்சி கிழக்கு பகுதியில் கடலட்டை பிடிப்பவர்களாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

(ம-03,60)

# கரவெட்டி தில்லையம்பலத்தில் மண் கொள்ளையில் ஈடுபட்ட 6 பேர் கைது

(கரணவாய்)

கரவெட்டி தில்லையம்பலம் காட்டுப் பகுதியில் கனரக வாகனத்தின் உதவியுடன் பாரிய மண் கொள்ளையில் ஈடுபட்ட 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மணல் கொள்ளைக்கு பயன்படுத்தப்பட்ட ஜே.சி.பி இயந்திரம், 3 டிப்பர் வாகனமும் விசேட அதிரடிப்படையினரால் மீட்கப்பட்டு நெல்லியடிப் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தில்லையம்பலப் பிள்ளையார் ஆலயத்தை அண்டிய பகுதியில் தொடர்ச்சியாக மண் கொள்ளை இடம்பெற்று வந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து, அப்பகுதியில் உள்ள விசேட அதிரடிப்படையினர் நேற்று வியாழக்கிழமை (22) காலை அப்பகுதிக்கு சென்ற போது ஜே.சி.பி கனரக வாகனத்தின் உதவியுடன் பாரிய மணல் கொள்ளை இடம்பெற்றமை தெரியவந்தது.

இதனை அடுத்து, அவ் வாகனத்தினையும் மணலை அகழ்ந்து கொண்டு செல்வதற்கு பயன்படுத்தப்பட்ட 3 டிப்பர் வாகனங்களும் மணல் அகழ்வில் ஈடுபட்ட 6 பேரும் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டு நெல்லியடி பொலிஸில் ஒப்படைக்கப்பட்டனர்.

(ம-03,60)

## 20 ஆவது திருத்தச் சட்டத்தால்

# ஜனாதிபதியிடம் பாராளுமன்றம் மண்டியிட்டுள்ளது - பொன்சேகா

(கொழும்பு)

20ஆவது திருத்தச் சட்டத்தால் ஜனாதிபதியிடம் பாராளுமன்றம் மண்டியிட்டுள்ளதுடன், நாடு சர்வாதிகார திசையை நோக்கியே நகருமென ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற அரசியலமைப்பின் 20ஆவது திருத்தச்சட்டத்தின் இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

நிறைவேற்று அதிகாரத்தின் மூலம் ஏற்படும் பாதகத்தன்மை பற்றி கடந்த காலத்தில் அனைத்து தேர்தல்களிலும் வேட்பாளர்கள் பேசினர். அதனை அடிப்படையாககொண்டு தான் மக்கள் ஆணையை பெற்றுக்கொண்டார்கள்.

19ஆவது திருத்தத்தில் சர்வாதிகார போக்குடைய ஜனாதிபதி முறையை ஓரளவு குறைத்தோம். மீண்டும் அதற்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. ஒரு தனிநபரிடம் அதிகாரங்களை குவிக்காது பாராளுமன்றத்தில் மக்கள் பிரதிநிதிகளிடம் அதிகாரத்தை கொடுக்கும் சூழல் உருவாக்கப்பட்டதை மக்கள் ஏற்றுக்கொண்டிருந்தனர்.

தேர்தல்களில் எந்தக் கட்சிக்கு வாக்களித்தாலும் ஜனநாயகம் வலுப்படுத்தப்பட வேண்டும் என்பதில் மக்கள் உறுதியாகவுள்ளனர். 18ஆவது திருத்தச் சட்டத்தில் ஜனநாயகம் குழிதோண்டி புதைக்கப்பட்டது.

தற்போது மீண்டும் 20ஆவது திருத்தச் சட்டத்தில் அதுதான் நடைபெறுகிறது. தனிப்பட்ட சுய்லாபம் மனசாட்சியை தாண்டியுள்ளதால் 20ஆவது திருத்தம் கொண்டு வரப்படுகிறது.

பாராளுமன்றம் சர்வாதிகார ஜனாதிபதி முன்னிலையில் மண்டியிட்டிருக்கிறது. பிரதமரை நினைத்தவுடன் நீக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு கிடைக்கிறது. எந்தவொரு அமைச்சையும் எச்சந்தர்ப்பத்திலும் பறிக்கலாம்.

இவ்வாறு ஜனாதிபதிக்கு அதிகாரங்கள் கிடைத்தால் அமைச்சர்களுக்கு அதிகாரம் இல்லாது போய்விடும். ஜனாதிபதியால் நினைத்தபடி அமைச்சர்களை ஆட்டி வைக்கவும் முடியும்.

பாராளுமன்றத்தை கலைப்பதற்கான அதிகாரமும் ஜனாதிபதிக்கு கிடைக்கிறது. ஐந்து வருடத்திற்கு மக்கள் வழங்கும் ஆணையை அடிபணிய வைக்கும் செயற்பாடே இது. கடும் அழுத்தங்களால் 20இல் சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆரம்பத்தில் இருந்தவாறு இது நிறைவேற்றப்பட்டிருந்தால் மக்களின் அடிப்படை உரிமைகூட கேள்விக்குறியாகியிருக்கும் என்றார்.

(ம-03)

## வலி. தெற்குப் பிரதேச சபை அமர்வில்

# சுதந்திரக் கட்சியின் பெண் உறுப்பினர் தரையில் அமர்ந்து கவனயீர்ப்பு

(குப்பிழான்)

வலி.தெற்குப் பிரதேச சபை அமர்வு நேற்று வியாழக்கிழமை (22) சபை மண்டபத்தில் தவிசாளர் கருணாகரன் தர்ஷன் தலைமையில் நடைபெற்றது.

குறித்த அமர்வு நடைபெற்றுக் கொண்டிருந்த போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் செல்வராசா காயத்திரி தனக்குச் சபையில் கருத்துத் தெரிவிக்க அனுமதி வழங்கப்படவில்லை எனத் தெரிவித்துத் திடீரென எழுந்து வந்து சபையின் முன்பாகத் தரையில் அமர்ந்து கவனயீர்ப்புப் போராட்டம் நடத்தினார். வலி. தெற்குப் பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் செயலாளர் அமர்ந்திருந்த கதிரைகளுக்கு அருகில் தரையில் அமர்ந்து தனது எதிர்ப்பினை வெளியிட்டார்.

சுமார் அரைமணித்தியாலம் வரை குறித்த பெண் உறுப்பினரின் கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெற்ற நிலையில் அவரது கோரிக்கை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுப்பதாக வலி. தெற்குப் பிரதேச சபையின் தவிசாளர் உறுதிமொழி அளித்ததையடுத்து அவரது போராட்டம் கைவிடப்பட்டது.

இதேவேளை, தனது வட்டாரத்தில் பொருத்துவதற்கான மின்விளக்குகள் கடந்த ஒரு வருடமாக வலி. தெற்குப் பிரதேச சபையின் தலைமையகத்தில் வைக்கப்பட்டுள்ளதாகவும், பல தடவைகள் தெரிவித்தும் இதுவரை பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் தெரிவித்த குறித்த பெண் உறுப்பினர் பழுதடைந்த மின்விளக்குகளைச் சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் தெரிவித்தார். இதனாலேயே தரையில் அமர்ந்து எதிர்ப்பினை வெளியிட்டதாகவும் மேலும் கூறினார். (ம-03,18)

## இறுதி யுத்தத்தில் காயமடைந்த

# இராணுவச் சிப்பாய் 11 வருடங்களின் பின் மரணம்

(கொழும்பு)

இறுதி யுத்த காலப்பகுதியில் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் காயமடைந்த இராணுவச் சிப்பாய் ஒருவர், 11 வருடங்களின் பின்னர் உயிரிழந்துள்ளார்.

குறித்த சிப்பாய் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளதாக இராணுவம் அறிவித்துள்ளது.

2009 ஜனவரி மாதம் விசுவமடு பகுதியில் விடுதலைப் புலிகளின் எறிகணைத் தாக்குதலில் காயமடைந்த சிப்பாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

58வது படையணியைச் சேர்ந்த, டான் திலான் பிரசன்னா எனும் சிப்பாய் படுகாயமடைந்த நிலையில் உணவு உண்ண முடியாத நிலையில் இராணுவ பராமரிப்பு நிலையமொன்றில் பராமரிக்கப்பட்டு வந்தார்.

உடல்நலம் குன்றிய நிலையில் நேற்று முன்தினம் (21) காலை நார ஹேன்பிட்டி இராணுவ மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளதாக கூறப்படுகின்றது. (ம-03)

## அதிகாரம் ஓர் இடத்தில் குவிக்கப்படுவதால்

# தமிழர்களின் இருப்புக்கும் இறைமைக்கும் பெரும் ஆபத்து

## சபையில் சிவஞானம் சிறிதரன்

(கொழும்பு)

அதிகாரங்கள் ஓர் இடத்தில் குவிக்கப்படுவதால் தமிழர்களின் இருப்புக்கும் இறைமைக்கும் பெரும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. எனவே இலங்கை வரலாற்றில் இன்று (நேற்று) இருண்டநாள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் பாராளுமன்றில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அரசியலமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டம் மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், 20 ஆவது திருத்தச் சட்டத்தை கொண்டு வருவதன் மூலம் இந்த நாடு ஓர் இருண்ட யுகத்தை நோக்கி நகர்கிறது. முசோலினி, ஹிட்லர் அல்லது ஒரு இடிஅமீன் யுகத்தை நோக்கியே நாடு நகரப்போகிறது. 1978 ஆம் ஆண்டு ஜே.ஆர்.ஜெயவர்தன புதிய அரசிலமைப்பொன்றை கொண்டு வந்திருந்த சந்தர்ப்பதில் அதன் ஆபத்தை கொல்வின் ஆர்.டி.சில்வா விளக்கியிருந்தார்.

எந்தவொரு நபருடைய கருத்தையும் செவி சாய்க்காது ஜே.ஆரால் கொண்டு வரப்பட்ட அரசியலமைப்பில் பல்வேறு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள சூழலில் மீண்டும் 42 வருடங்களின் பின்னர் ஒரு தனிநபரிடம் அதிகாரத்தை குவிக்கும் முகமாக இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இதனால் நாடு மிகப்பெரிய ஆபத்தை நோக்கித்தான் நகரும்.

எமக்கு இந்த நாட்டில் வாழும் உரிமை இருப்பது என்றால் இவ்வாறு அதிகாரம் குவிக்கப்படுவது ஆபத்தானது. அதனால் தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்பதை ஏற்றுக்கொள்ள முன்வர வேண்டும். சிங்கள மக்கள் வழங்கியுள்ள அதிகாரத்தை நேர் வழியில் பயன்படுத்த வேண்டும். அப்போதுதான் சிறந்த எதிர்காலம் அமையும். வரலாற்றின் கறுப்புநாளை வாக்களிக்கும் உறுப்பினர்கள் பதிவுசெய்து வைத்துக்கொள்ளுங்கள் நாளை இந்த அதிகாரங்கள் உங்களுக்கு எதிராகவே திரும்பும் என்றார். (ம-03)

# நாடு அபாயகரமான நிலையில் உள்ளது

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)


**நாட்டில் தற்போது மிகவும் அபாயகரமான ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளது. "தற்போது ஏற்பட்டுள்ள அலை அல்லது கொத்தணி மிகவும் கடுமையானது. நாளாந்தம் நூறு இருநூறு என நோயார்கள் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுகின்றார்கள். இந்நிலையில், வைத்தியசாலைக் கட்டமைப்பில் பாரிய நெரிசல் ஏற்படுகின்றது. எனினும், அதிர்ஷ்டவசமாக இன்னும் அதிதீவிர சிகிச்சைப் பிரிவுகளுக்கு உட்படுத்துவதற்கான தேவை ஏற்படவில்லை என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் ஹரித்த அலுத்கே எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், கொரோனா தொற்றாளருக்கு 24 மணித்தியாலத்திற்குள் இரண்டு பி.சி.ஆர்.பரிசோதனைகள் இதுவரை மேற்கொள்ளப்பட்ட நிலையில், இரண்டு பரிசோதனைகளிலும் தொற்று இல்லை என உறுதிப்படுத்தப்பட்டால் அவர்கள் வீடுகளுக்கு அனுப்பிவைக்கப்படுகிறார்கள்.

அத்துடன், வேறு நாட்களை விட தற்போதைய சூழ்நிலையில் மிகவும் ஆபத்தான ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளது. சமூகத்துக்கு மத்தியில் தொற்று பரவியுள்ளது என இப்போதைக்கு எமக்குக் கூற முடியாது. ஆனால், வேறு நாட்களை விட தற்போது மிகவும் ஆபத்தான நிலைமை ஏற்பட்டுள்ளது.

தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவிடம் சில தரவுகள் இருக்கின்றன. இராணுவத்திடமும் தரவுகள் இருக்கின்றன. இன்னும் சில தரப்பினரிடமும் தரவுகள் காணப்படுகின்றன.

குறிப்பாக, பி.சி.ஆர்.பரிசோதனை தொடர்பான எண்ணிக்கை தொற்று நோய் பிரிவு ஊடாக இன்றி சுகாதார அமைச்சின் ஆரம்ப பராமரிப்புச் சேவையின் பணிப்பாளருக்கே செல்கின்றது. இவையனைத்தும் ஒரு இடத்திற்கு வர வேண்டும்.



தொற்று நோய்ப் பிரிவு தம்மிடம் உள்ள தரவுகளை மாத்திரம் வைத்துத் தீர்மானங்களை மேற்கொள்ள முடியாது. இதனால்தான், நாம் இதற்கான செயற்பாட்டுப் பிரிவொன்றை யோசனையாக முன்வைக்கின்றோம்" எனக்குறிப்பிட்டுள்ளார். (ஐ-4)

## முகக் கவசங்கள், கையுறைகளை கவனமாகக் கையாள்வோம்

(கொழும்பு)

கொரோனாத் தொற்றின் வீரியம் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், அதன் தொற்றிலிருந்து மக்கள் பாதுகாப்புப்பெறும் வழிவகைகள் தொடர்பில் பல்வேறு விழிப்பூட்டல்களும் சுகாதார நடைமுறைகளும் பின்பற்றப்பட வேண்டுமென, அரசும் சுகாதாரத்துறையும் வலியுறுத்தி எச்சரித்து வருகிறது. குறித்த நடைமுறைகளைப் பின்பற்றாமல், மீறுகின்றவர்களுக்கு எதிராக நடவடிக்கையும் தண்டப்பணமும் அறவிடப்படுமெனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எனவே, மக்கள் கட்டாயம் இந்நடைமுறைகளைப் பின்பற்றியே ஆக வேண்டும். அப்போது தான் கொரோனாவின் தாக்கத்திலிருந்து பாதுகாப்புப் பெற முடியும் என்பதுடன், மற்றவர்களுக்கும் பரவாமல் காத்துக் கொள்ளவும் முடியும்.

கொரோனாப் பரவலுக்கும் ஒருவரிலிருந்து மற்றவருக்கு தொற்றிக் கொள்வதற்கும் பல்வேறு காரணிகள் அடையாளப்படுத்தப்பட்டு எச்சரிக்கை விடுக்கப்பட்டாலும் கொரோனா தொற்றுள்ள ஒருவர் பாவித்த உபகரணங்கள், பொருட்கள் ஊடாகவும் அது இலகுவாக மற்றவரைச் சென்றடையலாம் என்ற நிலையுள்ளது.

கொரோனா விஸ்வரூபமெடுத்துள்ள இன்றைய சூழலில், முகக்கவசப் பாவனை கட்டாயப்படுத்தப்பட்டு, அதன் முக்கியத்துவம் கருதி எவ்வாறான முகக்கவசங்களை எவ்வாறு அணிய வேண்டும் என்ற நடைமுறைகளும் அதனைப் பாவித்த பின்னர் எவ்வாறு அதனை அகற்ற வேண்டும்? அகற்றிய முகக்கவசங்களை, கையுறைகளை எவ்வாறு பாதுகாப்பான இடங்களில் இடப்பட வேண்டும் என்ற வழிகாட்டுதல்களும் வழங்கப்பட்டு வருகின்றது.

சகல தரப்பினரும் முகக்கவசம் அணிய வேண்டுமென்ற கட்டாய நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலையில், பாவித்த பின்னர் அகற்றப்படும் முகக்கவசங்கள், கையுறைகளால் கொரோனாவின் அடுத்த அலை உருவாகிவிடுமோ என்ற அச்சநிலையும் உருவாகியுள்ளது.

அகற்றப்படும் முகக்கவசங்கள், கையுறைகள் என்பன, கண்ட இடங்களிலெல்லாம் கழற்றி வீசப்படுள்ளதை அவதானிக்க முடிகின்றது. இதன் காரணமாக, முகக்கவசங்கள் அணியும் நோக்கம் சிதைக்கப்பட்டு, கொரோனாப் பரவலுக்கான காரணியாக மாறிவிடுமோ என்ற அச்சம் எழுந்துள்ளது.

வீதிகள், பொது மக்கள் நடமாட்டமுள்ள பொது இடங்கள், பாதுகாப்பற்ற முறையில் குப்பைத்தொட்டிகளில், பாடசாலைகள், மதஸ்தலங்கள் உள்ள பிரதேசங்களிலெல்லாம் கழற்றி வீசப்பட்டுள்ள துடன், நீர்நிலைகள், கடற்கரை ஓரங்களிலும் பாவித்து அகற்றப்பட்ட முகக்கவசங்களைக் காணக்கூடியதாக உள்ளது.

இவ்வாறான இடங்களில் கழற்றி வீசப்படும் முகக்கவசங்கள், கையுறைகளால் கொரோனாத் தொற்று காவிச்செல்லப்பட்டு மற்றவர்களுக்கும் பரவலை ஏற்படுத்தும் வாய்ப்பை ஏற்படுத்துவதுடன், நீர்நிலைகளில் வீசப்படும் முகக்கவசங்களால் நீர் நிலைகளும் மாசுபடும் அபாயகரமான சூழலும் விலங்கினங்கள், பறவைகளும் அதனை காவிச்சென்று பரவலடையச் செய்ய அதிகம் வாய்ப்புள்ளதையும் மக்கள் கவனத்திற் கொள்ளவேண்டும்.

முகக்கவசங்கள், கையுறைகள் அணிவது நம்மையும் பாதுகாத்து மற்றவர்களையும் பாதுகாக்க வேண்டும் எனும் நோக்கத்தில், அது அப்படியாகவே அமைய வேண்டுமேயொழிய மற்றவர்களுக்கு அசௌகாரியங்களை ஏற்படுத்தும் விதத்தில் அமைந்து விடக்கூடாது.

இவைகளைக் கருத்திற்கொண்டு செயற்படுவோமாக இருந்தால், கொரோனாவிலிருந்து நாமும் பாதுகாப்புப்பெற்று, மற்றவர்களையும் பாதுகாத்து, சுகாதாரத்துறையினரின் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி, கொரோனாக் கட்டுப்படுத தல் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியவர்களாவோம். (ஐ-4)

## விடுதலைப் புலிகள் மீதான தடைநீக்கம் உன்னிப்பாக அவதானிக்கிறது இலங்கை

(கொழும்பு)

பிரித்தானியாவின் தடை செய்யப்பட்ட இயக்கங்கள் தொடர்பான மேல்முறையீட்டு ஆணையம் வழங்கிய தீர்ப்புக்கு எதிரான மேன்முறையீடு குறித்து உன்னிப்பாக அவதானிப்பதாக இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது.

பயங்கரவாதத்திற்கு எதிராக உலகளாவிய ரீதியில் போராடும் சர்வதேச சமூகத்தில் உள்ள நாடுகளுக்கும் தமது நாடு ஒத்துழைப்பு வழங்கும் எனவும் இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

விடுதலைப்புலிகள் இயக்கம் மீதான தடையை கடந்த ஆண்டு நீடித்த பிரித்தானிய உள்விவகார துறையினர், அந்த நடவடிக்கை தவறானது என தடை செய்யப்பட்ட இயக்கங்கள் தொடர்பான மேல்முறையீட்டு ஆணையம் நேற்றுமுன்தினம் தீர்ப்பளித்துள்ளது.

இது தொடர்பாக பிரித்தானிய உள்துறைச் செயலாளருக்கு எதிராக ஆறுமுகம் உள்ளிட்ட மனுதாரர்கள் மேல்முறையீட்டு ஆணையத்தில் மனு தாக்கல் செய்திருந்தனர்.

இந்த தீர்ப்பு குறித்து அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சு, தடை செய்யப்பட்ட இயக்கங்கள் தொடர்பான மேல் முறையீட்டு ஆணையத்தின் தீர்ப்பு குறித்து அறிந்துள்ளதாக கூறியுள்ளது.

தடை செய்யப்பட்ட இயக்கங்கள் தொடர்பான மேல்முறையீட்டு ஆணையத்தின் நடைமுறைகளுடன் இலங்கை அரசாங்கம் பங்காளிகளாக இருக்கவில்லை என்பதுடன், நேரடியாக தொடர்புபடவில்லை என கூறியுள்ளது.

எவ்வாறாயினும் தொடர்ச்சியான பயங்கரவாத செயற்பாடுகள் குறித்த தேவையான தகவல்களை பிரித்தானியா அரசாங்கத்திற்கு வழங்கியதன் மூலம் இலங்கை அரசாங்கம் உதவிகளை வழங்கியுள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சு கூறியுள்ளது.

இந்த நிலையில் தற்போது வழங்கப்பட்டுள்ள தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்ய முடியும் என்பதுடன், அது தொடர்பான வழக்கு விசாரணைக ளின் முன்னேற்றங்கள் குறித்து இலங்கை அரசாங்கம் உன்னிப்பாக அவதானிக்கும் எனவும் அமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

## இலங்கைக்கு வரவுள்ள 70 பாதுகாப்பு அதிகாரிகள்

(கொழும்பு)

எதிர்வரும் 28 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ள அமெரிக்காவின் இராஜாங்க செயலாளர் மைக் பொம்பியோவின் பாதுகாப்புக்காக 70 அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகள் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளனர்.

இலங்கை வரும் அமெரிக்க இராஜாங்க செயலாளர் பொம்பியோ கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் தங்க உள்ளதுடன் தனிமைப்படுத்தல் தொடர்பான நடவடிக்கைகள் பின்பற்றப்படவுள்ளன.

எம்.சீ.சீ.மற்றும் சோபா உடன்படிக்கைகளில் கையெழுத்திடுவது தொடர்பான அழுத்தங்களை கொடுப்பதற்காகவே அமெரிக்க இராஜாங்க செயலாளர் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர். (ஐ-4)

# தெஹிவளை மத்திய சந்தை தற்காலிகமாக மூடப்பட்டது

(தெஹிவளை)

தெஹிவளை மத்திய சந்தைக் கட்டடத் தொகுதி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

பேலியகொட மீன்சந்தை வளாகத்திலிருந்த தெஹிவளை மத்திய சந்தைப் பகுதிக்கு பயணித்த லொறியின் சாரதி ஒருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தொற்றுக்குள்ளான குறித்த நபர் தெஹிவளை மத்திய சந்தைக் கட்டடத் தொகுதியில் மீன் விநியோக நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இந்நிலையில குறித்த மத்திய சந்தைக் கட்டடத் தொகுதியில் உள்ள ஊழியர்கள் அனைவரும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டு பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெஹிவளை பொதுச்சுகாதார பரிசோதகர் தெரிவித்துள்ளார். (ஙி-7)

# மரண வீட்டிற்கு சென்று வந்ததால் உறுப்பினர்களிடையே குழப்பம்



(கொழும்பு)

காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான சம்பத் அத்துகோரள, பலப்பிட்டிய பிரதேசத்தில் மரண வீடொன்றுக்கு சென்று, பாராளுமன்றத்துக்கு வந்துள்ளதால், நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே அச்சம் ஏற்பட்டுள்ளதாக, பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார, நேற்று பாராளுமன்றில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் இந்த மரண வீட்டுக்குச் சென்ற அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ள நிலையில், சம்பத் அத்துகோரள எம்.பி மாத்திரம் தனிமைப்படுத்தலுக்குச் செல்லாமல், நாடாளுமன்றத்துக்கு வருகை தந்துள்ளதாகவும் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து இந்த விடயம் தொடர்பில், சுகாதார பிரிவினரின் கவனத்துக்குக் கொண்டு வருவதாக சபாநாயகர் மகிந்த யாப்பா அபே வர்த்தன தெரிவித்துள்ளார். (ஙி-7)

# வீரவன்சவை தாக்க முற்பட்ட கெட்டகொட விசாரணை நடத்தப்படும்-சபாநாயகர்



(கொழும்பு)

அமைச்சர் விமல் வீரவன்சவை நாடாளுமன்றில் வைத்து நேற்று தாக்க முயற்சிக்கப்பட்டமை தொடர்பில் விசாரணை நடத்துமாறு சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன விடம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அமைச்சரை -தாக்கும் முயற்சி, நாடாளுமன்றத்தின் பாதுகாப்பை கேள்விக்கு உட்படுத்தியுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் ஜெயந்த கெட்டகொட, அமைச்சரைத் தாக்க முயன்றதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு பதில் வழங்கிய சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன, விசாரணை நடத்தப்படும் என்று தெரிவித்துள்ளார்.

20ஆவது திருத்தத்தின் இரட்டை குடியுரிமை விவகாரத்தில் கருத்து வேறுபாடு ஏற்பட்டதைத் தொடர்ந்து ஜெயந்த கெட்டகொட, விமல் வீரவன்சவைத் தாக்க முயன்றதாக செய்தி வெளியானது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ விடம், விமல் வீரவன்ச முறையிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# கை உயர்த்தும் பலருக்கு எதிர்காலம் இருக்காது

## 20 குறித்து இம்தியாஸ்



(கொழும்பு)

20ஆவது திருத்தச் சட்டத்திற்கு மனசாட்சிக்கு உட்பட்டு வாக்களிக்கும் சந்தர்ப்பத்தை அனைத்து எம்.பிக்களுக்கும் வழங்கினால் அரசாங்கத்தால் ஒருபோதும் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் இதனை நிறைவேற்ற முடியாதென ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை அரசியலமைப்பின் 20ஆவது திருத்தச்சட்டத்தின் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

20ஆவது திருத்தச் சட்டத்தால் நாட்டுக்கோ மக்களுக்கோ ஒன்றும் நடைபெறப் போவதில்லை.

பிரதமரின் அதிகாரமும் முழுமையாக நீக்கப்படும். பிரதமர் அதிகாரமற்றவராகுவார். அவரின் பிரபல்யத்தின் மூலம் தான் இந்த அரசாங்கம் அமைந்தது என்பதை தெளிவுபடுத்த வேண்டும்.

வெளிப்படையான வாக்களிப்பு காரணமாக அரசாங்கத்தில் உள்ள எவரும் எதிர்த்து வாக்களிக்கமாட்டார். ஆனால், 20 ஆவது திருத்தச் சட்டத்திற்கு கை உயர்த்தும் பலருக்கு எதிர்காலத்தில் பாதிப்பு ஏற்படும்.

இந்த அரசாங்கத்தை அதிகாரத்திற்கு கொண்டுவந்த தொழிற்சங்கங்கள், மதத் தலைவர்கள் கடுமையான எதிர்ப்பை வெளியிடுகின்றனர்.

மக்கள் கருத்துகளுக்கும் வாய்ப்பளிக்காது அவசர அவசரமாக இதனை நிறைவேற்ற முற்படுகின்றனர்.


நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட்-19 நெருக்கடிக்கு தீர்வு காணும் வகையிலேயே இந்தப் பாராளுமன்றம் இச் சந்தர்ப்பத்தில் கூடியிருக்க வேண்டும்.

புதிய அரசியலமைப்பை உருவாக்க விசேட குழுவொன்றை அமைத்துள்ள பின்புலத்தில் 20ஆவது திருத்தச் சட்டத்தை கொண்டு வருகின்றனர்.

நிறைவேற்று அதிகாரம், தேர்தல் முறை, மாகாண சபை முறைகள் மீள் மதிப்பீடு செய்யப்படும் என்றே தேர்தல் வாக்குறுதியாக கொடுத்தனர்.

ஆனால், தற்போது அனைத்து அதிகாரத்தையும் ஒருவரின் கீழ் கொண்டுவர முற்படுகின்றனர் என அவர் தெரிவித்தார். (ஜ-4)

# 20ல் இரட்டைப் பிரஜா உரிமை நீக்கப்படும் ஜனாதிபதியின் உறுதியினாலேயே அதற்கு ஆதரவு



(கொழும்பு)

புதிய அரசியலமைப்பு தொடர்பான முதற்கட்ட வரைபு எதிர்வரும் மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும். புதிய அரசியலமைப்பில் இரட்டை குடியுரிமை கொண்டவர்கள் அரசியலில் பங்குபற்றுவதற்கு தடை விதிக்கப்படும் என ஜனாதிபதி குறிப்பிட்டார். இவரது வாக்குறுதியினை அடிப்படையாகக்கொண்டு 20 ஆவது திருத்தத்துக்கு ஆதரவு வழங்க தீர்மானித்தோம் என லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

என்.எம். பெரேரா மத்திய நிலையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,


ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் இடம் பெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டம் தொடர்பில் தெளிவுபடுத்துவது அவசியமாகும்.

இரண்டாம் குடியரசு அரசியலமைப்பில் நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமை அறிமுகம் செய்யப்பட்டது. நிறைவேற்றதிகார முறைமையினால் பாராளுமன்றத்துக்கும், ஜனாதிபதிக்கும் இடையில் ஆரம்ப காலத்தில் இருந்து நெருக்கடி ஏற்பட்டது.

நல்லாட்சி அரசாங்கத்தில் நிறைவேற்றதிகாரம் மூன்றாக பிளவுபட்டது. இதன் காரணமாக நல்லாட்சி அரசாங்கம் பலவீனமடைந்தது. ஒரு தனி நபருக்கு அதிகாரங்கள் வரையறுக்கப்படாமல் வழங்குவது பொருத்தமற்றது என்பது லங்கா சமசமாஜக் கட்சியின் கொள்கையாகும். இதில் எவ்வித மாற்றமும் கிடையாது.

இரட்டைக் குடியுரிமை கொண்டவர்கள் அரசியலில் செல்வாக்கு செலுத்தக்கூடாது என்பதை ஒன்றிணைந்து சுட்டிக்காட்டினோம். அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தில் இரட்டை குடியுரிமை விவகார தடை கொண்டு வரப்பட்டது. 20 ஆவது திருத்தத்தில் இது நீக்கப்பட வேண்டும் என ஜனாதிபதி குறிப்பிட்டார். (ஜ-4)

# தேவைக்கு மாத்திரம் புகையிரத சேவை



(கொழும்பு)

அத்தியாவசிய தேவைக்காக மாத்திரம் புகையிரத சேவையினை பயன்படுத்துமாறு புகையிரத திணைக்களம் பயணிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இவ்விடயம் தொடர்பில் புகையிரத திணைக்கள பொது முகாமையாளர் டிலந்த பிரனாந்து குறிப்பிடுகையில்,

கொவிட்-19 வைரஸ் பரவல் தாக்கத்தின் காரணமாக புகையிரத சேவையினை பயன்படுத்தும் பயணிகளின் எண்ணிக்கை கடந்த வாரம் மிகக்குறைவான மட்டத்தில் காணப்பட்டது.

இதனைக் கருத்திற்கொண்டு அதிவேக புகையிரத சேவைகள் இதுவரையில் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் 10 புகையிரத சேவைகளின் நேர அட்டவணையை மாற்றியமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொவிட்-19 வைரஸ் பரவல் காரணமாக கம்பஹா மாவட்டத்துக்கு ஊரடங்கு சட்டம் முழுமையாக அமுல்பட்டது. இதனைத் தொடர்ந்து கொழும்பு மாவட்டத்தில் ஒரு சில பிரதேசங்களில் ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பொது மக்கள் புகையிரத சேவையினை அத்தியாவசிய தேவைக்காக மாத்திரம் பயன்படுத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. சுகாதார பாதுகாப்பு அறிவுறுத்தல்களை பின்பற்றாத பயணிகள் புகையிரத நிலையைப் பாதுகாப்பு அதிகாரிகளினால் புகையிரத நிலையத்தில் இருந்து வெளியேற்றப்படுவார்கள் என்றார். (ஐ-4)

# கைதிகளுக்கு சந்தர்ப்பம்

(கொழும்பு)

கைதிகளின் உள நலத்தைக் கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக, சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தமது குடும்பத்தினருடன் உரையாடுவதற்காக, கைதிகளுக்கு மூன்று நிமிடங்கள் வழங்கப்படும் என, சிறைச்சாலைகள் திணைக்களத்தின் கட்டுப்பாட்டு ஆணையாளர் சந்தன ஏக்கநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

சிறைச்சாலை அதிகாரியொருவரின் முன்பாக கைதிகள் தொலைபேசி அழைப்புக்களை மேற்கொள்ள முடியும்.

எதிர்வரும் இரண்டு மாதங்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்தை வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளோம்.

மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ள கைதிகளுக்கு இவ்வாறேனும் நிவாரணத்தை வழங்க எதிர்பார்த்துள்ளோம் என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ-4)

# சுவிஸ் தூதரக ஊழியருக்கு எதிராக குற்றப்பத்திரிகை

(கொழும்பு)

சுவிஸ் தூதரக ஊழியர் கார்னியா பெனிஸ்டர் பிரான்சிஸ்க்கு எதிராக சட்டமா அதிபரினால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இந்தக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குற்றப்புலனாய்வு அதிகாரிகளினால் தான் கடத்தப்பட்டதாக, கூறி போலியான ஆதாரங்களை உருவாக்கிய குற்றச்சாட்டில் சுவிஸ் தூதரக ஊழியர் கார்னியா பெனிஸ்டர் பிரான்சிஸ் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# இடைநிறுத்தம்

(கொழும்பு)

கொழும்பு மாவட்டத்தில் வாகன வருமான வரிப்பத்திரம் வழங்கும் நடவடிக்கை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

நேற்று முதல் எதிர்வரும் 29 ஆம் திகதி வரை குறித்த நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

மேல் மாகாண பிரதான செயலாளர் அலுவலகம் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், குறித்த காலப்பகுதியில் காலாவதியாகும் வாகன வருமான வரிப்பத்திரங்கள் எதிர்வரும் நவம்பர் 15 வரை செல்லுபடியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், குறித்த காலப்பகுதிக்காக தண்டப்பணம் அறவிடப்படமாட்டாதுஎனமேல்மாகாண பிரதான செயலாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.


இந்த நிலையில், www.motortraffic.wp.gov.lk எனும் இணையத்தளம் ஊடாக வாகன வருமான வரிப்பத்திரங்களை பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# கொரோனாவை அழிக்க முடியாது

## பிரிட்டன் விஞ்ஞானி அதிர்ச்சித் தகவல்

(லண்டன்)

கொரோனா வைரஸை அழிக்க முடியாது என்றும் அதன் பாதிப்பு எப்போதும் இருக்கும் என்றும் பிரிட்டனின் அரசு ஆலோசனைக் குழுவைச் சேர்ந்த விஞ்ஞானி தெரிவித்துள்ள கருத்து பரபரப்பைக் கிளப்பியுள்ளது.



கொரோனா தொற்று உலகின் 190 இற்கும் மேற்பட்ட நாடுகளைக் கடுமையாக பாதித்துள்ளது. கடந்த மார்ச் மாதம் முதல் பல்வேறு நாடுகளும் கொரோனாத் தொற்றுப் பாதிப்பிற்கு எதிராகப் போராடி வருகின்றன.

இந்நிலையில், பிரிட்டனின் அரசு ஆலோசனைக் குழுவின் விஞ்ஞானி ஜான் எட்மண்ட்ஸ் தெரிவித்துள்ள கருத்து அதிர்ச்சியைக் கிளப்பி உள்ளது.

“இந்த வைரஸுடன் நாம் எப்போதும் வாழ வேண்டி இருக்கும். இது ஒழிக்கப்பட வாய்ப்பில்லை” என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தடுப்பூசிகளை எதிர்காலத்தில் அதிகளவு பயன்படுத்த வாய்ப்பிருப்பதால், நாம் அவற்றை கவனமுடன் கையாள வேண்டும் என தெரிவித்துள்ள எட்மண்ட்ஸ் பிரிட்டன் கொரோனாத் தடுப்பூசி விவகாரத்தில் புத்திசாலித்தனமாக செயற்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

பிரிட்டன்இதுவரை 6 கொரோனாத் தடுப்பூசி விநியோக ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது.

பிரிட்டனில் இதுவரை 7 இலட்சத்து 89 ஆயிரத்து 229 பேருக்குக்கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# பிரதமருடன் கலந்துரையாடல்



(கொழும்பு)

சுபீட்சத்தின் நோக்கு வேலைத் திட்டத்தின் கீழ் இந்நாட்டின் பிரதான நகரங்களுக்கிடையிலான சுற்றுலா பயணிகளை ஊக்குவிக்கும் திட்டத்திற்கு அமைய நுவரெலியா மாவட்டத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடும் வகையிலான கூட்டம் நேற்று முன்தினம் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் பாராளுமன்றத்தில் இடம் பெற்றது.

குறித்த சந்திப்பின்போது நுவரெலியா பிரதேசம் மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை கவரும் சுற்றுலா நகரங்களாக மாற்றுவது தொடர்பில் பிரதமர் கவனம் செலுத்தினார்.

இதில் அமைச்சர் சி.பி.ரத்நாயக்க, இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ்.பி.திசாநாயக்க, நிமல் பியதிஸ்ஸ, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் சிறிநிமல் பெரேரா மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் பிரசாத் ரணவீர, பிரதி பணிப்பாளர் (நுவரெலியா மாவட்டம்) ரஞ்சித் பண்டார உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ஐ-4)

# 59 பேர் சுயதனிமையில்

(கொழும்பு)

பேலியகொட மீன்பிடிச் சந்தையுடன் தொடர்பிலிருந்த திருகோணமலை மாவட்டத்தினைச் சேர்ந்த 59 பேர் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்பட்டுள்ளனர்.

திருகோணமலையில் இருந்து மொத்த மீன் ஏற்றுமதியாளர்கள் கூடுதலாக பேலியகொட மீன் சந்தையுடனேயே வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டுவருவதாக தகவல் வெளியாகியிருந்தது.

இந்நிலையில் திருகோணமலையில் உள்ள ஒரு சில மீனவர்கள் அங்கு சென்று வருவதை அறிந்த பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள். அங்கு சென்றவர்களை தம்முடன் தொடர்புகொண்டு சுகாதார நடைமுறைகளுக்கு உட்படுமாறு அறிவுறுத்தியிருந்தனர்.

அதன் தொடராக திருகோணமலை மாவட்டத்தினைச் சேர்ந்த 59 பேர் சுகாதார உத்தியோகத்தர்களைத் தொடர்பு கொண்டு தம்மை அடையாளப் படுத்தியிருக்கின்றனர். (ஐ-4)

## பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

கொவிட்-19 நோய்த்தொற்று நிலைமை காரணமாக தேசிய கல்வி நிறுவக பட்டப் பின் கல்வி டிப்ளோமா பாடநெறி வகுப்புக்கள் யாழ்ப்பாண கற்றல் நிலையத்தில் மறு அறிவித்தல் வரை இடம்பெறமாட்டாது என யாழ்ப்பாண கற்கை நிலைய தேசிய கல்வி நிறுவக பட்டப் பின் கல்வி டிப்ளோமா பாடநெறி இணைப்பாளர் ந.தயாளன் அறிவித்துள்ளார். (5)

## பொதுக் கூட்டமும் நிர்வாக தெரிவும்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை, வராத்துப்பளை, வளர்மதி சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் நிர்வாக தெரிவும் அண்மையில் சனசமூக உத்தியோகத்தர் திருமதி. ப.ஜோகராஜாவின் பங்குபற்றலுடன் நடைபெற்றது.

இதில் தலைவராக அ.சுதாகரன், செயலாளராக பெ. பத்மநாதன், பொருளாளராக தி.நெவில்ஸன், உபதலைவராக வி. பிரியங்கா, உபசெயலாளராக ஜோ. செபஸ்ரின் ஆகியோரும் நிர்வாக உறுப்பினர்களாக ம.நவயுகன், கு.சுபாஜினி, இ. பரமேஸ்வரி, இ. மதுரா, யோ. தர்சன், வி.பிரதீபன் ஆகியோரும், கணக்காய்வாளராக செ.ஜெகமலரும் தெரிவு செய்யப்பட்டனர். (5)

## சந்தை கட்டடத் தொகுதியை திறக்க வியாபாரிகள் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

புதிய சந்தைக்கட்டடத்தொகுதியைத் திறந்து உடனடியாக வியாபாரம் செய்ய அனுமதிக்க வேண்டுமெனக் கோரியும், புதிய சந்தைக் கட்டடத் தொகுதிக்கான இட ஒதுக்கீடு முறையாக இல்லை எனத் தெரிவித்தும் மருதனார்மடம் சந்தை வியாபாரிகள் வலி. தெற்குப் பிரதேச சபைக்கு முன்பாக ஒன்று கூடினர்.

வலி. தெற்குப் பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற நிலையில் அமர்வு முடிவடைந்து சபையினர் வெளியேறிய போது மருதனார்மடம் சந்தை வியாபாரிகள் தமது எதிர்ப்பினைத் தெரிவித்தனர்.

இதுதொடர்பில் சந்தை வியாபாரிகள் தெரிவிக்கையில்,

மருதனார்மடம் சந்தையில் புதிய கடைத் தொகுதி அமைப்பதற்காக ஐந்தாண்டுகளுக்கு முன்னர் நாங்கள் வியாபாரம் செய்த இடங்களிலிருந்து தற்காலிக இடத்திற்கு எங்களை மாற்றினர்.

கடந்த 5 வருட காலமாக மழை காலங்களில் தற்காலிக கொட்டகையில் மிகுந்த கஷ்டங்களை அனுபவித்து வருகிறோம்.

எனவே எமக்கு உரிய வசதிகளைக் செய்யக்கோரி வியாபாரிகள் கோரிக்கை வைத்துள்ளனர். (5-18)

## பதிவு செய்தல்

(யாழ்ப்பாணம்)

வலி.கிழக்கு பிரதேச சபையின் புத்தூர் பொது நூலகத்தினர் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு புத்தூர் பிரதேச எல்லைக்குட்பட்ட பாடசாலைகளின் மாணவர்கள், முன்பள்ளிச் சிறார்கள் மற்றும் வாசகர்களுக்கிடையிலான பல்வேறு போட்டிகளை நடத்தவுள்ளனர். அதற்கான போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் மாண வர்கள் முன்பள்ளிச் சிறார்கள் மற்றும் வாசகர்கள் எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் நூலகத்தில் பதிவு செய்யுமாறு புத்தூர் பொதுநூலக நூலகர் அறிவித்துள்ளார். (5)

## விஜயதசமியில் நாள் வகுப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள இளங்கலைஞர் மன்றத்தின் விஜயதசமி பூசை நிகழ்வை தொடர்ந்து இலவசமாக நடத்தப்படும் சங்கீதம், நடனம், வயலின்,வீணை, மிருதங்கம் ஆகிய வகுப்புக்களுக்கு மாணவர்களை புதிதாக சேர்த்துக் கொள்ளும் நிகழ்வு நாளை மறுதினம் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு நடைபெறவுள்ளது.

மேலதிக தகவல்களை இளங்கலைஞர் மன்றத்தில் பெற்றுக் கொள்ள முடியும். சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக வருகை தருமாறு மன்றத்தினர் அறிவித்துள்ளனர். (5)

## நீர் வெட்டு பற்றிய அறிவித்தல்


(யாழ்ப்பாணம்)

"தற்போது கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவும் கடும் வரட்சி காரணமாக நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினரின் நீர் பெறப்படும் வளங்களில் அதிகளவு வேறுபாடுகள் காணப்படுவதனால் அந்நீரினை சுத்திகரிப்பதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இந்நிலைமை காரணமாக சுத்திகரிக்கப்பட்ட நீருக்கு பெரும் பற்றாக்குறை நிலவு வதனால் பாவனையாளர்கள் நீரினை வீண்விரயம் செய்யாது மிகவும் சிக்கனமாகப் பயன்படுத்தும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

அத்தோடு நாளை சனிக்கிழமை முதல் இரண்டு நாட்களிற்கு ஒரு தடவை என்ற சுழற்சி முறையில் நீர் விநியோகம் இடம்பெறும் என்பதனை அறியத் தருவதோடு மேலும் எதிர்பாராத விதமாக முன்னறிவித்தலின்றி நீர் விநியோகத்தடை ஏற்பட சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன.

மேலும் பாவனையாளர்கள் நீரினை கொதிக்க வைத்து பாவனைக்குட்படுத்துமாறும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை பிராந்திய முகாமையாளர் (யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு) அறிவித்துள்ளார். (5-4)

## கழிவு வாய்க்காலை துப்புரவு செய்யக் கோரிக்கை



(குருமன்காடு)

வவுனியா, புதிய பேருந்து நிலையம் முன்பாக உள்ள கழிவு வாய்க்காலில் கழிவு நீர் வழிந்தோடாது தேங்கி நிற்பதுடன், குறித்த கழிவு வாய்க்காலில் வெற்றுப் பிளாஸ்ரிக் போத்தல்கள், பொலித்தீன் பைகள் என்பனவும் நீண்ட நாட்களாக அகற்றப்படாது பரவலாக காணப்படுகின்றன.

இதன்காரணமாக அப்பகுதியில் நுளம்புகளின் பெருக்கம் அதிகமாகவுள்ளதாகவும், டெங்கு நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் மக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

தினமும் பல நூற்றுக்கணக்கானவர்கள் வந்து செல்லும் இடம் இவ்வாறு காணப்படுகின்றமை குறித்து பலரும் விசனம் தெரிவித்துள்ளனர்.

சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (5-4-250)

## கொரோனாவிலிருந்து விடுதலை பெற ஒன்றிணைந்து செபிப்போம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு ஆயர் மன்றத்தின் ஏற்பாட்டில் "உலகனைத்தும் கொரோனா நோயிலிருந்து விடுதலை பெற ஒன்றாக இணைந்து செபிப்போம்" நிகழ்வு நேரலையாக ஒளிபரப்பு செய்யப்படவுள்ளது.

இவ் ஒளிபரப்பானது யாழ். ஆயர் இல்ல சிற்றாலயத்தில் இருந்து நாளை 24 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்கு ஆயர் தலைமையிலான சிறப்பு திருப்பலியும் மாலை 6 மணிக்கு திருச்செபமாலையும் நற்கருணை ஆராதனையும் ஆசீர்வாதமும் நேரடியாக ஒளிபரப்பு செய்யப்படும்.

எனவே அனைத்து தமிழ் மறைமாவட்ட இறை மக்கள் அனைவரும் உங்கள் இல்லங்களில் இருந்தவாறே இந் நாளை செபநாளாக அனுசரித்து மரியன்னையின் பரிந்துரையையும் இறையருளையும் மன்றாடுங்கள் என யாழ். ஆயர் இல்ல குரு முதல்வர் வேண்டுகோள் விடுத்துள்ளார். இந் நிகழ்வுகள் ஹோலி மேரி, இறை ஒளி மற்றும் யாழ். கத்தோலிக்க ஊடகம் ஆகிய வற்றின் ஊடாக நேரடி ஒளிபரப்பு செய்யப்படும். (5)

## வாசிப்பு மாத போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரி நகராட்சி மன்ற எல்லைக்குள் வசிக்கின்றவர்கள் மத்தியில் சாவகச்சேரி பொதுநூலகம் பல்வேறு வகையான போட்டிகளை நடத்தவுள்ளது.

அந்தவகையில், முன்பள்ளி மற்றும் தரம் ஒன்று சிறார்களுக்கான கதை, பாட்டுப் போட்டி, கட்டுரைப் போட்டி, சிங்கள மற்றும் தமிழ் மொழியிலான மொழியறிவுப்போட்டி, சுயமாக கவிதைப் போட்டி மற்றும் பாடசாலை விடுமுறைக் காலத்தை வீட்டுக்கும், நாட்டுக்கும் பயனுள்ளதாக்குவோம் எனும் தலைப்பில் சிறுகதைப்போட்டி ஆகிய போட்டிகளை நடத்தப்படவுள்ளது.

குறித்த போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர் எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன்னர் சாவகச்சேரி பொது நூலகத்தினைத் தொடர்பு கொள்ளுமாறு நூலகர் தெரிவித்துள்ளார்.

(5-4-30)

## சட்டவிரோத கட்டடங்கள்; நடவடிக்கை எடுக்காத திணைக்களங்கள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரப்பகுதியில் எதுவிதமான அனுமதிகளும் இன்றிக் கட்டப்படும் சட்டவிரோதக் கட்டடங்கள் தொடர்பாக தெரியப்படுத்தியும் இதுவரை எந்தவிதமான முன்னேற்றமும் ஏற்படவில்லை என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் ம.நடனதேவன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் பல இடங்களில் எதுவித அனுமதியும் இன்றி சட்டவிரோத முறையில் கட்டடங்கள் எழுப்பப்படுகின்றன. இது தொடர்பாக உரிய திணைக்களங்களுக்கு தெரியப்படுத்தியும் எதுவித நடவடிக்கையும் இல்லை.

நகரசபை நிர்வாகத்தில் முறையிட்டும் நகரசபை அமர்வுகளில் இது தொடர்பாக பேசியும் முன்னேற்றம் ஏற்படவில்லை. சில சட்டவிரோத கட்டடங்கள் கட்டுவதற்கு தடை என கட்டடத்தின் முன்பக்கம் அறிவித்தல் ஒட்டப்பட்டும் உள்ளே கட்டடப் பணிகள் இடம்பெறுகின்றன.

இந்நிலையில் கட்டட அனுமதி கோரி பலர் நகரசபையிடம் விண்ணப்பிக்கின்ற போதிலும் அது தொடர்பாக உடனடியாக பரிசீலித்து அனுமதி வழங்கப்படுவதில்லை.

தமக்கு மேல் உள்ள திணைக் களங்களின் அனுமதி கிடைப்பதில் தாமதம் ஏற்படுவதாகக் கூறப்படுகிறது.

குறிப்பாக சாதாரண நிலைமையிலுள்ளவர்களுக்கு அனுமதிகள் உடனடியாக கிடைப்பதில்லை எனவும் அவர் தெரிவித்திருந்தார். (5-4-30)

# பூநகரிப் பிரதேச சபை பொதுச் சந்தைகள், கருவாட்டுக் கடைகள், இறைச்சிக்கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2021

கீழ்க்குறிப்பிடப்படும் பிரதேசசபை எல்லைப்பரப்பிற்குட்பட்ட இடங்களிற்கு உட்பட்ட பொதுச் சந்தைகள், கருவாட்டுக் கடைகள், இறைச்சிக்கடைகள் என்பன 2021 ஆம் ஆண்டிற்காக 01.01.2021 தொடக்கம் 31.12.2021 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு கேள்விகள் பொருத்தமான நபர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

- கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி : 23.10.2020 தொடக்கம் 05.11.2020 வரை
  காலம் மு.ப.8.30 - பி.ப 3.30 வரை
- கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி : 06.11.2020 மதியம் 12.00 மணி வரை
- கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி : 06.11.2020 பி.ப 12.30 மணி

**கேள்வி நிபந்தனைகள் :**

1. கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை தவிசாளர், பிரதேசசபை, பூநகரி எனும் முகவரிக்கு அரச முத்திரை இட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இடுதல் வேண்டும். இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி எனும் முகவரிக்கு 06.11.2020 ஆம் திகதி மதியம் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும்.
2. கேள்விப்பத்திரங்களினை பெற விரும்புபவர்கள் பிரதேச கிராம சேவையாளரின் வதிவிடச்சான்றிதழ் மற்றும் கிராம சேவையாளரினால் தேசிய அடையாள அட்டையினை உறுதிப்படுத்தி சமர்ப்பித்தல் வேண்டும்.
3. கேள்விப்பத்திரங்கள் பெற விரும்புபவர்கள் மீளளிக்கப்படாத படிவக்கட்டணம் மற்றும் மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணத்தினையும் செலுத்த வேண்டும்.
4. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுநராக கணிக்கப்பட்ட எவரிற்கும் படிவம் வழங்கப்பட மாட்டாது.
5. கேள்விகள் திறந்து பரிசீலிக்கும் நாளன்று கேள்வியாளரோ அல்லது அவரின் பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
6. கேள்வி நிபந்தனைகள் அறிவுறுத்தலிற்கு அமையாத கேள்விக்கோரிக்கைகளினை நிராகரிக்கின்ற அதிகாரம் கேள்விச்சபைத் தலைவரிற்கு உண்டு.
7. இறைச்சிக்கடைகள் குத்தகைக்கு எடுப்பவராலேயே நடாத்தப்படவேண்டும். குத்தகைக்கு எடுத்தவர் இன்றி அவர் சார்பாக வேறு ஒருவரால் நடாத்தப்படின் குத்தகை ஒப்பந்தம் இரத்துச் செய்யப்படும்.
8. அரச கால்நடை வைத்திய நிலையத்தால் காதில் பட்டியிடப்பட்ட மாடுகள் மட்டும் வெட்ட அனுமதிக்கப்படும்.
9. எம்மால் அமைக்கப்பட்டுள்ள கொல்களத்திலேயே இறைச்சிக்கான மாடுகள் வெட்டப்படவேண்டும்.
10. இறைச்சிக்காக மாடுகள் வெட்டப்படமுன்னர் எம்மால் குறித்துரைக்கப்படும் சட்ட திட்டங்களிற்கமைவாக நடந்து கொள்ள வேண்டும்.
11. தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் கேள்வித்தொகையின் மூன்றில் ஒரு பங்கினை 11.11.2020 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையோடு ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ள வேண்டும்.
12. பெறுகைக்குழு கேள்வியை ஏற்றுக்கொள்வது அல்லது பகுதியாக ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது பெறுகைக்குழுவின் அதிகாரத்திற்குட்பட்டது ஆகும். கேள்விக்குட்படுத்தலாகாது.

**2021ஆம் ஆண்டுக்கான பொதுச் சந்தைகள் , கருவாட்டுக் கடைகள், இறைச்சிக் கடைகளிற்கான கேள்வி கோரல்**

| தொ.இல | விடயம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்விக் கட்டணம் | ஏற்றுக் கொள்ளப்படும் ஆகக்குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| பொதுச்சந்தைகள் | | | | |
| பூநகரி உப அலுவலகம் | | | | |
| 1 | வாடியடி | 500.00 | 5000.00 | 38500.00 |
| 2 | முட்கொம்பன் | 500.00 | 3000.00 | 22110.00 |
| பல்லவராயன்கட்டு உப அலுவலகம் | | | | |
| 1 | ஜெயபுரம் | 500.00 | 5000.00 | 66000.00 |
| 2 | கிராஞ்சி | 500.00 | 3000.00 | 44000.00 |
| 3 | வலைப்பாடு | 500.00 | 3000.00 | 16500.00 |
| 4 | 19 ஆம் கட்டை | 500.00 | 3000.00 | 38500.00 |
| இரணைதீவு உப அலுவலகம் | | | | |
| 1 | நாச்சிக்குடா கடற்கரை | 500.00 | 3000.00 | 16500.00 |
| 2 | நாச்சிக்குடா சந்தி | 1000.00 | 8500.00 | 421788.00 |
| மாட்டிறைச்சிக் கடைகள் | | | | |
| பூநகரி உப அலுவலகம் | | | | |
| 1 | வாடியடி | 1000.00 | 8000.00 | 45100.00 |
| 2 | பள்ளிக்குடா | 1000.00 | 8500.00 | 363550.00 |
| பல்லவராயன்கட்டு உப அலுவலகம் | | | | |
| 1 | ஜெயபுரம் | 1000.00 | 8000.00 | 27500.00 |
| 2 | கிராஞ்சி | 1000.00 | 3000.00 | 60500.00 |
| 3 | 19 ம் கட்டை | 1000.00 | 5000.00 | 330000.00 |
| 4 | வலைப்பாடு | 1000.00 | 5000.00 | 132000.00 |
| இரணைதீவு உப அலுவலகம் | | | | |
| 1 | நாச்சிக்குடா கடற்கரை | 1000.00 | 10500.00 | 632500.00 |
| 2 | நாச்சிக்குடா சந்தி | 1000.00 | 10500.00 | 581900.00 |
| கோழியிறைச்சிக் கடைகள் | | | | |
| பூநகரி உப அலுவலகம் | | | | |
| 1 | வாடியடி | 500.00 | 3000.00 | 138600.00 |
| 2 | பள்ளிக்குடா | 1000.00 | 3000.00 | 17600.00 |
| பல்லவராயன்கட்டு உப அலுவலகம் | | | | |
| 1 | ஜெயபுரம் | 500.00 | 3000.00 | 8910.00 |
| 2 | கிராஞ்சி | 500.00 | 3000.00 | 5610.00 |
| 3 | வலைப்பாடு | 500.00 | 3000.00 | 11110.00 |
| இரணைதீவு உப அலுவலகம் | | | | |
| 1 | நாச்சிக்குடா சந்தி | 500.00 | 3000.00 | 342200.00 |
| ஆட்டிறைச்சிக்கடை | | | | |
| பூநகரி உப அலுவலகம் | | | | |
| 1 | வாடியடி | 500.00 | 3000.00 | 5500.00 |
| 2 | பள்ளிக்குடா | 500.00 | 3000.00 | 5500.00 |
| பல்லவராயன்கட்டு உப அலுவலகம் | | | | |
| 1 | கிராஞ்சி | 500.00 | 3000.00 | 5500.00 |
| 2 | ஜெயபுரம் | 500.00 | 3000.00 | 5500.00 |
| இரணைதீவு உப அலுவலகம் | | | | |
| 1 | நாச்சிக்குடா சந்தி | 500.00 | 3000.00 | 4950.00 |
| கருவாட்டுக்கடை | | | | |
| பூநகரி உப அலுவலகம் | | | | |
| 1 | வாடியடி | 500.00 | 3000.00 | 11000.00 |
| 2 | பள்ளிக்குடா | 500.00 | 3000.00 | 11000.00 |
| பல்லவராயன்கட்டு உப அலுவலகம் | | | | |
| 1 | கிராஞ்சி | 500.00 | 3000.00 | 11000.00 |
| இரணைதீவு உப அலுவலகம் | | | | |
| 1 | நாச்சிக்குடா சந்தி இல - 01 | 500.00 | 3000.00 | 11000.00 |
| 2 | நாச்சிக்குடா சந்தி இல - 02 | 500.00 | 3000.00 | 9900.00 |

(C-566)

**அருணாசலம் ஐயம்பிள்ளை, தவிசாளர், பிரதேச சபை, பூநகரி**

# பணம் மோசடி; ஒருவர் கைது

(களுவாஞ்சிக்குடி)

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி பிரதேசத்தில் உள்ள வங்கி ஒன்றில் ஏ.ரி.எம். இயந்திரத்தின் மூலம் பணம் எடுக்க வந்தவர்களுக்கு அதனை பயன்படுத்தி பணம் எடுக்க தெரியாததையடுத்து அவர்களுக்கு உதவி செய்வது போல் அவர்களின் ஏ.ரி.எம்.காட்டை கொண்டு பண மோசடி செய்து வந்த காத்தான்குடி பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரை போலி ஏ.ரி.எம். காட்டுடன் நேற்று வியாழக்கிழமை கைது செய்துள்ளதாக களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பிரதேசத்தில் உள்ள ஒருவர் அங்குள்ள வங்கியின் ஏ.ரி.எம். காட் மூலம் பணம் பெறச் சென்றுள்ளார். அவருக்கு ஏ.ரி.எம். இயக்கி பணம் தெரியாத நிலையில் அங்கு நின்ற குறித்த நபர் அவருக்கு உதவுவது போல அவரின் ஏ.ரி.எம். காட் மூலம் ஏ.ரி.எம். இயந்திரத்தில் 4 ஆயிரம் ரூபா பணத்தைப் பெற்றுக் கொண்டு சென்றுள்ளார்.

இந்த நிலையில் அவரின் வங்கியில் இருந்த ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபா பணம் மாயமாகியுள்ளது.

இதனையடுத்து அவர் வங்கிக்குச் சென்ற போது அவர் வங்கியின் ஏ.ரி.எம். இயந்திரம் ஊடாக காத்தான்குடியில் பணம் எடுக்கப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது.

இதனையடுத்து அவர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு. செய்ததையடுத்து பொலிஸார் காத்தான்குடிப் பிரதேசத்திலுள்ள வங்கி ஏ.ரி.எம். இயந்திரத்திலுள்ள பணத்தை மோசடி செய்தவரை சி.சி.டி.வி. கமராவில் கண்டுபிடித்து கைது செய்தனர். (ஐ-4)

# பேலியகொட மீன் சந்தையில் இருந்து 863 பேர் தனிமைப்படுத்தலில்

(கொழும்பு)



பேலியகொட மீன் சந்தையிலிருந்து 863 பேர் தனிமைப்படுத்தலுக்காக அனுப்பி வைக்கப்பட்டதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார்.

கொரோனா நோயாளிகள் சிலருடன் தொடர்பு வைத்திருந்ததாக சுகாதார அதிகாரிகளால் அடையாளம் காணப்பட்டவர்களே இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டனர்.

இதன்படி தியத்தலாவ தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு 180 பேரும் குண்டசாலை தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு 150 பேரும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் மட்டக்களப்பு பல்கலைக்கழக தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு 192 பேரும் முல்லைத்தீவு தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு 146 பேரும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

அதேநேரம், எஸ்.எல்.ஏ.எப். பலாலி தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு 85 பேரும் பெரியகாடு தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு 110 பேரும் இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார். (நி-7)

# இடைநிறுத்தம்

(கொழும்பு)

வெளிநாடுகளுக்கு இடையிலான தூதரக சேவைகளைத் தற்காலிகமாக இடைநிறுத்த வெளிவிவகார அமைச்சு தீர்மானித்துள்ளதாக தெரிவித்துள்ளது.

மறு அறிவித்தல் வரும் வரையில் இந்த அறிவிப்பு அமுலில் இருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் தற்போதைய சூழ் நிலையை கருத்திற் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

**விஜயதசமி நாள் வகுப்பு**

**கம்சப்பிரியா இசைக்கல்லூரி**

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (25.10.2020) மாலை 4.30-6.30 காலப்பகுதியில் புதிய வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படும். (புதிய மாணவர்கள் இணைந்து கொள்ளலாம்). வீணை, வயலின், புல்லாங்குழல், ஹார்மோனியம், ஓர்கன், வாய்ப்பாட்டு, கிற்றார் போன்றவை.

இல.30, கிருஷ்ணபிள்ளை வீதி, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.

(4437)

# தகவல்கள் சேகரிக்கும் சுகாதாரப் பகுதியினர்

(நெளுக்குளம்)

வவுனியாவில் கொரோனாத் தொற்றாளர்கள் சென்ற வியாபார நிலையங்கள் மூடப்பட்டுள்ளன.

வவுனியா நெடுங்கேணியில் வீதி அபிவிருத்தி பணியில் ஈடுபட்ட வெளி மாவட்டத்தை சேர்ந்த மூவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.

அவர்கள் பயணித்ததாக தெரிவிக்கப்படும் வேப்பங்குளம் பகுதியில் அமைந்துள்ள ஹாட்வெயார் கடை, பழைய பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள புத்தகக்கடை மற்றும் மரக்காலை என்பன தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

தொற்று ஏற்பட்டவர்களுடன் தொடர்புகளை பேணிய ஏனைய ஊழியர்களிற்கு நேற்று பி.சி.ஆர்.பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. அவர்களுடன் நெருங்கிப் பழகியவர்கள் தொடர்பான தகவல்களும் சுகாதார பிரிவினரால் சேகரிக்கப்பட்டு வருகின்றது.(5-4-299)

# டிப்பர்-சைக்கிள் விபத்து; ஒருவர் படுகாயம்

(தருமபுரம்)

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நெத்தலியாறு இராணுவ காவலர் அருகாமையில் நேற்று பரந்தனில் இருந்து புதுக்குடியிருப்பு நோக்கி சென்ற டிப்பர் வாகனமும் அதே திசையில் சென்ற துவிச்சக்கரவண்டியை மோதியதில் விபத்து இடம் பெற்றது.

இவ்விபத்தில் புன்னை நீராவி கண்ணகி நகர்ப்பகுதியைச் சேர்ந்த பா.சுதர்ஷன் (வயது 36) என்பவரே காயமடைந்தார்.

காயமடைந்த அவர் தருமபுரம் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

பின்னர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டார்.

இவ் விபத்து தொடர்பாக புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்க் கொண்டனர். (5-4-316)



வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் அமைக்கப்பட்ட மருந்து ஆய்வு கூடம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. ஆய்வு கூடத்தினை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் மு.மகேந்திரன் திறந்து வைத்தார். (படம்: வசந்தரூபன்)

# மேலும் இருவருக்கு கொரோனாத் தொற்று

(வவுனியா)

வவுனியா வடக்கு, நெடுங்கேணி பகுதியில் வீதி அபிவிருத்தி நடவடிக்கையில் ஈடுபட்ட மேலும் இருவருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொண்டவர்களில் 25 பேரின் முடிவுகள் நேற்று முன்தினம் வெளியாகியிருந்தன. அதில் மூவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது. இந்நிலையில் மேலும் இருவரின் பி.சி.ஆர்.முடிவுகள் நேற்று மதியம் வெளியாகின. அதில் இருவருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதியாகியுள்ளது.

நெடுங்கேணி பகுதியில் வீதித் திருத்தப் பணியில் ஈடுபட்டிருந்த வெளிமாவட்டத்தைச் சேர்ந்த இரு தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கே இவ்வாறு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், வவுனியா வடக்கு நெடுங்கேணியில் வீதி அபிவிருத்திப் பணியில் ஈடுபட்டவர்களில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 5 ஆக உயர்வடைந்துள்ளது. (5-4-250)

# 30 பேருக்கு பி.சி.ஆர். எவருக்கும் தொற்றில்லை

(முறிகண்டி)

கிளிநொச்சியில் தங்கியிருந்த 30 பேரினது மாதிரிகள் பி.சி.ஆர்.பரிசோதனைக்குட்படுத்தப்பட்டதில் தொற்று இல்லை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை அதிகாரி தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் வீதி அபிவிருத்தி பணிகளுக்காக வருகை தந்திருந்த வெளி மாவட்டத்தை சேர்ந்த 30 பேருக்கு முதல் கட்டமாக இவ்வாறு பரிசோதனை இடம்பெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தருமபுரத்தில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தி நிறுவனத்தில் தொழிலின் நிமித்தம் வருகை தந்து தங்கியுள்ள 30 பேருக்கே இவ்வாறு கடந்த திங்கட்கிழமை மாதிரிகள் பெற்றுக்கொள்ளப்பட்டு பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டன.

இதேவேளை மேலும் சில ஒப்பந்த நிறுவனங்களில் இவ்வாறு வெளிமாவட்டங்களிலிருந்து வருகை தந்துள்ளவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், அவர்கள் தொடர்பிலான தகவல்கள் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினால் திரட்டப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

வெளி மாவட்டங்களிலிருந்து கிளிநொச்சி மாவட்டத்தில் தங்கியுள்ள அனைவரும் தம்மை பற்றிய தகவல்களை சுகாதார சேவைகள் பணிமனைக்கு கிடைக்கக் கூடிய வகையில் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

அவ்வாறு இதுவரை தகவல்கள் வழங்காது இருப்போர் நேரடியாக சுகாதார சேவைகள் பணிமனையுடன் தொடர்பு கொள்ள முடியும் எனவும் அல்லது பிரதேசத்திற்கு பொறுப்பான சுகாதார பரிசோதகர், கிராம உத்தியோகத்தர்களுக்கு தகவலை வழங்கி பாதுகாப்பினை உறுதிப்படுத்திக் கொள்ள முன்வர வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு வெளிப்படைத் தன்மையாக நடந்து கொள்ளும் சந்தர்ப்பத்தில் கொரோனா தொற்றிலிருந்து எம்மையும், ஏனைய மக்களையும் பாதுகாத்துக்கொள்ள முடியும்எனவே அனைவரும் பொறுப்புடன் செயற்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.(5-4-100)

# ஆழ்துளைக் கிணறு அமைப்பதற்கு மக்கள் எதிர்ப்பு

(நெளுக்குளம்)

வவுனியா ஜேசுபுரம் பகுதியில் ஆழ்துளைக் கிணறு அமைக்கும் செயற்பாடு பொது மக்களின் எதிர்ப்பினால் இடை நிறுத்தப்பட்டுள்ளது.

வவுனியா ஜேசுபுரம் பகுதியில் உள்ள தனியார் காணியொன்றில் அநுராதபுரத்திலிருந்து வருகை தந்ததாக தெரிவிக்கப்படும் நீர்ப்பாசன திணைக்கள ஊழியர்கள் ஆழ் துளைக் கிணறு அமைக்கும் செயற்பாட்டை முன்னெடுப்பதற்காக இயந்திரங்கள் மற்றும் குழாய்களை நேற்று முன்தினம் கொண்டு வந்திருந்தனர். அத்துடன் நேற்றுக்காலை குறித்த பகுதியில் உள்ள காணியில் குழாய் அமைக்கும் பணியினை செயற்படுத்த முனைந்த போது அப்பகுதி மக்களால்




அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே நிலத்தடி நீர் குறைந்து செல்லும் நிலையில் இவ்வாறான பாரியளவிலான, குழாய்களை அமைப்பதற்கு நாம் அனுமதி வழங்கமாட்டோம் என்று அப்பகுதி மக்கள் தெரிவித்ததுடன், நீர் உறிஞ்சுவது நீரா? எம் உயிரா?, விவசாயிகளின் இரத்தத்தை உறிஞ்சாதே போன்ற பதாகைகளையும் ஏந்தியிருந்தனர்.

சம்பவ இடத்திற்கு பிரதேச சபை உறுப்பினர்களான கார்தீபன், உத்தரியநாதன் மற்றும் பாராளுமன்ற உறுப் பினர் சார்ள்ஸ் நிர்மலநாதனின் இணைப்பாளர் அலைக்ஸ், ரெலோவின் முக் கியஸ்தர் நாகராஜன் ஆகியோர் சென்று மக்களுடன் கலந்துரையாடியதுடன் இதனை நிறுத்துவதற்கான செயற்பாடுகளையும் முன்னெடுத்தனர். எனினும் ஆழ்துளைக் கிணறு அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படாத நிலையில் அவ் வாகனங்கள் அவ்விடத்திலேயே தற்போதும் தரித்து நிற்கின்றமை குறிப்பிடத்தக்கது. (5-4-299)

# அனுமதியின்றி மணல் அகழ்வு உழவு இயந்திரங்களுடன் ஐவர் கைது



(மன்னார்)

மாந்தை மேற்கு பிரதேசச் செயலாளர் பிரிவில் உள்ள கூராய் பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி சட்டவிரோதமாக ஆற்றில் மணல் அகழ்ந்து உழவு இயந்திரத்தில் ஏற்றிக் கொண்டு செல்லத் தயாராக இருந்த நிலையில் ஐந்து உழவு இயந்திரங்களுடன் 5 பேரை மன்னார் மாவட்ட குற்றப் புலனாய்வுத் துறையினர் கைது செய்துள்ளனர்.

மன்னார் மாவட்ட குற்றப் புலனாய்வுத் துறையினருக்கு கிடைத்த தகவலுக்கு அமைவாக நேற்று முன்தினம் மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பண்டுள்ள வீரசிங்கவின் பணிப்பில் மன்னார் மாவட்ட குற்றத்தடுப்பு புலனாய்வுப் பிரிவின் உப பொலிஸ் பரிசோதகர் சஞ்சீவ ராஜபக்ஷ தலைமையிலான பொலிஸ் குழுவினர் 5 சந்தேக நபர்களைக் கைது செய்ததுடன் 5 உழவியந்திரங்களையும் கைப்பற்றினர்.

இவ் விடயம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்காக சந்தேக நபர்கள் இலுப்பக்கடவை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (5-4-285)

## இராசிபலன்

23.10.2020
ஐப்பசி 07, வெள்ளிக்கிழமை
சப்தமி பிற்பகல் 12.54 மணிவரை
பூராடம் முற்பகல் 7.10 மணிவரை
சுபநேரம் 6.02-7.32 மணிவரை
இராகுகாலம் 10.32-12.02 மணிவரை
சந்திராஷ்டமம் - மிருகசீரிடம் வளவன்


மேஷம்

செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், புதிய முயற்சிகள் கைகூடும்


ரிஷபம்

மனக்குழப்பம் அகன்று மதிப்பும் மரியாதையும் உயரும், அதிகம் செலவாகும் என நினைத்த காரியம் குறைந்த செலவில் முடிவுக்கு வரலாம்.


மிதுனம்

மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.


கடகம்

உறவினர்களின் வருகையால் கலகலப்பான சூழ்நிலை ஏற்படலாம், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், வருமானம் திருப்தி தரும்.


சிம்மம்

இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும், உடல்நலன் சீராகும், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், வழிபாட்டில் ஆர்வம் கூடும்.


கன்னி

தொழிலை விரிவுபடுத்த எடுத்த முயற்சிகள் கைகூடும், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம்.


துலாம்

பெற்றோர் மீது பிரியம் கூடும், நம்பி வந்தவர்களுக்கு உதவி செய்து மகிழ்வீர்கள், வருமானம் பெருக வழியமைத்து கொள்வீர்கள், பயணங்களால் பலனுண்டு.


விருச்சிகம்

பாராட்டும் புகழும் கூடும் நாள், ஆர்வமிக்க சிந்தனை மேலோங்கும் நாள், உடன் பிறப்புக்கள் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு.


தனுசு

தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், பூர்வீக சொத்துக்களால் ஆதாயமுண்டு.


மகரம்

வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், வருமானத்தை அதிகரிக்கும் வழியில் நாட்டம் காட்டுவீர்கள், பெரியோர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.


கும்பம்

தொழிலில் சில மாற்றங்களைச் செய்யும் எண்ணம் உருவாகும், காரிய அலைச்சல்கள் உருவாகும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.


மீனம்

அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக அமையும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

சிலரிடம் நீ உதவி கேட்டால் தான் உனக்கு உதவி செய்வார்கள்.

# றிசாத் மற்றும் பிரேம்லால் சிறையிலிருந்து சபைக்கு





(கொழும்பு)

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் றிசாத் பதியுதீன் மற்றும் மரண தண்டனைக்கைதியான பாராளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜயசேகர ஆகியோர் நேற்று பாராளுமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டனர். சிறைச்சாலை அதிகாரிகளால் நேற்று முற்பகல் அவர்கள் இருவரும் சபை அமர்வில் கலந்து கொள்வதற்காக அழைத்து வரப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## உயர்தரப் பரீட்சை எழுதும் இரு மாணவர்களுக்கு டெங்கு

(கொழும்பு)

நடைபெற்றுக் கொண்டிருக்கும் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் தோற்றி வந்த மாணவர்கள் இருவர், டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு, வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி கோட்டக் கல்வி அலுவலகப் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி தேசிய பாடசாலை மற்றும் ஓட்டமாவடி பாத்திமா மகளிர் மகா வித்தியாலய மாணவர்களே டெங்குக் காய்ச்சல் காரணமாக, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதில், ஓட்டமாவடி தேசிய பாடசாலை மாணவன் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் பரீட்சையை எதிர்நோக்கி வருவதோடு, இம்மாணவன் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில், அனைத்துப் பாடங்களிலும் 9ஏ பெறுபேறு பெற்று, சாதனை படைத்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## ஒருவர் படுகொலை

(கொழும்பு)

நபரொருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டுள்ள நிலையில், ராகமை பொதுச் சந்தை வளாகத்தில் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இரு நபர்களுக்கிடையிலான வாய்த்தகராறு நீண்டதில் அதில் ஒருவர் மற்றையவர் மீது கூரிய ஆயுதத்தால் தாக்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளதோடு, தாக்குதலில் படுகாயமடைந்த நபர் ராகமை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

மேற்படி நபர், கந்தானை பிரதேசத்தை சேர்ந்த 23 வயதுடைய இளைஞன் என தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், ராகமை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-4)

## ஒரு போத்தல் தண்ணீரை அருந்திய இருவருக்கு வழக்கு

(கொழும்பு)

கடமையிலிருந்த போது, தண்ணீர் பருகிய பொலிஸ் அதிகாரியொருவருக்கும் சிவில் பாதுகாப்பு பெண் அதிகாரியொருவருக்கும் எதிராக, சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்விருவரும் பாணந்துறை நீதிமன்ற வளாகத்தில் பாதுகாப்பு காவலரணில் கடமையிலிருந்துள்ளனர். அவ்விருவருக்கு எதிராகவும் தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் வழக்கு தொடரவும், ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும் பாணந்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் நடவடிக்கை எடுத்துள்ளார்.

குறித்த அதிகாரிகள் இருவரும் ஒரு போத்தல் தண்ணீரை பகிர்ந்து அருந்தியமையாலேயே இவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஜ-4)

## பிரதமரின் பாதுகாப்பு பிரிவினருக்கு கறுப்பு பூனைப் படையணி பயிற்சி

(கொழும்பு)



இந்தியாவில் நவீன தொழில்நுட்பத்துடன் இயங்கும் "பிளக் கெட் கொமாண்டோ" என்று அழைக்கப்படும், பயங்கரவாதத் தடுப்புப் பிரிவான என்.எஸ்.ஜி படையினர் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்புக்காக தெரிவுசெய்யப்பட்ட குழு ஒன்றுக்கு பயிற்சிகளை வழங்கியுள்ளனர்.

இந்திய என்.எஸ்.ஜியின் பணிப்பாளர் நாயகம் எஸ்.எஸ். தேஸ்வால் இந்த தகவலை படையின் 36ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வின் போது இதனைத் தெரிவித்துள்ளார்.

தமது படையினால் இலங்கைப் பிரதமரின் பாதுகாப்புக்காக 21பேர் பயிற்சியளிக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஜ-4)

# பாராளுமன்றத் தேர்தலில் வாக்கெண்ணல் எவ்வாறு நடைபெறுகிறது?

## (நீங்களும் அறிந்து கொள்ளுங்கள்)

17



கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்-எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

ஒரு விருப்பு, 2 விருப்புக்கள், 3 விருப்புக்கள் என்பவற்றிற்கு வெவ்வேறாக முதலாம் பொழிப்புப் பத்திரங்கள் தயாரிக்கப்படும்.

5) குறிப்பு- இப்படிவங்கள் எல்லா மாவட்டங்களுக்கும் பொதுவாக அச்சிடப்படுவதோடு போட்டியிடும் ஒரு கட்சியின் வேட்பாளர்கள் கொழும்பு மாவட்டத்தில் 22பேர் (அதிகூடிய எண்ணிக்கை) ஆகையால் அப்படிவங்களில் வேட்பாளரின் இலக்கங்கள் 22 வரையிருக்கும். யாழ்ப்பாண மாவட்டத்தில் போட்டியிடும் ஒரு கட்சியின் வேட்பாளர்கள் 10 பேர். எனவே அப் படிவங்களில் வேட்பாளர்களின் இலக்கங்கள் 11 இலிருந்து 22 வரையுள்ளவை வெட்டிவிடப்படும்.

6) பூர்த்திசெய்யப்பட்ட முதலாம் பொழிப்புப் பத்திரங்களில் அவற்றைத் தயாரித்தவர்கள், பரிசீலித்தவர்கள் மற்றும் தலைமை வாக்கெண்ணும் அலுவலர் ஆகியோர் கையொப்பங்கள் இடுவார்கள்.

**2 ஆம் பொழிப்புப் பத்திரம் அல்லது விருப்பு முடிவு அறிக்கையைத் தயாரித்தல் (CE/CO/PR/3) மற்றும் முகவர்களுக்கு விருப்பு முடிவுகளை வழங்குகின்ற (PE/4) படிவத்தை தயாரித்தல்.**

1. 1000 வாக்குச் சீட்டுகளின் விருப்புக்களின் சுருக்கக் குறிப்பீடான **(CE/CO/PR/2)** பொழிப்புப் பத்திரங்களுக்கு வரிசைக் கிரமத்திலான தொடர் இலக்கங்களை இட்டதன் பின்னர் ஒவ்வொரு முதலாம் பொழிப்புப் பத்திரத்திலும் அதாவது **(CE/CO/PR/2)** படிவத்திலும் காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு வேட்பாளரும் பெற்றுள்ள விருப்புக்களின் கூட்டு மொத்தத்தை **(CE/CO/PR/3)** 2 ஆம் பொழிப்புப் பத்திரத்தில் (அதற்கு ஏற்புடையதான முதலாம் பொழிப்புப் பத்திரத்துக்கான நிரலில் கீழ்) குறிப்பிடப்படும்.

2. இவ்விரண்டாம் பொழிப்புப் பத்திரம் அதாவது **CE/CO/PR/3** படிவம் ஒவ்வொரு கட்சியினதும்/சுயேட்சை குழுவினதும் ஒவ்வொரு வேட்பாளரும் பெற்றுக்கொண்ட மொத்த விருப்பு எண்ணிக்கையைக் காட்டுகின்ற முடிவு அறிக்கையாகும். ஆதலால் இப்படிவம் மிகச் சரியாக கவனமாகத் தயாரிக்கப்படும். முதலாம் பொழிப்புப் பத்திரங்களின் (அதாவது **CE/CO/PR/2** படிவங்களின்) இறுதி நிரலின் புள்ளி விபரங்களை இந்த **CE/CO/PR/3** படிவத்தில் பிரதி பண்ணுகின்றபோது முற்றுமுழுதாக சரியாகப் பிரதி பண்ணப்படுகின்றது.

3. இவ்வாறு பிரதி பண்ணுவதற்கு முன்னர் **CE/CO/PR/2** படிவத்தின் இறுதி நிரலில் புள்ளிவிபரங்களைக் கூட்டி அதன் பிழையற்ற தன்மை தொடர்பாக பிரதி பண்ணும் அலுவலர் சரிபார்த்துக் கொள்வார். **CE/CO/PR/3** படிவத்திற்கு ஒவ்வொரு **CE/CO/PR/2** படிவத்தினதும் புள்ளி விபரங்களை பிரதி பண்ணியதன் பின்னர் அந்தந்த நிரலில் உள்ள எண்ணிக்கையை மேலிருந்து கீழ் நோக்கிக்கூட்டி உரிய **CE/CO/PR/2** படிவத்திலுள்ள மொத்தத்தோடு சமப்படுகின்றதாவெனப் பரிசீலித்துப் பார்க்கப்படும்.

அதனை இருமுறை பரிசீலித்துப் பார்ப்பார். இதைவிட மேலும் இரண்டு அலுவலர்கள் இவ்வெண்ணிக்கைகளின் பிரதி பண்ணல்கள், கூட்டல்கள் என்பவற்றை முழுமையாகப் பரீட்சித்துப் பார்த்து அவை சரியானவையென உறுதிப்படுத்திக் கொள்வார்கள்.

4. இப்படிவத்தின் / பொழிப்புப் பத்திரத்தின் பிழையற்ற தன்மையை உறுதிப்படுத்திக் கொண்டு சாட்சிகளுக்காக உதவித் தெரிவத்தாட்சி அலுவலரொருவர் கையொப்பமிடுவதோடு அவை சரியானதென அத்தாட்சிப்படுத்துவதற்குத் தலைமை வாக்கெண்ணல் அலுவலரும் கையொப்பமிடுவார்.

5. இரண்டாம் **(CE/CO/PR/3)** பொழிப்புப் பத்திரம் வாக்கெண்ணல் நிலையத்தில் தலைமை வாக்கெண்ணல் அலுவலரால் தயார் செய்யப்பட்ட இறுதி அறிக்கையாததால் அதன் சாட்சியாக உரிய கட்சி முகவர்களிடமிருந்தும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலரொருவரிடமிருந்தும் கையொப்பங்கள் பெறப்படும். அச்சந்தர்ப்பத்தில் கட்சி முகவர்கள் எவரிருமில்லையெனில் அல்லது கையொப்பம் இடுவதை நிராகரிக்கும் போது அதுபற்றி குறியீடொன்று இடப்பட்டு உதவித் தெரிவத்தாட்சி அலுவலரொருவரும் தலைமை வாக்கெண்ணல் அலுவலரும் கையொப்பமிடுவார்.

6. உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்ற கட்சியின் / சுயேட்சைக் குழுவின் இரண்டாம் பொழிப்புப் படிவத்தை **(CE/CO/PR/3)** தயாரித்து முடித்த பின்னர் இப் படிவத்திலிருந்து அக் கட்சியின் ஒவ்வொரு வேட்பாளரும் பெற்ற விருப்புக்களை காட்டுகின்ற அறிக்கையான **PE/4** படிவத்தை நான்கு பிரதிகளில் தயாரித்துக் கொள்ளப்படும். அத்துடன் அதன் பிழையற்ற தன்மை இரு முறை வேறு இரு அலுவலர்களால் சரிபார்க்கப்படும். இவர்கள் மூவரும் அப்படிவத்தில் தங்கள் பெயர்களை எழுதி கையெழுத்து இடுவார்கள்.

7. அதன் பின் (ஒரு கட்சியின்) அம் முடிவுகள் **(CE/CO/PR/2, CE/CO/PR/3** மற்றும் (4 பிரதிகளில்) **PE/4** படிவங்கள்) பெறுபேறுகள் வெளியிடப்படும் நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.

8. பெறுபேறுகள் வெளியிடப்படும் நிலையம் இம் முடிவுகளின் **(CE/CO/PR/2, CE/CO/PR/3** மற்றும் (4 பிரதிகளில்) **PE/4** படிவங்கள்). பிழையற்ற தன்மையை சரிபார்த்த பின் **CE/CO/PR/2, CE/CO/PR/3** மற்றும் **PE/4** படிவத்தின் மூலப்பிரதியையும் அங்கு வைத்துக் கொண்டு **PE/4** படிவத்தின் ஏனைய பிரதிகளை வாக்கெண்ணல் நிலையத்திற்கு அனுப்பி வைப்பார். அப்பிரதிகளின் முதலாம் பிரதி உரிய கட்சியின் / சுயேட்சைக் குழுவின் முகவருக்கு வழங்கப்படும். இரண்டாம் பிரதி வாக்கெண்ணல் நிலையத்தில் காட்சிப்படுத்தப்படும். மூன்றாம் பிரதி தலைமை வாக்கெண்ணல் அலுவலரின் குறிப்பேட்டுடன் இணைக்கப்படும்.

9. பெறுபேறுகள் வெளியிடப்படும் நிலையத்திற்கு அறிக்கைகள் கையளிக்கப்பட்டதன் பின்னர் அது தொடர்பாக தலைமை வாக்கெண்ணல் அலுவலருக்கு சான்றிதழ் **(receipt)** ஒன்று கொடுக்கப்படும்.

10. அதன்பின்னர் அடுத்து கூடுதலான விருப்புக்களைப் பெற்றுக் கொண்ட கட்சியின் / சுயேட்சைக் குழுவின் வாக்குச்சீட்டுக்களின் விருப்புக்கள் எண்ணப்படும். இவ்வாறு தொடரொழுங்கில் போட்டியிடுகின்ற அனைத்து கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களின் முடிவுகள் **(CE/CO/PR/2, CE/CO/PR/3** மற்றும் (4 பிரதிகளில்) **PE/4** படிவங்கள்) பெறுபேறுகள் வெளியிடப்படும் நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.

அவர்கள் முன்னர் கூறியதுபோல் **PE/4** படிவத்தின் ஏனைய பிரதிகளை வாக்கெண்ணல் நிலையத்திற்கு அனுப்பி வைப்பார். அப்பிரதிகளின் முதலாம் பிரதி உரிய கட்சியின் / சுயேட்சைக் குழுவின் முகவருக்கு வழங்கப்படும். இரண்டாம் பிரதி வாக்கெண்ணல் நிலையத்தில் காட்சிப்படுத்தப்படும் மூன்றாம் பிரதி தலைமை வாக்கெண்ணல் அலுவலரின் குறிப்பேட்டுடன் இணைக்கப்படும்.

பெறுபேறுகள் வெளியிடப்படும் நிலையத்திற்கு அறிக்கைகள் கையளிக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அது தொடர்பாக தலைமை வாக்கெண்ணல் அலுவலருக்கு சான்றிதழ் **(receipt)** ஒன்று கொடுக்கப்படும். இவ்வாறு 3 ஆம் கட்ட வாக்கெண்ணல் முற்றுப்பெறும்.

11. இவ்வாறு ஒவ்வொரு வாக்கெண்ணும் நிலையத்திலுமிருந்தும் **(CE/CO/PR/2) (CE/CO/PR/3)** மற்றும் **(PE/4)** படிவங்கள் பெறுபேறுகள் வெளியிடப்படும் நிலையத்தில் கையளிக்கப்படும்.

12. 2020 தேர்தலில் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் வாக்கெண்ணும் நிலையங்களாக யாழில் 73 நிலையங்களும் கிளிநொச்சியில் 14 நிலையங்களும் மொத்தமாக 87 வாக்கெண்ணும் நிலையங்களும் இதைவிட 16 தபால்மூல வாக்கு எண்ணும் நிலையங்களும் அமைக்கப்பட்டிருந்தன. எனவே யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்திற்கான 103 வாக்கெண்ணும் நிலையத்திலுமிருந்தும் **(CE/CO/PR/2), (CE/CO/PR/3)** மற்றும் **(PE/4)** படிவங்கள் பெறுபேறுகள் வெளியிடப்படும் நிலையத்திற்கும் கிடைப்பெறும் போது அவை கணனிமயப்படுத்தப்பட்டு முடிவில் வெற்றிபெற்ற வேட்பாளர்களின் பெயர்கள் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும்.

**கேள்வி 29:-** விருப்பு வாக்குகள் மீள் பரிசீலனை செய்ய முடியாதா?

**பதில்:-**விருப்பு முடிவுகளை மீள் பரிசீலனை செய்யுமாறு கோரப்படுகின்ற சந்தர்ப்பங்களில் **(CE/CO/PR/1)** ஒப்புநோக்கல் பத்திரங்களின் விபரங்களை **CE/CO/PR/2** மற்றும் **CE/CO/PR/3** படிவங்களில் சரியாக உட்சேர்க்கப்பட்டுள்ளதாவெனப் பரிசீலிக்கப்படும். அப்போதும் வாக்கெண்ணல் முகவர்கள் திருப்தியடையாத சந்தர்ப்பங்களில் அது பற்றி தெரிவத்தாட்சி அலுவலர் தீர்மானிப்பார்.

மிகவும் கட்டமைப்பான, செப்பனான இவ் வாக்கெண்ணும் முறையில் ஒரு போதும் விருப்பு வாக்குகளின் எண்ணிக்கையை மாற்ற முடியாது. ஏதும் சில தவறுகள் ஏற்படலாம். ஆனால் பிழைகள் ஏற்படாது. தவறு என்பது தன்னை அறியாமல் நிகழ்வது. எதிர்பாராமல் நடைபெறுவது. பிழை என்பது அறிந்து அல்லது வலிந்து செய்வது. (முற்றும்)

# தமிழ் ஊடகத்துறை முன்னோடி ஆணல்ட் சதாசிவம்பிள்ளையின் இருநூற்றாண்டு

**இருநூற்றாண்டு கடந்து பல நூறு மாற்றங்களோடு வீறுநடை போட்டுக் கொண்டிருக்கும் தமிழ் பத்திரிகைத் துறையில் அதன் தொடக்கத்திற்கும் தொடர் வளர்ச்சிக்கும் முன்னோடியாகத் திகழ்ந்தவர்களுள் முதன்மையரான உதயதாரகைப் பத்திராதிபர் ஆணல்ட் சதாசிவம்பிள்ளை (1820-2020) அவர்களை அவரது இருநூறாவது ஆண்டில் நினைவுகூரத் தமிழ் ஊடக உலகு கடமைப்பட்டுள்ளது.**



இலங்கைத் தீவின் யாழ்ப்பாணத்தில் நவாலிப் பகுதியில் 1820 ஒக்டோபர் 11ஆம் திகதி அருணாசலம்-ஆனந்தப்பிள்ளை தம்பதியருக்கு ஏழாவது பிள்ளையாகப் பிறந்தார் சதாசிவம். அக்காலத்தில் மானிப்பாயில் சுப்பையரால் நடத்தப்பட்டு வந்த திண்ணைப்பள்ளியிலும் அமெரிக்க மறைபணியாளர்களால் நடத்தப்பட்ட ஆங்கிலப் பாடசாலையிலும் ஆரம்பக் கல்வியைப் பெற்றுப் பின்னர் யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை செமினறில் உயர்தரம் வரை கல்வி கற்றுப் புலமையாளர் ஆனார்.

இவர் தமது வாழ்நாளில் ஆசிரியர், தலைமை ஆசிரியர், போதனாசிரியர், விரிவுரையாளர், பேராசிரியர், மொழிபெயர்ப்பாளர், பதிப்பாசிரியர், பாடநூலாசிரியர், படைப்பிலக்கியவாதி, பாடசாலை முகாமைத்துவச் சபை அங்கத்தவர், தொழிற்சங்கவாதி எனப் பல தொழில் வாண்மைகளை அலங்கரித்தவர். இவ்வாறு பன்முக ஆளுமை கொண்ட ஆணல்ட் சதாசிவம்பிள்ளை அவர்கள் அக்காலத்துத் தமிழ்கூறும் நல்லுலகத்தினரால் 'உதயதாரகைப் பத்திராதிபர்' என்ற வகையில் "பத்திராதிபர்" எனும் அடைமொழிக்கு அழகுசேர்த்த ஓர் இதழியலாளராகவே நன்கு அறியப்பட்டிருந்தார்.

ஏறத்தாழ நாற்பது ஆண்டுகள் (1857-1896) தமிழின் முதலாவது பத்திரிகையான உதயதாரகையின் ஆசிரியராகப் பணியாற்றிய பெருமை அவரையே சாரும்.

### தமிழ் இதழியலுக்குச் செய்த பணிகள்

ஆணல்ட் சதாசிவம்பிள்ளை தமிழ் இதழியலுக்குக் காலத்தால் செய்த பணிகளை அக்காலத்தில் பிறரால் செய்யப்பட்ட பணிகளுடன் ஒப்பிட்டாய்வு செய்து அவற்றின் முன்னோடித் தன்மைகளை வரலாற்றெழுதியல் முறை மூலம் ஆவணப்படுத்தவேண்டியது காலத்தின் தேவையாகும். குறிப்பாக இவருக்கு முன்பு உதயதாரகையின் ஆசிரியர்களாகப் பணியாற்றிய கென்றி மார்ட்டீன் அப்புக்குட்டி, செத் பெய்சன், டானியேல் கரோல் விசுவநாதபிள்ளை ஆகியோரின் பணிகளில் நின்று சதாசிவம் பிள்ளையின் பணிகள் முக்கியத்துவமடைவதைக் குறிப்பிட்டாக வேண்டும். மேலும் தமிழ்நாட்டிலிருந்து வெளிவந்த முதல் தமிழ்ப் பத்திரிகையான தமிழ் மகஸின் (1831), அதனைத் தொடர்ந்து ராஜவிருத்திபோதினி (1833), சுவிசேஷ பிரவாகவிளக்கம் (1840), பாலதீபிகை (1840), ஜனசிநேகன் (1841), திராவிட தீபிகை (1847), நற்போதம் (1849), நேசத்தோழன் (1849) ஆகியனவற்றின் ஆசிரியர்களின் பணிகளும் கருத்திலெடுக்கப்பட வேண்டியுள்ளன.

மேலும் தமிழ்மொழி நவீனமயமாக்கல் செயற்பாட்டில் தமிழ் இதழியல் துறைக்கு இருந்த கடமைப்பாடுகள் எவ்வாறு சதாசிவம்பிள்ளையால் நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதும் அலசப்பட்டாக வேண்டும். அதற்காக அவர் காலத்து உதயதாரகையில் காணப்படும் மொழிசார் கூறுகள், மொழிசாராக் கூறுகள் தொகுக்கப்பட்டு அவை உள்ளடக்க அலசல் மற்றும் மொழியியல் அலசல் செய்யப்பட வேண்டும்.

தமிழ்மொழி நிலைப்பட்ட இதழியலின் பிரக்ஞைபூர்வமான ஆரம்பத்தையும் வளர்ச்சியையும் முடுக்கிவிட்ட உதயதாரகையில் சதாசிவம்பிள்ளை பிரதம ஆசிரியராக பணியமர்த்தப்பட்டதிலிருந்து பத்திரிகையில் பல புதிய விடயங்களைப் புகுத்த இவர் முனைந்து வெற்றிகண்டுள்ளார். பத்திரிகை வடிவமைப்பு, இதழியலுக்கான தமிழ் நடை, பிரசுர விடயங்களின் அகற்சி, கடித இதழியல் மற்றும் விவாதங்கள், படிம இதழியல், பத்திரிகைச் சுதேசமயமாக்கல் பண்பாட்டுமயமாக்கல் என அவை விலாவாரியாக எடுத்துரைக்கத் தகுந்தவையாக உள்ளன.

மேலும் வியாபாரப் போட்டிகளுக்கு மத்தியில் உதயதாரகையோடு சமகாலத்தில் தமிழில் வெளிவந்த பல பத்திரிகைகள் மத்தியில் உதயதாரகையை நின்று நிலைக்க, ஈடுகொடுத்து முன்செல்லக் கூடிய வகையில் அதைத் திறம்பட நடத்தவேண்டிய பொறுப்பை நன்கு உணர்ந்தவராய் உள்ளடக்கங்களின் வகைமைகளை, வாசகர் வட்டத்தை, விநியோக விஸ்தரிப்பை திறம்பட அதிகரித்திருப்பதையும் அறிந்து கொள்ள முடிகிறது.

இதழியலாளர்களுக்கே உரித்தான சமூகப் பொறுப்புணர்வு மிக்கவராய்த் தாம் சார்ந்த சமூக விடயங்களில் அக்கறைகொண்டு ஆணல்ட் செயற்பட்டுள்ள சந்தர்ப்பங்களையும் அறியமுடிகின்றது. தமிழ் அரசியற் பிரதிநிதிகளுடன் பணியாற்றுதல், தம் மக்களுக்கு அரசால் இழைக்கப்பட்ட அநீதிகளுக்காகக் குரல் கொடுத்தல், விவசாயம் மற்றும் வியாபாரம் ஆகியவை சந்திக்கும் பிரச்சினைகளை வெளியுலகிற்குக் கொண்டு வருதல் என அப்பணிகள் முன்மாதிரிகளுக்கானவை.

பத்தொன்பதாம் நூற்றாண்டிற்கான தமிழ் மொழியின் பன்முக வளர்ச்சிக்குப் பங்களிக்கும் வகையில் தமக்கான மொழிக்கொள்கையில் இயங்கி இத்துறைக்கூடாக இதழியல், விளம்பரம், அறிவியல், பரப்புரை, கண்டனம் என்பவற்றுக்கான தனித்துவத் தமிழ்நடை வகைகளையும் வளர்த்துவிட்டதில் சதாசிவம்பிள்ளைக்கும் பெரும் பங்குண்டு. மேலும் இத்தகைய தலையாய பணிகளைத் தொழில்வாண்மையுடன் தொடர்ந்து முன்னெடுக்கக்கூடிய பரம்பரையினரை இலங்கையிலும் இலங்கைக்கு வெளியிலும் உருவாக்கி வளர்த்துவிட்ட பெருமையும் இவரைச் சாரும்.

### ஊடகத்துறை ஜாம்பவானுக்கு ஒரு முத்திரை

சமகாலத் தொடர்பாடல் தேவைகளைக் கருத்தில் கொண்டும் தமிழ் மொழி நவீனமயமாக்கலைக் கடமையாகவும் கொண்டு ஆணல்ட் சதாசிவம்பிள்ளை தாம் பொறுப்பேற்றுக்கொண்ட பத்திரிகை- இதழியல் துறையில் தம்மாலியன்ற பணிகளைப் பல்வேறு தளத்தில் செய்துள்ளார்.


இப் பங்களிப்புகள் வரலாற்றெழுதியல் மற்றும் மொழியியல் அலசல் மூலம் நோக்கப்படுகின்றபோது தமிழ் பேசும் மக்கள் மத்தியில் தமிழ் இதழியல் என்பது நவீன அம்சமாகச் சீக்கிரம் சென்றடைவதற்கும், தமிழ்மொழி தன்னளவில் வீறுகொண்டு வளர்ச்சி பெறுவதற்கும் அவரால் முன்னெடுக்கப்பட்டிருப்பது புலனாகின்றது. அத்துடன் இதற்குப் பங்காற்றிய முன்னோடிகளுள் முக்கியமானவராக இவரை முன்னிறுத்தவும் ஆதாரங்களாகின்றன.

இத்தகைய பெருமைகளுக்கு உரித்துடையவரான பத்திராதிபர், ஊடகத்துறை ஜாம்பவான் ஆணல்ட் சதாசிவம்பிள்ளை அவர்களின் இருநூறாவது ஆண்டில் அவரின் பத்திரிகைத் துறைப் பணிகளை நினைவுகூருவது நாம் அவருக்குச் செய்கின்ற காணிக்கையாக அமையலாம். அத்துடன் பத்திரிகைத் துறைப் பணிகளை இன்னும் ஆழமாக கலந்துரையாடக்கூடிய வகையில் ஓர் ஆய்வு மாநாட்டை யாராவது முன்னின்று ஒழுங்கமைத்து ஒப்பேற்றலாம்.

மேலும் ஆணல்ட் சதாசிவம் பிள்ளையின் பல்துறைப் பணிகளைப் போற்றும் வண்ணம் இருநூற்றாண்டு விழாவைக் கொண்டாடி அதில் இலங்கை அரசின் துணையுடன் அஞ்சல் முத்திரை ஒன்றையும் வெளியிட்டு அவரின் பெருமைகளை உலகறியச் செய்ய வேண்டும்.

**மா. ரூபவதனன்**
**தலைவர், முதுநிலை விரிவுரையாளர்**
**பொதுசன நிர்வாகத் துறை**
**ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்.**

# ஊரடங்கால் திண்டாடும் மக்கள்



(கொழும்பு)

கொழும்பு மாவட்டத்தில் திடீரென 5 பிரதேசங்களுக்கு ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில் வர்த்தக நிலையங்களில் பாரிய சனநெரிசல் ஏற்பட்டுள்ளது.

வெல்லம்பிட்டிய, புளூமெண்டல், மோதர, மட்டக்குளி மற்றும் கிராண்ட்பாஸ் ஆகிய பொலிஸ் பிரிவுகளில் இந்த ஊரடங்குச் சட்டம் நேற்று காலை 8 மணியளவில் அமுல்படுத்தப்பட்டது.

இந்த ஊரடங்குச் சட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை அதிகாலை 5 மணிவரை அமுலில் இருக்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பொதுமக்கள் தங்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக கடைகளிலும், பல்பொருள் அங்காடிகளிலும் கூட்டம்கூட்டமாக நிற்பதை அவதானிக்க முடிகிறது. (ஜ-4)

# பாரதம்

## காற்று மாசு

## ஒரு இலட்சத்திற்கும் அதிகமான குழந்தைகள் உயிரிழப்பு

(டில்லி)

இந்தியாவில் கடந்த ஆண்டில் மட்டும் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான குழந்தைகள் காற்று மாசுபாட்டால் உயிரிழந்துள்ளதாக சர்வதேச அளவில் நடத்தப்பட்ட ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஸ்டேட் ஆஃப் குளோபல் ஏர் **(State of Global Air)** வெளியிட்ட அறிக்கையில் மேற்படி குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, "2019 ஆம் ஆண்டு உலகம் முழுவதும் சுமார் 4 இலட்சத்துக்கும் அதிகமான குழந்தைகள் உயிரிழந்துள்ளனர்.

இந்தியாவில் மட்டும் சுமார் ஒரு இலட்சத்து 16 ஆயிரம் குழந்தைகள் காற்று மாசுபாடு காரணமாக உயிரிழந்துள்ளனர். காற்று மாசுபாட்டால் பாதிக்கப்படும் தாய்மார்கள் பெற்றெடுக்கும் குழந்தைகள் எடை குறைந்த குழந்தைகளாக உள்ளனர்.

மேலும் 2019 ஆம் ஆண்டு உலகம் முழுவதும் 60 இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் காற்று மாசுபாடு காரணமாக உயிரிழந்துள்ளனர்.

உயர் இரத்த அழுத்தம், புகையிலைப் பயன்பாட்டுக்கு அடுத்து அதிக அளவிலான காற்று மாசுபாட்டால் ஏற்படுகிறது.

இந்தியாவைத் தொடர்ந்து ஆபிரிக்கா, தெற்காசியா போன்ற நாடுகளிலும் காற்று மாசு காரணமாக குழந்தைகளின் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகமாகி வருகிறது" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## கொடிய கொரே

## வறுமைப் பிடிக்குள்

" க(நியூயோர்க்) ண்ணுக்குத்தெரியாத அர
வதற்கு முன்னே உலகம் முழுவதும்
குழந்தைகள் வறுமையில் வாடி
ஐ.நா.குழந்தைகள் நலஅமைப்பு
தகவல் வெளியிட்டுள்ளது.

உலகம் முழுவதும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வரும் கொரோனாத் தொற்று பொருளாதாரத்தில் பெரும் வீழ்ச்சியைக் கொண்டு வந்துள்ளது. இதனால் உலகம் முழுவதும் பட்டினிச்சாவு அதிகரிக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது.

இந்தக் கண்ணுக்குத் தெரியாத அரக்கன் பரவுவதற்கு முன்னே உலகம் முழுவதும் 35.6 கோடி குழந்தைகள் வறுமையில் வாடி வந்ததாகவும் அதாவது 6 குழந்தைகளில் ஒருவர் இந்த அவலத்தில் இருந்ததாகவும் தற்போதைய பொருளாதார சிக்கலால் இந்த எண்ணிக்கை மிக அதிகமாக உயர்ந்திருப்பதாகவும் ஐ.நா. குழந்தைகள் நல அமைப்பான யுனிசெப்பும் உலக வங்கியும் அதிர்ச்சித் தகவல் வெளியிட்டுள்ளன.

## மின்னல் தாக்கி 9 பேர் பலி



(டில்லி)

கர்நாடகாவில் இடி, மின்னல் தாக்கத்திற்கு உள்ளாகி 9 பேர் உயிரிழந்துள்ளனர்.

கர்நாடக மாநிலத்தில் தொடரும் சீரற்ற காலநிலை காரணமாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை பெல்லாரியில் ஏற்பட்ட இடி, மின்னல் தாக்கத்தின் காரணமாக மிளகாய் அள்ளும் பணியில் ஈடுபட்டிருந்த இரண்டு பெண்கள் உயிரிழந்துள்ளனர்.

இதேபோல் பெலகாவி அருகேயுள்ள சவுந்தத்தி கிராமத்தில் ஆடு மேய்த்துக் கொண்டிருந்த 2 பெண்கள். கதக்ஹாவேரி ஹூப்ளி ஆகிய மாவட்டங்களிலும் 5 பேர் என மொத்தமாக 9 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## ஆர்ப்பாட்டக்காரர்-பொலிஸார் மோதல் துப்பாக்கிச் சூட்டில் 12 பேர் உயிரிழப்பு



(அபுஜா)

நைஜீரியாவில் பொலிஸாரின் நடவடிக்கைகளுக்கு கண்டனம் தெரிவித்து நடந்த போராட்டத்தில் ராணுவம் மற்றும் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 12 பேர் உயிரிழந்தனர்.

நைஜீரியாவில் கடந்த சில மாதங்களாக பொதுமக்கள் மீது பொலிஸாரின் அத்துமீறிய தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன. பொலிஸாரின் இந்த கொடூர தாக்குதல்களில் பலர் காயமடைந்தும் உயிரிழந்தும் வருகின்றனர்.

இந்நிலையில், பொலிஸாரின் தாக்குதல் சம்பவங்களைக் கண்டித்து அந்நாட்டின் மிகப் பெரிய நகரான லகோஷின் பல்வேறு பகுதிகளில் ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு அமைதியான முறையில் போராட்டம் நடத்தினர்.

ஆனால், போராட்டங்கள் நடைபெறுவதை தடுக்கும் விதமாக லகோஷ் நகர் முழுவதும் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டிருந்தது.

மக்கள் ஊரடங்கு விதிகளை மீறிப் போராட்டத்தில் ஈடுபட்டதால் பொலிஸாருக்கும் மக்களுக்கும் இடையே திடீரென மோதல் வெடித்தது.

இந்த மோதலின்போது பாதுகாப்புப் படையினர், பொலிஸார் நடத்திய துப்பாக்கிச்சூடு தாக்குதலில் போராட்டக்காரர்களில் 12 பேர் உயிரிழந்தனர். மேலும், பலர் படுகாயமடைந்தனர்.

அமைதியான முறையில் நடைபெற்ற போராட்டத்தில் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச்சூட்டிற்கு பல்வேறு தரப்பினரும் கண்டனங்கள் தெரிவித்துள்ளனர். (நி)

## சீனாவுடனான பதற்றத்திற்கு மத்தியில் ஆயுதங்களை விற்பனை செய்யும் அமெரிக்கா

(வோஷிங்டன்)

சீனாவுடனான பதற்றத்திற்கு மத்தியில் 100 கோடி டொலர் மதிப்பிலான ஆயுதங்களை தாய்வானுக்கு அமெரிக்கா விற்பனை செய்கிறது.

கடந்த சில மாதங்களாக தாய்வானுக்கும் சீனாவுக்கும் இடையிலான மோதல் அதிகரித்து வருகிறது. எந்த நேரத்திலும் சீனா தாய்வான் மீது தாக்குதல் நடத்தலாம் என கூறப்படுகிறது. இந்த நிலையில் வானத்தில் இருந்து தரையில் உள்ள இலக்குகளை தாக்கி அழிக்கும் ஏவுகணைகள் மற்றும் பிற ஆயுத அமைப்புகள் ஆகியவைகளை விற்க ஒரு பில்லியன் டொலர் ஒப்பந்தம் செய்திருப்பதாக அமெரிக்க வெளியுறவுத் துறை தெரிவித்துள்ளது. அமெரிக்கா தனது கூட்டாளியான தாய்வானுக்கு ஏ.ஜி.எம்.-84எச்., எஸ்.எல்.ஏ.எம்.-ஈ.ஆர். ஏவுகணைகள் ஆறு, எம்.எஸ்-110 விமான உளவு கண்காணிப்பு கருவிகள் மற்றும் ஏவுகணைகளுடன் 11 எம் 142 மொபைல் லைட் ரொக்கெட் வழங்குகிறது.

எஸ்.எல்.ஏ.எம்.-ஈ.ஆர்.ஏவுகணைகள் தாய்வானின் தற்போதைய மற்றும் எதிர்கால அச்சுறுத்தல்களுக்கு உதவும். ஏனெனில் இது அனைத்து வானிலையிலும் பகல் மற்றும் இரவு நேரத்தில், தரையில் அல்லது கடல் மேற்பரப்பில் நகரும் மற்றும் நிலையான இலக்குகளுக்கு எதிராக துல்லியமான தாக்குதலை நடத்தும் திறன்களைக் கொண்டது.

"இந்த ஆயுத விற்பனை இந்தோ-பசுபிக் பிராந்தியம் மற்றும் தாய்வான் நீரிணையின் பாதுகாப்பு நிலைப்பாட்டிற்கு அமெரிக்கா மிகுந்த முக்கியத்துவத்தை அளிக்கிறது என்பதைக் காட்டுகிறது. (நி)




# ரோனாவிற்கு முன்னரே
# தள் 35.6 கோடி குழந்தைகள்

## யுனிசெப் அதிர்ச்சித் தகவல்

த அரக்கன் பரவு
வதும் 35.6 கோடி
வாடி வந்ததாக
மைப்பு அதிர்ச்சித்
”



இந்த வறுமையை ஒழிக்க சர்வ தேச அளவில் நடவடிக்கைகளை எடுக்காவிட்டால் நிலைமை இன்னும் மோசமாகும் எனவும் அவை எச்சரிக்கை விடுத்துள்ளன.

உலகளவில் 6 இல் ஒரு குழந்தை கொடிய வறுமையில் இருக்கிறது என்றால், அது வாழ்வதற்கே போராட்டம் நடத்த வேண்டியிருப்பதாக யுனிசெப் திட்ட இயக்குநர் சஞ்சய் விஜேசேகரா தெரிவித்தார்.

இந்த எண்ணிக்கை மட்டுமே யாரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கும் எனக்கூறியுள்ள அவர், இந்த எண்ணிக்கை கடந்த பல ஆண்டுகளில் இல் லாத அளவுக்கு இன்னும் மோசமாகுவதற்கு முன்பே நாடுகள் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் என எச்சரிக்கை விடுத்தார்.

இதைப்போல உலகளவில் கொடிய வறுமையில் தள்ளப்பட்டு உள்ளவர்களில் 50 சதவீதம் பேர் குழந்தைகள் எனக் கூறியுள்ள உலக வங்கி நிர்வாகி கரோலினா சாஞ்சஸ், கொரோனாவுக்கு முன்னரே இந்த எண்ணிக்கை அனைவருக்கும் கவலையை ஏற்படுத்தி இருந்தது எனவும் குறிப்பிட்டு உள்ளார். (நி)

# ரஷ்யா-சீனாவிடமிருந்து தடுப்பு மருந்துகளை வாங்கும் வெனிசுவேலா!

(வெனிசுவேலா)

ரஷ்ய-சீனகொரோனாவைரஸ் தடுப்பூசிகளால் குடிமக்களுக்கு தடுப்பூசி போட வெனிசுவேலா திட்டமிட்டுள்ளது.

இது தென் அமெரிக்க நாடான வெனிசுவேலாவிற்கு டிசெம்பர் அல்லது ஜனவரி மாதங்களில் வரக்கூடும் என்று ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ தெரிவித்தார்.

தடுப்பூசி வந்தவுடன் முதலில் முதியவர்களுக்கே முன்னுரிமை அளிக்கப்படும். எனினும் அனைவருக்கும் தடுப்பூசி கிடைக்க வழிவகை செய்வோம் என்றும் தெரிவித்துள்ளார்.

வெனிசுவேலாவில் இது வரை கொரோனா வைரஸ் தொற்றினால், 88,035 பேர் பாதிக்கப்பட்டதோடு, 753 பேர் உயிரிழந்துள்ளனர். (நி)

# சசிகலா ஒருவாரத்தில் விடுதலையாக அதிக வாய்ப்பு?

(சென்னை)

சொத்துக்குவிப்பு வழக்கில் சிறையில் இருக்கும் சசிகலா ஒருவாரத்தில் வெளியே வருவதற்கு வாய்ப்புகள் மிக அதிகம், எப்போது வேண்டுமானாலும் அறிவிப்பு வரும் என சட்டத்தரணி தெரிவித்தார்.

சொத்துக்குவிப்பு வழக்கில் கர்நாடகா மாநிலம் பரப்பன அக்ரஹார சிறையில் வி.கே. சசிகலா, தண்டனை அனுபவித்து வருகிறார்.

ஆங்கில தொலைக்காட்சி ஒன்றிற்கு பேட்டியளித்த சசிகலாவின் சட்டத்தரணி “இன்னும் ஒருவாரத்தில் சசிகலா வெளிவருவதற்கான வாய்ப்பு உள்ளது. காரணம் கர்நாடக சிறை விதிகளின் அடிப்படையில் சிறை கைதிகள் நன்னடத்தையின்படி, அனைத்து கைதிகளும் ஒவ்வொரு மாதமும் 3 நாட்கள் தண்டனை குறைப்பு சலுகையை பெற முடியும்.

எனவே சசிகலா 43 மாத காலம் சிறைவாசத்தை முடித்துள்ளார், 43 மாதங்களுக்கு தலா 3 நாட்கள் வீதம் 129 நாட்கள் அவருக்கு தண்டனை குறைக்கப்பட்டுள்ளது. எனவே அவர் ஒருவாரத்தில் வெளியே வருவதற்கு வாய்ப்புகள் மிக அதிகம், எப்போது வேண்டுமானாலும் அறிவிப்பு வரும்” எனக் கூறினார். (நி)

# தென் கொரியாவில் பருவகால காய்ச்சல் தடுப்பூசி பெற்ற 13 பேர் உயிரிழப்பு



(பியாங் யாங்)

தென் கொரியாவில் பருவகால காய்ச்சலுக்கான தடுப்பூசிகளைப் பெற்றுக்கொண்ட குறைந்தது 13 பேர் அண்மைய நாட்களில் இறந்துள்ளமையை அடுத்து காய்ச்சலுக்கான தடுப்பூசியின் பாதுகாப்பு குறித்த அச்சம் ஏற்பட்டுள்ளது.

எனினும் இவற்றில் பல இறப்புக்களின் தடுப்பூசியுடன் நேரடித் தொடர்பற்றவை எனத் தெரியவந்துள்ள நிலையில் சுமார் 19 மில்லியன் மக்களுக்கு இலவசமாக தடுப்பூசி போடும் திட்டத்தை தற்காலிகமாக நிறுத்தி வைக்கும் யோசனை எதுவும் இல்லை என தென்கொரிய சுகாதார அதிகாரிகள் நேற்று முன்தினம் தெரிவித்தனர்.

தடுப்பூசிகளில் எந்த நச்சுப் பொருட்களும் கண்டுபிடிக்கப்படவில்லை. தடுப்பூசி பெற்ற பின்னர் இறந்தவர்களில் 6 பேர் தொடர்பான விசாரணைகளில் அவர்களின் ஐந்து பேருக்கு வேறு அடிப்படை நோய்கள் இருந்தமை தெரியவந்துள்ளதாக தென்கொரிய சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர். (நி)

# ஒக்ஸ்போர்ட் கொரோனா வைரஸ் தடுப்பூசி பரிசோதனையில் ஒருவர் உயிரிழப்பு

(றியோ டி ஜெனிரோ)

பிரிட்டனின் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் மற்றும் அஸ்ட்ராசெனிகா நிறுவனம் இணைந்து தயாரித்த கொரோனாத் தடுப்பூசிப் பரிசோதனை செய்யப்பட்ட ஒருவர் உயிரிழந்துள்ளதாக பிரேசிலின் சுகாதார ஆணையாளர் தெரிவித்துள்ளார். இந்நிலையில்,தொடர்ந்து தடுப்பு மருந்து பரிசோதனை நடைபெறும் என ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் உறுதிசெய்துள்ளது.

உயிரிழந்த அஸ்ட்ராசெனிகா கொரோனா வைரஸ் தடுப்பூசியை பரிசோதனை செய்யப்பட்ட நபர் பிரேசில் நாட்டைச் சேர்ந்தவர் என்று சாவோ போலோ பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

றியோ டி ஜெனிரோ நகரில் வசித்துவந்த அந்த நபருக்கு வயது 28 என உள்ளூர் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

மேலும், இந்தத் தடுப்பூசியை மனிதர்களுக்கு செலுத்தி பார்க்கும் இறுதிக்கட்ட மருத்துவ பரிசோதனை இங்கிலாந்து, இந்தியா, பிரேசில், தென்னாபிரிக்கா போன்ற நாடுகளில் நடைபெற்று வருகிறது. இந்த பரிசோதனையில் ஆயிரக்கணக்கானவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

அஸ்ட்ராசெனிகா கொரோனா வைரஸ் தடுப்பூசியின் சோதனைகளில் ஈடுபட்டுள்ள நபர்களின் இரகசியத்தன்மையை சுட்டிக்காட்டி பிரேசிலிய சுகாதார ஆணையாளர் மேலும் விபரங்களை வழங்கவில்லை, ஆனால் இது தொடர்பான விசாரணையில் இருந்து தரவைப் பெற்றதாகக் கூறினார்.

இதற்கிடையில், ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் பிரேசிலில் ஒரு கொரோனா வைரஸ் தடுப்பூசி சோதனை செய்யப்பட்ட நபரின் மரணம் குறித்த மதிப்பீட்டைத் தொடர்ந்து, மருத்துவ பரிசோதனை குறித்து எந்த கவலையும் இல்லை என்ற முடிவுக்கு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# கைதான சிப்பாய் முறைப்படி சீனாவிடம் ஒப்படைப்பு

(டில்லி)

லடாக் எல்லையில் சுற்றித்திரிந்து கைதான சீன சிப்பாய், முறைப்படி சீனாவிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே நெடுங்காலமாக எல்லை பிரச்சினை இருந்து வருகிறது. கிழக்கு லடாக்கில் அசல் எல்லை கட்டுப்பாட்டு கோடு பகுதியில் கடந்த மே மாதத்தில் இருந்து இரு தரப்பு மோதல் வலுத்து வருகிறது. சீனாவின் தொடர் அத்துமீறல்களுக்கு இந்திய இராணுவம் தக்க பதிலடி கொடுத்து வருகிறது.

தொடர் மோதல்களால் இரு தரப்பும் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட படையினரைக் குவித்து உள்ளனர். இதனால் அங்கு போர் மேகம் சூழ்ந்துள்ளது.

இன்னொரு பக்கம் எல்லையில் அமைதியையும் சமாதானத்தையும் நிலைநிறுத்துவதற்கு இருதரப்பு பேச்சு வார்த்தைகள், இராணுவ மட்டத்தில் நடந்து வருகிறது.

இந்தத் தருணத்தில் கடந்த 18 ஆம் திகதியன்று, கிழக்கு லடாக்கில் அசல் கட்டுப்பாட்டு கோடு பகுதியில் டெம்சோக் செக்டாரில் சுற்றித்திரிந்த சீன சிப்பாய் கார்போரல் வாங் யா லாங் இந்திய இராணுவத்தால் கைது செய்யப்பட்டார்.

சீன சிப்பாயை அந்த நாட்டிடம் ஒப்படைக்க இந்தியா நடவடிக்கை எடுத்தது. அதன்படி, சீன சிப்பாய் கார்போரல் வாங் யா லாங் விடுவிக்கப்பட்டார். அவர் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு கிழக்கு லடாக்கில் சுசூல் மோல்டோ எல்லை பகுதியில் சீனப் படையினரிடம் முறைப்படி ஒப்படைக்கப்பட்டார். இதை சீன படையும் உறுதி செய்துள்ளது. (நி)

# ஐ.தே.க தலைமைப் பதவி போட்டியிட நவீன் தீர்மானம்


(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப்பதவிக்கு போட்டியிடப்போவதாக நவீன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தலைமைப்பதவியில் இருந்து விலகுவதற்கு ரணில் விக்கிரமசிங்க விலகுவதற்கு தீர்மானித்துள்ள நிலையிலேயே தான் இந்த முடிவை எடுத்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள அவர், "ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக யார் இருக்க வேண்டும் என்பதை கட்சியின் செயற்குழுவால் மட்டுமே தீர்மானிக்க முடியாது.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் . மற்றும் அனைத்து உறுப்பினர்களின் கருத்தையும் கேட்டு புதிய தலைவரை நியமிக்க முற்பட



வேண்டும்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வரலாற்று தோல்வியை தழுவியது. இதனையடுத்து தலைவர் பதவியில் இருந்து விலகுவதாக ரணில் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-7)

# கொழும்பிலும் ஊரடங்கு



(கொழும்பு)

கொழும்பு மாவட்டத்தில் ஐந்து பொலிஸ் பிரிவுகளுக்கு உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் தனிமைப்படுத்தல் பொலிஸ் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி மட்டக்குளி, முகத்துவாரம், வெல்லம்பிட்டி, புளூமெண்டல் மற்றும் கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இந்த ஊரடங்கு உத்தரவானது அமுல்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார். (நி-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## சிரிப்பு வைத்தியம்!

நன்றாக சிரிக்கக் கற்றுக் கொள்ளுங்கள். உங்களுக்கு நோய் வராது.

இது நீண்ட காலமாக சொல்லிக் கொண்டு வருகின்ற ஒரு செய்தி தான். இருந்தாலும் இப்பொழுது டாக்டர்களே அதை மிகவும் வலியுறுத்தி சொல்ல ஆரம்பித்து விட்டார்கள்.

சிரிப்பு என்பது நோய் வராமல் தடுப்பது மட்டும் இல்லை.. நோய்களை குணமாக்கவும் செய்யும் தான். அதனால் தான் இன்றைக்கு நவீன மருத்துவ முறை சிரிப்பை நோய்களை குணமாக்கும்–நோயை வராமல் தடுக்கும் ஒரு முறையாக அதாவது Therapentic Factor ஆக அங்கீகரித்திருக்கின்றது.

ஆம்ஸ்டர்டாம் நகரத்திலே தயான் ஆட்டோரியால் அப்படி என்று ஒரு டச்சு டாக்டர். அவர் ஒரு சிரிப்பு மையத்தை ஆரம்பித்து அமோகமாக பிராக்டிஸ் செய்து கொண்டு வருகின்றாராம். அண்மைக் காலத்தில் நிறைய பேர் இந்த சிரிப்பைப் பற்றி ஆராய்ச்சி செய்துகொண்டு வருகின்றார்களாம்.

அந்த டாக்டர் தன்னுடைய சிரிப்பு மையத்திலே தொடர்ந்து மூன்று வாரம் சிரிப்பு வைத்தியம் கொடுக்கின்றாராம். அதன் பின்பு ஒரு அகநிலை உணர்வு ஆய்வு Psychological Test- செய்கின்றாராம். அந்த Test க்கு என்ன பெயர் தெரியுமா? Spirlbergers State Trait Anger inventory Test.

பல பேரிடம் இது மாதிரி ஆய்வு செய்து பார்த்தார்களாம். சிரிப்பு வைத்தியம் செய்தபின்பு அவர்களிலே பல பேருக்குக் கோபத்தின் அளவு மிகவும் குறைந்து போய் இருந்ததாம்.

British Journal of Royal College of General Practitioners அதுவே சிரிப்பின் முக்கியத்துவத்தை உணர்ந்து ஒப்புதல் கொடுத்திருக்கின்றது.

அதனால் இனிமேல் சிரிப்பும் ஒரு வைத்தியம் தான் அல்லோபதி, ஹோமியோபதி என்கின்றது மாதிரி இது Humouropathy.

மன அழுத்தம் இருக்கின்றதே... இது பலவிதமான நோய்களை உண்டாக்கும்.

அதிகப்படியான இரத்த அழுத்தம், இதய நோய்கள், பெப்டிக் அலசர், மன உளைச்சல், நரம்பு சம்பந்தமான கோளாறுகள்... இப்படி பல நோய்கள். மன அழுத்தம் காரணமான தோன்றக்கூடியவை. சில நேரங்களில் புற்று நோயை உருவாகக்கூடிய அபாயம் கூட உண்டாம்.

இதற்காகத்தான் மன அழுத்தத்தை விரட்ட வாய்விட்டு சிரிக்கச் சொல்கின்றார்கள். அமெரிக்கா, இங்கிலாந்து நாடுகளிலே நகைச்சுவை மூலமாக நோயைக் குணப்படுத்துவதற்கு சிரிப்பு சிகிச்சை என்கின்ற முறையை உருவாக்கியிருக்கின்றார்களாம்.

எங்கள் நாட்டுக்கும் இது வந்துவிட்டது. நகைச்சுவையாளர் சங்கங்கள் நிறைய உண்டாகிக் கொண்டு வருகின்றது. இன்னும் சில நிபுணர்கள் என்ன சொல்கின்றார்கள் தெரியுமா? சிரிக்கும் போது இரத்த ஓட்டம் அதிகமாகிறதாம். செரிமான சக்தி அதிகமாகிறதாம்.

இரத்தத்தில சர்க்கரை சத்து சீக்கிரம் கரையுதாம். குலுங்கக் குலுங்கிச் சிரிப்பவர்கள் அதிகமாக குடல் நோ வருவதில்லையாம். சிரிக்கும் போது நுரையீரல்களில் அதிகப்படியான பிராணவாயு போகுதாம்.

சிரித்து மகிழ்ச்சியாக இருப்பது ஜலதோசத்திற்கும் முகப்பருவிற்கும் சிறந்த மருந்துஎன்று கூட ஒரு மருத்துவக் குறிப்பு இருக்கினறது.

அதனால் எப்பொழுதும் சிரித்துக் கொண்டு இருங்கள்... அது தான் நல்லது.

ஒரு அம்மா அவசரமாக ஒரு டாக்டரிடம் வந்தார். டாக்டர்.. எங்கள் வீட்டுக்காரர் உலக சாதனை செய்ய வேண்டும் என்பதற்காக 15 நாள் இடைவிடாமல் சிரித்து பரிசு வாங்கியிருக்கின்றார் என்றார் மிகவும் பதற்றமாக.

அது நல்ல செய்திதானே. அதற்காக ஏன் இப்பொழுது பதற்றமாக அதைச் சொல்கின்றீர்கள்? என்றார் டாக்டர்.

பரிசு வாங்கி 15 நாளாகி விட்டது டாக்டர். இன்னமும் சிரிப்பை நிறுத்தலே... அது தான் சந்தேகமாக இருக்கின்றது என்றார் அந்த அம்மா.

# பட்டதாரிகளுக்கான பயிற்சி வேலைத்திட்டம் தற்காலிகமாக நிறுத்தம்

(கொழும்பு)

அரச சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ள பட்டதாரிகளுக்கான பயிற்சி வேலைத்திட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

அரச சேவை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றை கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை அரச சேவைகளுக்கான பயிற்சிகளில் 50 ஆயிரம் பட்டதாரிகள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இவர்களுக்கான மாதாந்த கொடுப்பனவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள தாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-7)

# வைத்தியர்கள் உட்பட 23 பேருக்கு கொரோனா

(கேகாலை)

கேகாலை மாவட்டத்தில் 23 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கேகாலை மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்தியர் குமார விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள அவர், "கேகாலை வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவில் பணியாற்றும் மூன்று வைத்தியர்களுக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளதாக உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இதில் ஒரு மருத்துவரின் கணவர், கொரோனாத் தொற்றுக்கு ஆளாகியுள்ளதாக பின்னர் உறுதிசெய்யப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக அவரது மகனும் கொரோனாத் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், குறித்த வைத்தியரின் இளைய மகள் மற்றும், ஊழியர் ஒருவரும் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளமை உறுதிப்பத்தப்பட்டுள்ளது. இவர்கள் தற்போது கொழும்பு ஐ.டி.எச். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (நி-7)

# தொழிற்சாலையின் செயற்பாட்டிற்கு ஊரடங்கு தடையாக இருக்காது

(கம்பஹா)

கம்பஹா மாவட்டத்தில் ஏற்றுமதி தொடர்பான தொழிற்சாலைகளின் செயற்பாட்டிற்கு தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்கு உத்தரவு தடையாக இருக்காது என்று இராணுவத் தளபதியும், கொரோனாவை தடுக்கும் தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவருமான சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

ஊரடங்கு உத்தரவு காலத்தில், அத்தகைய நிறுவனங்களின் பணியாளர்கள் தங்



களது வேலை செய்யும் இடத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டையை ஊரடங்கு அனுமதிப்பத்திரமாக பயன்படுத்தலாம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

கம்பஹா மாவட்டத்திற்குள் நேற்று முன்தினம் இரவு 10.00 மணி முதல் தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இது எதிர்வரும் திங்கட்கிழமை காலை 5.00 மணி வரை ஊரடங்கு உத்தரவு அமுலில் இருக்கும். இருப்பினும், கம்பஹா ஊடாக வாகனங்கள் அனுமதிக்கப்படும் என்றும் இராணுவத்தளபதி தெரிவித்துள்ளார். (நி-7)

# ஐப்பசி மாதத இராசி பலன்கள்

## 17.10.2020 - 15.11.2020

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

## சொத்துப் பிரச்சினை சுமுகமாக முடியும்



சார்வரிவருடம் ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, இம்மாத தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனி லாபஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். அவரோடு லாபாதிபதி குருவும் இணைந்திருக்கின்றார். எனவே பொருளாதார நிலை சிறப்பாகவே இருக்கின்றது. புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். நூதனப் பொருட்களின் சேர்க்கை உண்டு. வெற்றிகள் ஸ்தானத்தில் செவ்வாயும் பலம் பெற்றிருப்பதால் வழக்குகள் சாதகமாக முடியும்.

### நீச்சம் பெறும் சுக்கிரன்

இதுவரை சிம்ம இராசியில் சஞ்சரித்து வந்த சுக்கிரன், ஒக்டோபர் 23 ஆம் திகதி கன்னி இராசிக்குச் செல்கின்றார். அங்கு அவர் நீச்சம் பெறுகின்றார். இருப்பினும் அவர் உச்சம் பெற்ற புதனோடு இணைந்து 'நீச்ச பங்க ராஜ யோகத்தை உருவாக்குகின்றார். உங்கள் ராசிக்கு 4, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். எனவே தாய்வழி ஆதரவு கிடைக்கும். தடைப்பட்ட கட்டடப் பணி தொடரும். 'பழைய வாகனத்தைக் கொடுத்து விட்டுப் புதிய வாகனத்தை வாங்கலாமா?' என்ற உங்கள் சிந்தனை இப்பொழுது செயற்படும்.

### மீன செவ்வாயின் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 3, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் வக்கிர இயக்கத்தில் இருக்கின்றார். சகோதரகாரகன் என்று சொல்லப்படும் செவ்வாய், வக்கிர இயக்கத்தில் இருப்பதால் உடன்பிறப்புகளின் வழியில் ஆரோக்கியத் தொல்லைகளும், அதனை முன்னிட்டு விரயங்களும் ஏற்படலாம். இருப்பினும் ஒக்டோபர் 26 ஆம் திகதி மீன ராசிக்கு, செவ்வாய் வக்கிர இயக்கமாகச் செல்கின்றார். குரு வீட்டில் செவ்வாய் அமர்வதால் சொத்துப் பிரச்சினை சுமுகமாக முடியும். பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள் மீண்டும் வேலையில் சேர வாய்ப்பு கிடைக்கும்.

### புதனின் வக்கிர நிவர்த்திக் காலம்

ஒக்டோபர் 27 ஆம் திகதி கன்னி இராசியில் சஞ்சரிக்கும் புதன், வக்கிர நிவர்த்தியாகின்றார். அஷ்டமாதிபதிபலம் பெறும் இந்த நேரத்தில், திடீர் இடமாற்றம், ஊர் மாற்றங்கள் ஏற்படும். தொழிலில் எதிர்பாராத இழப்புகள் உருவாகலாம். வீண் விரயங்களும் அதிகரிக்கலாம். நவம்பர் 4 ஆம் திகதி துலாம் இராசிக்குப் புதன் செல்கின்றார். அங்குள்ள சூரியனோடு இணைந்து 'புத-ஆதித்ய யோக'த்தை




உருவாக்குகின்றார். இக்காலத்தில் நல்ல சம்பவங்கள் நடைபெறும்.

### மகர குருவின் சஞ்சாரம்

நவம்பர் 15 ஆம் திகதி மகர இராசிக்கு குரு செல்கின்றார். மகர இராசி குருவிற்கு நீச்ச வீடாகும். அங்கு தனலாபாதிபதியான குரு நீச்சம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. பொருளாதாரப் பற்றாக்குறை அதிகரிக்கும். 'வாங்கியதைக் கொடுக்க முடியவில்லையே, கொடுத்ததை வாங்க முடியவில்லையே' என்று கவலைப்படுவீர்கள். பிறருக்கு பொறுப்புச் சொல்லி வாங்கிக் கொடுத்த தொகையால் சிக்கல்கள் ஏற்படலாம். குருவின் பார்வை 4, 6, 8 ஆகிய இடங்களில் பதிவதால், அதன் பார்வை மூலம் ஓரளவு நற்பலன்கள் கிடைக்கும். புதிய உத்தியோக முயற்சி கைகூடும். நீண்ட தூரத்திற்கான இடமாறுதல் கிடைக்கலாம்.

இம்மாதம் வியாழக்கிழமை தோறும் குரு வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு நல்ல பொறுப்புகள் வரலாம். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை சிறப்பாக அமையும். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி நீங்கள் எடுத்த முயற்சி வெற்றிபெறும். குருப்பெயர்ச்சிக்குப் பிறகு கொஞ்சம் கூடுதல் கவனம் தேவை. ஆரோக்கியத் தொல்லைகள் அதிகரிக்கலாம். பணிபுரியும் பெண்கள் சலுகைகளை போராடிப் பெறலாம். பெண் தெய்வ வழிபாடு பெருமை சேர்க்கும்.

## மங்கல ஓசை கேட்பதற்கான அறிகுறிகள் தென்படும்



சார்வரி வருடம் ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் குரு பகவான் 10இல் இருக்கின்றார். '10இல் குரு வரும்பொழுது பதவியில் மாற்றம் உண்டு' என்பார்கள். பொதுவாழ்வில் மட்டுமல்ல, உத்தியோகத்திலும் கூட இந்தநிலை உருவாகலாம். திடீர் இடமாற்றங்கள் ஏற்படலாம். 2இல் செவ்வாய் இருப்பதால் பொருளாதார நிலை நன்றாகவே உள்ளது. தொழில் நடத்துபவர்கள், கிளைத்தொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவர்.

### நீச்சம் பெறும் சுக்கிரன்

இதுவரை சிம்ம இராசியில் சஞ்சரித்து வந்த சுக்கிரன், ஒக்டோபர் 23 ஆம் திகதி கன்னி இராசிக்குச் செல்கின்றார். அங்கு அவர் நீச்சம் பெறுகின்றார். உங்கள் இராசிநாதன் குருவிற்கு, பகைக்கிரகமாக விளங்கும் சுக்கிரன் நீச்சம் பெறுவது நன்மைதான். எதிரிகள் விலகுவர். தடைப்பட்ட காரியங்கள் தானாக நடைபெறும். அதே நேரத்தில் உச்சம் பெற்ற புதனோடு இணைந்து 'நீச்சபங்க ராஜ யோக'மும் அடைகின்றார். எனவே வாழ்க்கைத் துணையின் வேலை சம்பந்தமாக ஏதேனும் முயற்சிகள் எடுத்திருந்தால், அதில் நற்பலன் கிடைக்கும்.

### மீன செவ்வாயின் சஞ்சாரம்

ஒக்டோபர் 26 ஆம் திகதி மீன இராசிக்கு, வக்கிர இயக்கத்தில் செவ்வாய் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 2, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய், உங்கள் இராசியிலேயே அமரும்போது வருமானம் திருப்தியாக அமையும். வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். குடும்பத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான அறிகுறிகள் தென்படும். முன்னோர் சொத்துக்களில் முறையான பங்கீடுகள் கிடைக்கும். சகோதர வர்க்கத்தினர் உங்கள் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பர்.

### புதனின் வக்கிர நிவர்த்திக் காலம்

ஒக்டோபர் 27ஆம் திகதி கன்னி இராசியில் சஞ்சரிக்கும் புதன், வக்கிர நிவர்த்தியாகின்றார். இக்காலத்தில் நல்ல தகவல் உங்கள் இல்லம் தேடி வரும். குறிப்பாக 'நன்றாக படித்திருந்தும் வாழ்க்கைத் துணைக்கு வேலை கிடைக்கவில்லையே' என்று கவலைப்பட்டவர்களுக்கு, இப்போது எதிர்பார்த்த வேலை கிடைக்கும். என்றைக்கோ குறைந்த விலையில் வாங்கிப் போட்ட சொத்து, இப்பொழுது பலமடங்கு விலை




உயர்ந்து, அதன் விற்பனை மூலம் ஒரு பெரும் தொகை கிடைக்கலாம். நவம்பர் 4 ஆம் திகதி துலாம் இராசிக்கு புதன் வருகின்றார். அங்குள்ள சூரியனோடு இணைந்து 'புத-ஆதித்ய யோகத்தை உருவாக்குகின்றார். கிரகங்கள் 8ஆம் இடத்தில் இருப்பது அவ்வளவு நல்லதல்ல. கணக்கு வழக்குகளில் சிக்கல்களும் ஏற்படும்.

### மகர குருவின் சஞ்சாரம்

நவம்பர் 15ஆம் திகதி மகர இராசிக்கு குரு செல்கின்றார். மகர இராசி குருவிற்கு நீச்ச வீடாகும். உங்களுடைய இராசிநாதன் நீச்சம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. உடல் ஆரோக்கியத்தில் தொல்லைகள் அதிகரிக்கும். தொழில் வளர்ச்சியில் திடீர் பாதிப்புகள் உண்டு. குருவின் பார்வை 3, 5, 7 ஆகிய இடங்களில் பதிகின்றது. எனவே உடன்பிறந்தவர்கள் உங்கள் குரலுக்கு செவிசாய்ப்பர். கல்யாணம் போன்ற சுபகாரியங்கள் நடைபெறுவதில் கவனம் செலுத்துவீர்கள். இம்மாதம் வியாழக்கிழமை தோறும் சண்முகநாதப் பெருமானை வழிபடுவது நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் தொடக்கத்தில் வளர்ச்சியும், குருப்பெயர்ச்சிக்குப் பிறகு தளர்ச்சியும் ஏற்படும். காரியம் கடைசி நேரத்தில் கைகூடிவிடும். கணவன்- மனைவிக்குள் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு செயற்பட்டால் தான் குடும்பத்தில் அமைதி கிடைக்கும். பிள்ளைகளின் வழியில் சுபச்செலவுகள் உண்டு. பணிபுரியும் பெண்களுக்கு பலநாட்களாக எதிர்பார்த்த சலுகை இப்பொழுது கிடைக்கலாம். உங்கள் திறமை பளிச்சிடும். முருகப்பெருமான் வழிபாடு முன்னேற்றத்திற்கு வித்திடும்.

(முற்றும்)

# கடல் புறா

## விமோசனச் சீலை




"என்ன பேச்சு?"

"அடுத்து நாம் என்ன செய்ய வேண்டும் என்பதைத் தீர்மானிக்க வேண்டாமா?"

இதைக் கேட்ட கூலவாணிகன், பல்லவனைச் சற்றே ஏறெடுத்து நோக்கினான். "சேந்தா! நான் சொல்வது புரியவில்லையா உனக்கு? மஞ்சத்தில் உட்கார்ந்து நாம் பேச முடியாது. இங்குள்ள காவலர்களில் நண்பர்களுமிருக்கலாம், விரோதிகளுமிருக்கலாம். ஆகவே நாம் தனித்துப் பேசக்கூடிய இடம் இந்தச் சாளர வாயில்தான். இது பிரமுகர்கள் சிறையாதலால் விசாலமாயிருக்கிறது.

இந்தச் சாளரத்துக்கும் இரும்புக் கதவும் கம்பிகளுமிருக்கும் இடத்துக்கும் இடையே பன்னிரண்டடிகளாவது இருக்கும்..." என்று சொல்லிக்கொண்டு போன இளைய பல்லவனை இடையே தடுக்க கூலவாணிகன், "ஆமாம் பிரபு! இருக்கும்!" என்று சொல்லி ஆமோதித்துத் தலையையும் அசைத்தான்.

கூலவாணிகன் பேச்சின் குறுக்கே விழுந்ததால் ஒரு விநாடி பேச்சை நிறுத்திய கருணாகர பல்லவன், மேலும் பேசத் தொடர்ந்து, "ஆம் சேந்தா! பன்னிரண்டு அடிகளுக்குக் குறையவில்லை. நாம் இந்தச் சாளரத்தின் மூலம் வெளியே பார்த்துக்கொண்டு மெள்ளப் பேசினால் கதவுக்கு அப்புறமுள்ள காவலர் காதில் விழாது. தவிர பேசுவதும் புரியாது. நாம் ஏதோ வெளிப்புறத்தை வேடிக்கை பார்ப்பதாகவே நினைப்பார்கள்.

ஆகவே அப்புறமோ இப்புறமோ அசையாமல், வெளிப்புறம் பார்த்தே பேசு" என்று விபரித்துவிட்டு, "சேந்தா! இந்தப் பாலூர்துறைமுகத்தின் கோட்டை பலமானது. இயற்கை அரண்களும் இதற்கிருக்கின்றன. ஆனால் ஊருக்குள் இருக்கும் ஜனத்தொகை எப்படி?" என்று விசாரித்தான்.

இந்தக் கேள்வியும், கேள்வியை ஒட்டிய விசாரணையும் அநாவசியமாகப் பட்டதால், கூலவாணிகன் வெறுப்புடன் இதழ்களை மடித்து, பருமனான தன் சரீரத்தையும் ஒரு முறை நெளிந்து, "எதற்கு இந்த ஆராய்ச்சி இப்பொழுது?" என்று வினவினான்.

"சொல், தேவையிருக்கிறது." கருணாகர பல்லவன் குரலில் கண்டிப்பு இருந்தது.

"மூன்றிலொரு பாகம் கலிங்கத்தவர். மற்ற இரண்டு பாகங்களில் தமிழரும், வேங்கி நாட்டவரும் சரி பாதி"

"இங்குள்ள படை எப்படி?"

"அதுவும் கலப்படம், கலிங்கரும், தமிழரும் வேங்கி நாட்டவரும் இருக்கிறார்கள்."

"வணிகர்?"

"பெரும்பாலும் தமிழர் வேங்கி நாட்டவர் யாருமில்லை. கலிங்கர் ஒரு சிலர்."

"அப்படியானால் கலிங்கத்தின் மிகப் பலவீனமான இடம் அந்த பாலூர்ப் பெருந்துறைதான்" என்றான் கருணாகர பல்லவன்.

கூலவாணிகன் வியப்பினால் விழித்தான் அந்த வியப்பின் விளைவாக ஓர் உண்மையும் சொன்னான்: "இளைய பல்லவரே! இந்த ஊரில் தமிழ் வணிகர் பெரும்பாலோர் என்பதைப் பற்றிப் பெருமைப்பட வேண்டாம். படையினரில் பெரும்பாலும் கலிங்கர்தான். ஒரு சிலர் தான், தமிழர்" என்று.

இளையபல்லவன் சற்று யோசித்துவிட்டு "சேந்தா! ஒரு நாட்டின் சக்தி படைப்பலத்தை மட்டும் பொறுத்தன்று. வாணிபத்தையும் பொறுத்தது. வணிகர் பெருகிய ஊரில் அவர்கள் சக்தி மிதமிஞ்சி நிற்கும் படையிலும் சில தமிழர் இருப்பதால், அவர்கள் உதவியும் தமிழ் வணிகருக்கு இருக்கும்.

இந்தக் கூட்டுறவுதான் பீமனுக்கு இந்த ஊரில் பெரும் பலவீனம். இந்தக் கூட்டுறவால்தான் அநபாயர் சிறையிலிருந்து தப்பியிருக்கிறார். சிறைக்குளிருக்கும் நமக்கும் செய்தியனுப்பியிருக்கிறார். நமக்கு உணவு கொண்டு வந்த வீரனைக் கவனித்தாயா?" என்று கேட்டான்.

"இல்லை அவனுக்கென்ன?"

"என் உணவை மஞ்சத்தில் வைத்தான்."

"ஆம்."

"உடனே திரும்பிப்போகவில்லை."

"அப்படியா?"

"ஆம், சற்று நின்றான். உணவு மேலிருந்த சீலையை உற்றுப் பார்த்தான். பிறகே சென்றான்."

பிரமிப்புத் தட்டிய விழிகளை இளையபல்லவன் மீது திருப்பிய கூலவாணிகன். "இதை நான் கவனிக்கவில்லையே!" என்றான்.

"மனத்தில் சாவுக் கிலி பிடித்திருந்தால் நீ எதையும் கவனிக்கவில்லை சேந்தா! அபாயத்திலிருப்பவன் மனத்தைத் தளரவிடக்கூடாது. மனத்தையும் கண்ணையும் காதையும் தீட்டி வைத்துக்கொண்டு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருக்க வேண்டும்.

நீ சோர்வடைந்து கிடந்தாய். ஆனால் நான் கவனித்தேன். கவனித்ததும் சீலைமீது கண்களை செலுத்தினேன். சீலை மிக மெல்லியதாகையால் மறுபுறமிருந்த எழுத்துகள் தெளிவாகத் தெரிந்தன. சீலையை எடுத்து முடித்து வைத்துக் கொண்டேன்" என்ற இளைய பல்லவனை இடைமறித்த கூலவாணிகன், "அதனால்தான் தைரியமாக உணவருந்தினீர்களா?" என்று கேட்டான்.

இளையபல்லவன் பதிலுக்கு நகைத்தான். "இல்லை சேந்தா! எப்படியும் நான் உணவருந்தியிருப்பேன். இறப்பு எப்பொழுது வருமென்று யாரும் நிச்சயமாய்ச் சொல்ல முடியாது. ஆகவே உயிருடனிருக்கும் வரையில் துணிவுடன் வழக்கப்படி வாழ்வதே அறிவாளிகளுக்கு அழகு" என்று கூறிய இளையபல்லவன்.

"அது கிடக்கட்டும் சேந்தா! இப்பொழுது நாம் கவனிக்க வேண்டியதெல்லாம், அநபாயர் உதவி எப்பொழுது வரும், எப்படி வரும், என்பது தான். உன் விடுதியில் பீமன் தனக்கு எல்லாம் தெரிந்தமாதிரி நடித்தான். ஆனால் அவனுக்குத் தெரிந்த உண்மை சொற்பம் என்பதை நான் தெரிந்துகொண்டேன்" என்றும் குறிப்பிட்டான்.

"எப்படித் தெரிந்து கொண்டீர்கள்?"

"பீமன் வாயிலிருந்து"

"பீமன் வாயிலிருந்தா!"

"பீமன் வாயிலிருந்துதான் தூதுப் புறா விடப்பட்டால் நான் பிரமுகர் வீதியிலிருந்த வீட்டிலிருந்ததை ஊகித்ததாகச் சொன்னானல்லவா?"

"ஆம், சொன்னான்."

"ஆனால் தூதுப் புறா எனக்காக விடப்படவில்லையென்பதை அவன் உணரவில்லை. குணவர்மனுக்கு விடப்பட்டது அந்தப் புறா."

"அப்படித்தான் இருக்க வேண்டும். நீங்கள் வந்தது அநபாயருக்கு எப்படித் தெரியும்?"

"உண்மையில் அப்பொழுது நான் அங்கிருந்தது அநபாயருக்குத் தெரியாது. ஆகையால் சந்தர்ப்பவசத்தால் என்னைப் பிடித்திருக்கிறான் பீமன். துறைமுகத்திலிருந்து என்னைத் துரத்தி வந்தவர்கள் நான் வெளிநாட்டுப் பிரமுகர் வீதியில் மறைந்துவிட்டதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

அங்கு ஒற்றர்களை நிறுத்தினான் பீமன். தூதுப் புறா ஒன்று பறந்ததாகச் செய்தி கிடைத்ததும் அது எனக்காகத்தான் விடப்பட்டதாக நினைத்தான் அநபாயர் தப்பிவிட்டார். நான் ஒரு விடுதியில் மறைந்திருக்கிறேன். அங்கு விடப்படுகிறது ஒரு புறா. எல்லாவற்றையும் இணைத்துப் பார்த்து, அநபாயரின் முத்திரை மோதிரத்தை அனுப்பி என்னை வஞ்சகமாக அழைத்து வந்துவிட்டான்."

இதைக் கேட்டதும் அதிர்ச்சியடைந்த கூலவாணிகன், "ஆம். சொல்ல மறந்துவிட்டேன், உங்களிடம். பீமன் என் பெட்டியைச் சோதனை செய்தபோது உங்கள் ஓலையுடன் அநபாயர் எனக்களித்திருந்த முத்திரை மோதிரத்தையும் வைத்திருந்தேன். அதையும் அவன் எடுத்துக்கொண்டான்" என்றான்.

(தொடரும்...)

# கிழக்கு பாடசாலைகளுக்கு காணி அனுமதிப்பத்திரங்கள்

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் காணி அனுமதிப்பத்திரம் இதுவரை பெற்றுக்கொள்ளாத பாடசாலைகளுக்கு, காணி அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொடுப்பதற்கான விபரங்கள், கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சால் திரட்டப்படுகின்றன.

கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஐ.கே.ஜி. முத்துபண்டாவின்வழிகாட்டலின் பேரில், வலயக் கல்வி அலுவலகங்கள் இந்தத் தகவல்கள் திரட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன.

பாடசாலையின்பெயர், முகவரி, கிராம உத்தியோகத்தர் பிரிவு, பிரதேச செயலகப் பிரிவு, காணியின் பரப்பு, நிலஅளவைப் படம் இருந்தால் அதன் இலக்கம் என்பன போன்ற விபரங்கள் தற்போது திரட்டப்படுகின்றன.

இதனை அடிப்படையாகக் கொண்டு, காணி அனுமதிப் பத்திரம் இல்லாத பாடசாலைளுக்கு காணி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ளன.

இது தொடர்பில் மேலதிக விபரம் தேவைப்படின், கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளருடன் தொடர்புகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஜ-4)

# கூட்டுப்பயிற்சி நிறைவு




(கொழும்பு)

கிழக்குக் கடலில் கடந்த 19 ஆம் திகதி முதல் மூன்று நாட்களுக்கு மேல் நடைபெற்ற இலங்கை கடற்படைக்கும் இந்திய கடற்படைக்கும் இடையிலான வருடாந்திர இருதரப்பு கடற்படை கூட்டுப்பயிற்சி - SLINEX 2020 நேற்று முன்தினம் வெற்றிகரமாக நிறைவடைந்தது.

எட்டாவது முறையாக நடத்தப்பட்ட இந்த இருதரப்பு கடற்படை பயிற்சியின் இலங்கை கடற்படையை பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கை கடற்படை கப்பல் கஜபாஹு" மற்றும் "சயுர" ஆழ்கடல் கண்காணிப்புக் கப்பல்கள் பங்கேற்றதுடன் இந்திய கடற்படையை பிரதிநிதித்துவப்படுத்தும் ஐ.என்.எஸ் கமோர்டா மற்றும் ஐ.என்.எஸ் கில்டான் கப்பல்கள் ஹெலிகாப்டர்களுடன் பங்கேற்றன. (ஜ-4)

# வனப்பகுதி தீக்கிரை



(கொழும்பு)

ஹாலிஎல பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ரொக்கதென்ன தோட்டம் மேற்பிரிவின் 20 ஆம் ஏக்கர் பகுதியில் உள்ள வனப்பகுதியில் இனந்தெரியாத விசமிகளால் தீ வைக்கப்பட்டமையால் 25 க்கும் அதிகமான ஏக்கர் வனப்பகுதி தீக்கிரையானது.

இதனால் நீரேந்தும் பிரதேசங்களில் நீர் இல்லாமல் போவதால் வரட்சி நிலவுகின்றது.

எனவே சமூகவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுவோர் குறித்து தகவல் தருமாறு பதுளை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் உதயகுமார் அறிவித்துள்ளார். (ஜ-4)

## ஐவருக்கு கொரோனா

(கொழும்பு)

வலல்லாவிட்ட பிரதேச செயலகப் பிரிவில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

இந்த குடும்பத்தைச் சேர்ந்த நபர் ஒருவர், கொழும்பு துறைமுகத்தில் பணியாற்றுவதுடன், அவருக்குக் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்து, முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின் போது, அவரது குடும்ப உறுப்பினர்கள் ஐவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. (ஐ-4)

# மனைவியைத் தாக்கியவர் கைது

(மூதூர்)

மூதூர் பிரதேசத்தில் மனைவியைத் தாக்கிய ஒருவரை நேற்று கைது செய்துள்ளதாக மூதூர் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆலீம்சேனை, மூதூர் பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய பொலிஸார் கைது செய்தனர்.

இச்சம்பவம் மூதூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆலிம்சேனை பகுதியில் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது, சந்தேக நபர் கடற்றொழில் மேற்கொண்டு வருபவர் என்றும் நேற்று காலை கடலுக்குச் சென்று வீடு திரும்பிய நிலையில் கடும் பசி காரணமாக தனது மனைவியிடம் உணவு கேட்டுள்ளார்.

மனைவி உணவு செய்யவில்லை என்றவுடன் மூர்க்கத்தனமாக தாக்கி காயப்படுத்தியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அயல் வீட்டார்களால் சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் கைது செய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஜ-4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2151

Search for people, places and things

### ருபின்சலா

முந்தநாள் சோக பாடலை ரிங்டோனாக வைச்சிருந்தன் அப்ப என்னாச்சு என்னு கேட்காம...



இன்னைக்கு ஒரு லவ் சோங்க ரிங்டோனாக விட்டதற்கு யார் அந்த பொன்னு என்னு கேட்கிறயே வெட்கமாயில்ல..

### அனேஜா

அன்புக்கு உரியவர்களை இழந்து விடாதீர்கள்...!




ஏனெனில் அவர்களை போலவே இன்னொருவர் அமைவது கடினம்...!


### கௌதமி

சேர்ப்பது மிகக் கடினம் செலவு செய்வது மிக எளிது பணம் மட்டுமல்ல...!



அடுத்தவர் உள்ளத்தில் நாம் சேர்த்து வைக்கும் நல்லெண்ணம் கூட...!

### அமல்ராஜ்



காரணம் இல்லாமல்
கலைந்து போக
இது கனவும்
இல்லை
காரணம் சொல்லி
பிரிந்து போக
இது காதலும்
இல்லை
உயிருள்ளவரை
தொடரும்
உண்மையான நட்பு...!

### பிலின்டன்

எல்லோர் கிட்டையும் மறைக்குற அளவுக்கு அப்படி எவ்வளவு தான் போனஸ் வாங்கின..




தாங்க மாட்டீங்க!!! சொன்னா தாங்க மாட்டீங்க....!!

### யூட்

உணர்ச்சிகளால் ஆள நினைப்பதை விட உணர்வுகளால் அளந்து பார்...



உன் துணையை விட ஓர் உயர்ந்த உயிர் தோழியை வாழ்வில் நீ காண மாட்டாய்..

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.



# ஊரடங்கு அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு விசேட அதிகாரிகள் நியமனம்

## - அஜித் ரோஹண -

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள பகுதிகளில் ஊரடங்கு அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வது தொடர்பான செயற்பாடுகளுக்காக விசேட அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, களனி பொலிஸ் பிரிவுக்கு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி MKRA குணரத்னவை 071 859 1605 எனும் தொலைபேசி இலக்கத்தின் மூலமும், கம்பஹா பொலிஸ் பிரிவுகள் தொடர்பில் உதவி பொலிஸ் அதிகாரி துசிதகுமாரவை 071 859 1610 எனும் தொலைபேசி இலக்கத்தின் மூலமும் தொடர்பு கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், நீர்கொழும்பு பொலிஸ் பிரிவு தொடர்பில் பொலிஸ் அதிகாரி பாலித அமரதுங்கவை 071 859 1632 மற்றும் கொழும்பு வடக்கு பொலிஸ் பிரிவு தொடர்பில், சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி நிரஞ்சன் அபேவர்தன 071 859 1574 எனும் தொலைபேசி இலக்கத்தின் மூலமும் தொடர்பு கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அத்தியாவசிய சேவைகளான மருத்துவம், மின்சாரம், நீர், தொடர்பாடல் மற்றும் ஊடகம் ஆகிய துறைகளுக்கு தமது சேவை அடையாள அட்டையை ஊரடங்கு அனுமதிப்பத்திரமாக பாவிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், ஏதேனும் தேவைகளுக்காக அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளல், தொழிற்சாலைக்ளை நடத்திச் செல்ல வேண்டியமை, ஆகியவை குறித்து குறித்த பொலிஸ் அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ள முடியும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், குறித்த காலப் பகுதிக்குள் இடம்பெறும் திருமணம் உள்ளிட்ட நிகழ்வுகளுக்கான அனுமதிகள் தொடர்பிலும் குறித்த பொலிஸ் அதிகாரிகளிடம் அறிந்துகொள்ள முடியும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-7)

# அலரி மாளிகையிலும் கொரோனா பரிசோதனை

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா அச்சுறுத்தலையடுத்து, பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமான அலரி மாளிகையிலும் கொரோனாப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறித்த பரிசோதனை தற்செயலாக மேற்கொள்ளப்பட்டதாக கொரோனாத் தொற்றுத் தடுப்பு மையம் தெரிவித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா அச்சுறுத்தல் காரணமாக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகக் குறித்த பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதாகவும் கொரோனாத் தொற்றுத் தடுப்பு மையம் மேலும் தெரிவித்துள்ளது.

இதற்கு முன்னர் கடந்த ஏப்ரல் மாதத்தில் அலரி மாளிகையில் கடமையாற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் பி.சி.ஆர்.பரிசோதனை நடத்தப்பட்டது. அதன்படி அலரிமாளிகையில் பணியாற்றி வரும் சுமார் 240 இற்கும் மேற்பட்டவர்களுக்கு பரிசோதனை நடத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-7)

# மனைவி செலுத்திய காரில் மோதி கணவன் உயிரிழப்பு

(கொழும்பு)

கோடீஸ்வர வர்த்தகரின் மனைவி செலுத்திய அதி சொகுசு காரில் மோதி அவரின் கணவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் பொல்கஸ் ஓவிடவில் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. நேற்று முன்தினம் அதி காலை குறித்த பெண்ணினால் செலுத்தப்பட்ட காரின் முன்னால் அவரின் கணவர் பாய்ந்துள்ளதாக பொல்கஸ்ஓவிட வெலேகும்புர வீதி பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பில் காரைச் செலுத்திய அவரின் மனைவி கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட பெண் கெஸ்பேவ நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி-7)

# கொள்கை வட்டி வீதங்களில் மாற்றமில்லை

## - மத்திய வங்கி அறிவிப்பு -

(கொழும்பு)

கொள்கை வட்டி வீதங்களில் மாற்றங்களை ஏற்படுத்தாது தொடர்ந்தும் அவ்வாறே பேணுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நாணயக் கொள்கை மீளாய்வு கூட்டத்தில் இதற்கான முடிவு எட்டப்பட்டுள்ளதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, துணைநில் வைப்பு வசதி வீதத்தை 4 தசம் 5 வீதமாகவும், துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தை 5 தசம் 5 வீதமாகவும் பேணுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு பொருளாதாரம் மற்றும் நிதிச் சந்தை மற்றும் உலகப் பொருளாதாரத்தில் தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்படும் முன்னேற்றங்கள் குறித்து மிகுந்த அவதானத்துடன் பகுப்பாய்வு செய்துள்ள நிலையில் இந்த முடிவு எட்டப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அத்துடன், குறித்த பொருளாதார நடவடிக்கைகளின் மூலம் நாட்டின் பொருளாதாரம் மேம்படும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-7)

# புலிகளால் இயக்கப்பட்ட சம்பந்தன் எதிர்க்கட்சி தலைவரானதற்கு '19' காரணம்

(கொழும்பு)

17 மற்றும் 19ஆவது திருத்தச்சட்டங்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அதிகாரத்தை பெற்றுக்கொடுக்கும் நோக்கிலேயே கொண்டுவரப்பட்டன.

அதனால்தான் மீண்டும் மக்களுக்கு அதிகாரத்தை பெற்றுக்கொடுப்பதற்காக 18 மற்றும் 20ஆவது திருத்தச்சட்டங்களுக்கான தேவை எழுந்ததாக இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை அரசியலமைப்பின் 20ஆவது திருத்தச்சட்டத்தின் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

17ஆம் திருத்தச்சட்டத்தின் மூலம் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அதிகாரத்தை பெற்றுக் கொடுப்பதே நோக்கமாக இருந்தது. பின்னர் மீண்டும் 19ஆவது திருத்தத்தின் மூலம் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அதிகாரம் பெற்றுக்கொடுக்கப்பட்டது.

அதனால்தான் தற்போது 20ஆவது திருத்தச்சட்டத்தின் மூலம் மீண்டும் மக்களுக்கு அதிகாரத்தை பெற்றுக்கொடுக்க நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது.

17ஆவது திருத்தம் இல்லாவிட்டால் 18 இற்கான தேவை எழுந்திருக்காது. 19 இல்லாவிட்டால் 20இற்கான தேவை எழுந்திருக்காது. 19ஐ நீக்கவே மக்கள் ஆணையை வழங்கியுள்ளனர்.

சஜித்தை தோற்கடித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை வெல்ல வைத்ததும் அதற்குத்தான். அதேபோன்று ரணிலுக்கு ஒரு ஆசனம்கூட இல்லாது போனது.

கொழும்பில் போட்டியிட்டு முதலாவது விருப்பு வாக்கை பெற்று நான் தெரிவாகியிருந்தேன். 19ஐ முழுமையாக எதிர்த்தமையின் காரணமாகத்தான் மக்கள் எனக்கு அதிகமான விருப்பு வாக்குகளை வழங்கினர்.

நான்கு சரத்துகளுக்கு சர்வஜன வாக்கெடுப்பு தேவையென உயர்நீதிமன்றம் கூறியுள்ளது. இந்த நான்கு சரத்துகளும் 19 ஆவது திருத்தச்சட்டத்தில் கொண்டுவரப்பட்டவையாகும்.

அரசியலமைப்பில் இல்லாதொன்றை நீக்க முற்படும் போது உயர்நீதிமன்றம் ஏன் அதனை எதிர்த்துள்ளதென தெரியவில்லை.

19ஆவது திருத்தச்சட்டத்தின் மூலம்தான் புலிகள் அமைப்பின் அரசியல் பிரிவால் இயக்கப்பட்ட இரா.சம்பந்தன் போன்றோர் எதிர்க்கட்சித் தலைவராகும் நிலை உருவானது.

சுயாதீன ஆணைக்குழு எனக் கூறப்பட்ட தேர்தல்ஆணைக்குழுவில் ரட்ணஜீவன் ஹூல் போன்றோர் செயற்பட்ட விதத்தை அனைவரும் அறிவார்கள்.

ஆனால், ஜனாதிபதியால் அவரை நீக்க முடியாதுள்ளது. ஆகவே, 20ஆவது திருத்தச்சட்டம் 69 இலட்சம் மக்களுக்கு மதிப்பளிப்பதற்காகவே கொண்டுவரப்படுகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (நி-7)

# புதிய அரசியல் யாப்பிற்கு பொதுமக்களின் கருத்துக்களை கேட்டறியும் நிகழ்வு ஆரம்பம்

(கொழும்பு)

இலங்கையில் இரண்டாவது குடியரசு அரசியல் யாப்பிற்கு பதிலாக புதிய அரசியல் யாப்புக்கான சட்டமூலம் ஒன்றை வகுப்பதற்காக பொதுமக்களின் கருத்துக்களை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு இருப்பதாக நீதி அமைச்சின் செயலாளர் எம்.எம்.பி.கே.மாயாதுன்னே தெரிவித்துள்ளார்.

இதற்கமைவாக இது தொடர்பில் பிரஜை ஒருவர் தமது ஆலோசனை நிலைப்பாடு அல்லது கருத்துக்களை சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்ப்பாளர்களாயின் அந்த ஆலோசனை நிலைப்பாடு அல்லது கருத்துக்களை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளில் எந்த ஒரு மொழியிலாவது 2020 நவம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் அல்லது அதற்கு முன்னதாக செயலாளர், நிபுணர்கள் குழு, இலக்கம்-32, தொகுதி 02, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம், கொழும்பு 7 என்ற முகவரிக்கு அல்லது expertscommpublic@yahoo.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலதிக தகவல்களை நீதி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.moj.gov.lk என்ற இணையத்தளத்தில் அல்லது 2020.10.20 ஆம் திகதி அரச அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பின் மூலம் பெற்றுக்கொள்ள முடியும் என்று நீதி அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார். (நி-7)

# தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 5 ஆயிரத்து 978 ஆக அதிகரித்துள்ளது. கொரோனா தொற்றுக்குள்ளான மேலும் 167 பேர் நேற்று முன்தினம் (புதன்கிழமை) அடையாளம் காணப்பட்ட நிலையிலேயே இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.


தனிமைப்படுத்தப்பட்டிருந்த மினுவாங்கொடை கொரோனா தொற்றாளர்கள் 38 பேர் மற்றும் அவர்களுடன் நெருங்கிப் பழகிய 79 பேர் ஆகியோருக்கே இவ்வாறு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், பேலியகொடை மீன்சந்தை விற்பனையாளர்கள் 49 பேருக்கும் நேற்றைய தினம் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

இதன்மூலம் மினுவாங்கொடை கொரோனா கொத்தணியின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 508 ஆக அதிகரித்துள்ளது. (நி-7)

# ஆலய வழிபாடு

## ஏன்-எதற்கு - எப்படி



## ஆலய வழிபாடு

ஆத்மஞானம் பெற்ற பக்தன் மன உறுதி பெற்று இருப்பான். அவன் எதற்கும் கலங்கமாட்டான். ஒழுக்கமாக வாழ்வான். நல்லதையே நினைப்பான். மற்றவர்களுக்கும் நல்லதையே செய்வான்.

அவன் இறைவனிடம் வேண்டுவது கூட நிலை இல்லாத பணம், பதவி, புகழ் போன்றவைகளுக்காக இருக்காது. இந்தப் பிறவியில் தனது ஆன்ம பலத்தை அதிகரிக்கச் செய்வதற்காகத்தான் இருக்கும். அவர்களது வழிபாடு மற்றவர்களை பாதிக்காத வழிபாடாக இருக்கும்.

எனவே ஆத்மாவை அறிந்தவர்களின் நம்பிக்கையும் தெய்வப்பக்தியும் 100 சதவீதம் பரிபூரணமாக காணப்படும்.

தெய்வத்தின் மீது பக்தி அதிகரிக்க அதிகரிக்க நம் ஆன்மா அமைதி பெறும். அது அலை பாயாது.

யோக பலம் உண்டாகும். மரண பயம் நீங்கும்.

பரமாத்மாவான இறைவன், இந்த உலகம் பூராகவும் பரவி வியாபித்து நிறைந்து இருக்கிறான் என்பது புரியும். பக்தியுடன் கூடிய பிரார்த்தனையை செய்தால்தான் ஜீவாத்மாக்களான நாம் பரமாத்மா பற்றி நினைத்துப் பார்க்க முடியும் என்ற பக்குவம் உண்டாகும்.

ஆலயத்துக்கு சென்று வழிபாடு செய்யும்போது, கொஞ்சம் கொஞ்சமாக நம்மை நமது ஆத்ம ஞானம் உயர்த்தும்.

அதற்காகத்தான், கோவிலுக்கு போ.. கோவிலுக்கு போ... என்று நம் முன்னோர்கள் சொல்லி வைத்துள்ளனர். இதை உணர்ந்து, இதை மனதில் நிறுத்தி நாம் ஆலய வழிபாடுகளை செய்ய வேண்டும்.

ஆலய வழிபாடு ஒன்றே... நம்மை துன்பங்களில் இருந்து மீட்டெடுத்து, விடுவித்து நம்மை உயர்ந்த நிலைக்கு அழைத்துச் செல்லும்.

இந்த சிறப்பை உலகில் இந்து மதம் மட்டுமே மிகச் சிறப்பாகச் சொல்லியுள்ளது. இன்று உலகில் உள்ள மதங்களில் இந்து மதம் மட்டுமே மிகமிகப் பழைமையானது.

இந்து மதத்துக்கு முன்னதாக வேறு ஒரு மதம் இருந்திருக்கலாம் என்பதற்கான வரலாற்றுச் சான்றுகள் இதுவரை உலகில் எங்கும் கிடைக்கவில்லை.

சங்க காலத்துக்கு முன்பு வாழ்ந்த மக்கள் தங்கள் வழிபாட்டு கோட்பாடுகளை சனாதன தர்மம் மற்றும் வைதீக தர்மம் என்று அழைத்து வந்தனர்.

சனாதனம் என்றால் என்ன?

நம் விருப்பத்துக்கு ஏற்ப சுதந்திரமாக வழிபடும் முறைக்குத் தான் சனாதனம் என்று பெயர்.

நாம் நம் ஆசைப்படி ஒரு இறை உருவத்தை தேர்வு செய்து வழிபடுவோம். இன்னொருவர் வேறுவிதமான இறை உருவத்தை தேர்வு செய்து வழிபாடுவார்.

யாரும், யாரையும் இந்த விடயத்தில் கட்டுப்படுத்த முடியாது. இத்தகைய சனாதன தர்மம் காரணமாகவே நம் மூதாதையர்களின் வழிபாட்டில் ஏராளமான இறை உருவங்கள் தோன்றின.

இதன் அடிப்படை அர்த்தம் என்ன? ஒருவன் இறைவனை எந்த உருவத்தில் வடிவத்தில் வேண்டுமானாலும் பார்த்துக் கொள்ளட்டும். அது அவனது இஷ்டம்.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## செயல்திறன் தடைதாண்டல் பரீட்சை ஒத்திவைப்பு

(கொழும்பு)

2020 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 24 ஆம் திகதி நடைபெறவிருந்த அரச சேவையில் நாடளாவிய சேவைக்கான செயல்திறன் தடை தாண்டல் பரீட்சை கொவிட் -19 வைரஸ் தொற்று பரவும் தொற்று நிலைமையினால் மறு அறிவித்தல் வரையில் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பதில் பணிப்பாளர் நாயகம் இதனை தெரிவித்துள்ளார். (நி-7)

## ஊரடங்கு உத்தரவு மீறல்; 596 பேர் கைது 76 வாகனங்கள் பறிமுதல்

(கொழும்பு)

ஊரடங்கு உத்தரவை மீறிய குற்றச்சாட்டின் கீழ் 596 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் 76 வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

கொரோனா பரவல் காரணமாக இலங்கையின் பல இடங்களில் பொலிஸ் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு நடைமுறையில் உள்ள நிலையில் நேற்று முன்தினம் மட்டும் குறித்த பகுதிகளில் ஊரடங்கு உத்தரவை மீறி நடமாடிய 83 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இதுவரை ஊரடங்கு உத்தரவை மீறியதாக 596 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் ஊரடங்கு உத்தரவை மீறி பயணித்த 76 வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது. (நி-7)

## தபால் மூலம் மருந்து விநியோகம்

(கொழும்பு)

கொழும்பு கம்பஹா மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் நோயாளிகளுக்கான மருந்துகளை விநியோகிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.


மத்திய தபால் பரிமாற்றகத்தின் தபால் அத்தியட்சகர் அஸ்லாம் ஹசன் இதனைத் தெரிவித்துள்ளார். வைத்தியசாலைகள் மற்றும் அரச மருந்தகங்களில் வழங்கப்படும் மருந்துகள் இவ்வாறு விநியோகிக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 150 | 140 | 120 |
| உருளைக்கிழங்கு | 140 | 240 | 140 |
| பச்சைமிளகாய் | 150 | 150 | 160 |
| தக்காளி | 100 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 100 | 80 |
| கோவா | 120 | 120 | 120 |
| கரட் | 100 | 170 | 200 |
| பூசணி | 60 | 50 | 50 |
| புடோல் | 80 | 70 | 80 |
| வாழைக்காய் | 60 | 70 | 120 |
| சின்னவெங்காயம் | 250 | 200-260 | 240 |
| பெரியவெங்காயம் | 200 | 120-140 | 150 |
| பாகற்காய் | 250 | 200 | 240 |
| வெண்டிக்காய் | 60 | 50 | 100 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 100 |
| பயற்றங்காய் | 160 | 100 | 140 |
| லீக்ஸ் | 80 | 90 | 100 |
| பீற்றூட் | 60 | 100 | 80 |
| கறிமிளகாய் | 250 | 180 | 200 |
| முருங்கைக்காய் | 200 | 180 | 120 |
| போஞ்சி | 200 | 180 | 240 |
| கத்தரிதம்புள்ள | 120 | 140 | 100 |
| கீரை - 1 பிடி | 40 | 50 | 40 |
| தேசிக்காய் | 150 | 150 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 75 | 60-80 |
| இராசவள்ளி | 250 | -- | 300 |
| வெங்காயப்பூ | 250 | -- | 280 |
| முள்ளங்கி | 80 | 70 | 80 |
| பொன்னாங்காணி | 50 | 50 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 30 |
| ஈர[illegible]லா | 80 | -- | -- |




# ஆசைக்கும் எல்லை உண்டு!



ஒரு காட்டு அதிகாரி இருந்தார். அவருக்கு அழகான ஒரு மகள் இருந்தாள். ஒருநாள் பட்டாம்பூச்சியைத் துரத்திக் கொண்டே அந்தப் பெண் காட்டிற்குச் சென்றாள்.

அப்போது அவளை பார்த்த ஒரு சிங்கத்திற்கு அந்தப் பெண்ணை மிகவும் பிடித்துப்போய் விட்டது. அதனால் காட்டு அதிகாரியிடம் சென்று, தனக்கு உங்கள் மகளைக் கல்யாணம் செய்து வையுங்கள் என்று கேட்டது.

அதிகாரி சிங்கத்தைப் பார்த்து பயந்தார். அதனால், என்ன செய்யலாம் என்று யோசித்தார். அவருக்கு ஒரு யோசனை தோன்றியது.

அவர் சிங்கத்தைப் பார்த்து, காட்டு ராஜா, காட்டு ராஜா என் மகள் ரொம்பப் பயந்தவள். உன்னுடைய பற்களையும் நகங்களையும் எடுத்து விட்டால், அவள் பயப்படமாட்டாள். அப்புறம், நான் அவளை உனக்குக் கல்யாணம் செய்து தருகிறேன் என்று சொன்னார்.

அந்தப் பெண்மீது கொண்ட பிரியத்தால் சிங்கம் அதற்குச் சம்மதித்தது. காட்டு அதிகாரி, முதலில் அதன் பற்களைப் பிடுங்கினார். அதன்பின், நகங்களை வெட்டினார்.

பற்களையும் நகங்களையும் இழந்த சிங்கம், பலம் எல்லாவற்றையும் இழந்து ஆட்டுக் குட்டிபோல் இருந்தது! உடனே காட்டு அதிகாரி ஒரு தடியை எடுத்து, சிங்கத்தை பலமாக அடித்து விரட்டினார். நடக்காத ஒரு விடயத்திற்கு ஆசைப்பட்டால் நட்டம் நமக்குத்தான்என்று புரிந்து கொண்டு, தப்பித்தோம், பிழைத்தோம் என்று சிங்கம் ஓடியே போய் விட்டது!

**நீதி :அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சு.**

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## குதிரைப் பாய்ச்சல்



பிலிப் மன்னன்

‘குதிரையின் கால்கள் எப்படி இருக்கும்? தன்னுடைய சக்தியைத் திரட்டிக்கொண்டு ஒரு உதை உதைத்தால் உடலில் எத்தனை மோசமாக காயம் படும் என்பதெல்லாம் அவனுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை.

தன்னுடைய கால்களால் மண்ணைத் தூற்றி விட்டால் அதன் பிறகு உயிருக்கு உத்தரவாதமே இல்லை என்கிற விடயம் அவனுக்கு எப்படித் தெரிந்திருக்கும்?

வெறுமனே குதிரையேற்றம் பழகி விட்டால் போதுமா என்ன? அதுவும் பழகிய குதிரையில் ஏறி சவாரி செய்தவன் தானே? ஆர்வக் கோளாறில் கேட்கிறான்’ என்று உள்ளுக்குள் சிரித்துக் கொண்டார் மன்னர் பிலிப்.

ஆனாலும் தன்னுடைய வற்புறுத்தலைக் கொஞ்சமும் குறைத்துக் கொள்ளவில்லை அலெக்சாண்டர். மீண்டும் கேட்டான். மீண்டும் மீண்டும் தந்தையின் மனம் கசியும் வரை மன்னரின் தலை சம்மதம் என்று சொல்லி அசையும் வரை.

‘சரி, நீ மட்டும் அந்தக் குதிரையை அடக்கிவிட்டால் அந்தக் குதிரையை வாங்கி உனக்கே பரிசாகத் தருகிறேன்.’ அனுப்பி விட்டார். ஆனால் உள்ளூக்குள் உதறல் மன்னருக்குத்தான். ‘அவன் குதிரையை அடக்கத் தேவையில்லை. அடிபடாமல் திரும்பி வந்தாலே போதும்.’ கடவுளைப் பிரார்த்தனை செய்தபடியே மைதானத்துக்குள் அனுப்பி வைத்தார் மன்னர் பிலிப். சுற்றிலும் இருந்த வீரர்களை ஒரு முறை பார்த்தார். அவர்கள் நிமிர்ந்து நின்று கொண்டனர்.

‘ஏதாவது பிரச்சினை என்றால் உத்தரவுக்காகக் காத்திராமல் களத்தில் குதித்து அலெக்சாண்டரைக் காப்பாற்றவேண்டும்’ என்பது தான் மன்னருடைய பார்வைக்கு அர்த்தம்.

அதை ஆமோதிப்பது போலவே நிமிர்ந்து நின்று தாங்கள் தயாராக இருப்பதாக மன்னருக்கு உணர்த்தினார்கள். இதுபோன்ற குறிப்பால் உணரும் சங்கதிகள் மாசிடோனியாவில் அதிகம் அமுலில் இருந்தன.

அரண்மனையிலும் சரி, யுத்தகளத்திலும் சரி, சமிக்ஞைகள் பிரதான இடம் வகித்தன. இப்போது மைதானத்தில் இறங்கியிருந்தான்.

அலெக்சாண்டர் குதிரையை நெருங்கினான். வானத்தை அண்ணாந்து பார்த்தான். குதிரையின் பளபளக்கும் சருமத்தில் தன் விரல்களை ஓடவிட்டான்.

முரட்டுத்தனமாக அதைப் பிடித்து இழுக்கவில்லை. தாவி அதன் முதுகில் ஏறவில்லை. ஒருமுறை அந்தக் குதிரையைச் சுற்றி வந்தான்.

பிறகு, அந்தக் குதிரையைத் தொட்டுத் தொட்டு மெல்ல எதிர் திசையில் திருப்ப முயற்சி செய்தான்.

கூடியிருந்த அத்தனை பேருக்கும் ஆச்சரியம். என்ன செய்கிறான் இவன்? அப்படியே நகர்த்தி நகர்த்தி வெளியில் கொண்டு வந்துவிடப் போகிறானா? (தொடரும்)

எதிர்காலத்தைப் பற்றி நினைத்துக் கொண்டிராது. நிகழ்காலத்தை நல்ல வகையில் பயன்படுத்தும் மனிதனே மகிழ்ச்சியான மனிதன்.

~ லியோ டால்ஸ்டாய்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஜனாதிபதிக்கு கிடைத்த அதிகாரம் தமிழ் மக்களை நோக்கிப் பாயுமா?

20ஆவது திருத்தச் சட்டமூலம் நிறைவேறினால் அன்றி ஆட்சியை நடத்த முடியாது என்பதுபோல ஆளுந்தரப்பு நடந்து கொண்டது.

இதனால் எப்படியும் 20ஆவது திருத்தச் சட்டமூலத்தை நிறைவேற்றியே தீருவோம் என்ற ஆட்சியாளர்களின் சபதம் நேற்றுப் பாராளுமன்றத்தில் நிறைவேறியது.

20ஆவது திருத்தச் சட்டமூலத்தின் ஊடாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகியுள்ளார். இனி அவர் இட்டதே சட்டம்.

ஆக, 19ஆவது திருத்தச் சட்டமூலத்தினூடாக பாராளுமன்றத்துக்கு வழங்கப்பட்ட அதிகாரம் 20ஆவது திருத்தச் சட்டமூலம் மீண்டும் ஜனாதிபதியை சர்வவல்லமை கொண்டவராக ஆக்கியுள்ளது.

20ஆவது திருத்தச் சட்டமூலத்தை பௌத்த பீடங்கள் எதிர்த்த நிலையிலும் அது மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்துடன் நிறைவேறியுள்ளது எனில், பௌத்த பிக்குகள் இனி பிரித் ஓதுவதைச் செய்ய வேண்டுமே தவிர ஆட்சி அதிகாரங்களில் கதைக்கவோ கைவைக்கவோ கூடாது என்ற செய்தியும் இதனூடு எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

இவை ஒருபுறமிருக்க, 20ஆவது திருத்த சட்டமூலம் ஜனநாயகத்துக்கு சாவுமணி அடிப்பதாக அமையும். சர்வாதிகார ஆட்சி மேலோங்கும் என்ற குற்றச்சாட்டுக்களை பலரும் முன்வைத்த நிலையில், நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் தமிழ் மக்கள் சார்ந்து ஒரு முக்கியமான விடயத்தைப் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அதாவது தமிழ் மக்களின் போராட்டங்களை இரும்புக்கரம் கொண்டு நசுக்குகின்ற சதித்திட்டம் 20ஆவது திருத்த சட்டமூலத்துக்குப் பின்னால்உள்ளதுஎனஅவர்கூறியுள்ளார்.

ஆம், 20ஆவது திருத்த சட்டமூலம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நிறைவேற்று அதிகாரத்தை வழங்கி நிற்க,

அவர் தனக்குக் கிடைத்த அதிகாரத்தை சிங்கள மக்களுக்கு எதிராக ஒருபோதும் பிரயோகிக்கப் போவதில்லை.

மாறாக அவரின் அதிகாரச் சோதனை தமிழ் மக்கள் மீதாகவே இருக்கும் என்று கருதுவதில் நியாயம் உண்டு.

அதாவது கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக வந்த பிற்பாடு, நினைவேந்தல் என்ற விடயம் தமிழ் மக்கள் மத்தியில் சிக்கலுக்குரியதாயிற்று.

எனினும் உண்ணாவிரதம், கடையடைப்பு என்ற அகிம்சை வழிப் போராட்டங்களை தமிழ் மக்கள் முன்னெடுத்தனர்.

ஆனால் 20ஆவது திருத்த சட்டமூலம் நிறைவேறிய நிலையில், மேற்போந்த போராட்டங்கள் முதல் தமிழ் மக்களின் இதர விடயங்கள் வரையில் ஜனாதிபதி கோட்டாபயவின் நிலைப்பாடு எவ்வாறாக அமையும் என்ற கேள்வி எழவே செய்யும்.

20ஆவது திருத்த சட்டமூலம் நிறைவேறியது நல்லது என்று சிங்கள மக்களை நம்ப வைப்பதென ஜனாதிபதி கோட்டாபய நினைத்தால்,

20ஆவது திருத்தச் சட்டமூலம், ஜனாதிபதிக்கு வழங்கிய அதிகாரம் தமிழ் மக்களை நோக்கிப் பாயும் என்று அனுமானிப்பதில் தவறில்லை.

எது எவ்வாறாயினும் இயற்கையும் காலமுமே பதில் தர வேண்டும்.

# தோட்டப் பயிர்ச்செய்கைத் திட்டம்; மீளாய்வுக் கலந்துரையாடல்

(கண்டாவளை)

வீட்டுப் பொருளாதார போசணையை மேம்படுத்தி குடும்ப அலகுகளை வலுவூட்டுவதற்கான தேசிய வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கை நிகழ்ச்சித் திட்டம் - 2020/ 2021 பெரும்போக நிகழ்ச்சித் திட்டத்தின் முன்னேற்ற மீளாய்வுக் கலந்துரையாடலானது மாவட்ட அரசாங்க அதிபர் க. விமலநாதன் தலைமையில் நேற்று முன்தினம் மாவட்ட செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

மாவட்ட விவசாய பணிப்பாளர் மற்றும் சமுர்த்தி பணிப்பாளர் அவர்கள் குறித்த நிகழ்ச்சித் திட்டத்தின் தற்போதைய முன்னேற்றம் தொடர்பாக விளக்கமளித்தனர்.

மேலும் இத் திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டுள்ள கமத்தொழில் திணைக்களம், ஏற்றுமதி கமத்தொழில் ஊக்குவிப்புத் திணைக்களம், கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம், சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம், தென்னை அபிவிருத்தி அதிகார சபை, தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை, ஆயுள்வேதத் திணைக்களம் ஆகிய திணைக்களங்கள உத்தியோகத்தர்கள் இத்திட்டத்தின் தற்போதைய நிலைமைகள் மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பாக விளக்கமளித்தனர்.

இந் நிகழ்ச்சித் திட்டத்தில் கீரை வகைகள், கொடிப் பயிர்கள், கிழங்கு வகைகள், பல்லாண்டுத் தாவரங்கள், ஏற்றுமதிப் பயிர்கள், வீட்டுத்தோட்டத்தில் பயிரிட முடியுமான பெறுமதியான தாவரங்கள், மருத்துவத் தாவர வகைகள், காளான் பயிர்ச செய்கை, தேனீ வளர்ப்பு, கால்நடை மற்றும் நன்னீர் மீன் வளர்ப்பு ஆகிய துறைகளை உள்ளடக்கியுள்ளதாக சமுர்த்தி திணைக்களம், விவசாய திணைக்களம், பிரதேச செயலர் பிரிவு, சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு என்கின்ற நான்கு துறை சார்ந்ததாக பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

இத் திட்டத்தில் தற்போது மிளகாய், தக்காளி, கத்தரி, கறிமிளகாய் போனறன நாற்று மேடைப் பயிர்களாக பயிரிடப்படுகிறது. மேலும் வெண்டி, பயிற்றை, பகூளி, பாகல், பூசணி, வெள்ளை பூசணி நாற்றுக்களாக பயிரிடப்படவுள்ளன.

இக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர், மாவட்ட விவசாயப் பணிப்பாளர், சமுர்த்தி பணிப்பாளர், கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர், பிரதேச செயலாளர்கள், பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி, சுகாதார வைத்திய அதிகாரிகள் (ஒட்டுசுட்டான், முல்லைத்தீவு), பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர், பிரதி கால்நடை சுகாதார பணிப்பாளர், காணி பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் திணைக்கள உதவிப் பணிப்பாளர், தெங்கு அபிவிருத்திச் சபை பிராந்திய முகாமையாளர், உதவிப் பிரதேச செயலாளர்கள், உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள், சமுர்த்தி முகாமையாளர்கள், வனவளப் பாதுகாப்பு திணைக்கள உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொணடனர். · (ஜ-4-5-315)

# மீன்களின் உடலில் கொரோனா வைரஸ் எத்தனை நாள் வாழும்?

(கொழும்பு)

மீன்களின் உடலில் கொரோனா வைரஸ் எந்தளவு காலம் உயிருடன் வாழும் என்பது தொடர்பில் உறுதியாக கூற முடியாது என தேசிய தொற்று நோயியல் பிரிவின் பிரதம வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் ஏதேனும் உடலில் குறிப்பிடத்தக்க காலம் வாழும் தன்மையைக் கொண்டது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

வுஹானில் மீன் விற்பனை நிலையம் ஒன்றில் இருந்தே இந்த வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது.

உறுதியாக இதனை கூற முடியாவிடினும் மீனகளில் இருந்து இந்த வைரஸ் பரவி இருக்குமானால் மனிதர்களிடத்தில் எவ்வாறு அது வியாபித்தது என்பது தொடர்பில் கண்டறிய வேண்டும்.

இதனைக் காரணமாகக் கொண்டு மீன்களை உணவுக்காக எடுத்துக் கொள்வதால் எந்தப் பிரச்சினையும் இல்லை.

முறையாக சுகாதார வழிமுறைகளை கைக்கொண்டால் எந்த பிரசசினையும் இல்லை. சமைபபதற்காக மீன்களைத் தொட்ட பின்னர் நன்றாக கைகளை சவர்க்காரம் இட்டு கழுவ வேண்டும்.

அத்துடன் அதே கைகளில் முகத்தை தொடுவதை தவிர்க்கவும். இவ்வாறு செய்தால் சில வேளைகளில் மீன்களின் உடலில் கொவிட் வைரஸ் இருந்தால் அதில இருந்து பாதுகாப்புப் பெறலாம். மீன்களை உணவாக உட்கொள்வதில் எந்தப் பிரச்சினையுமில்லை என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன் எனவும் அவர் தெரிவித்தார். (நி-7)

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

இனி இறந்தவர்கள் குறித்த சடங்குகளைக் கண்டு அந்த ஆன்மாக்கள் மகிழ்ச்சியடைகின்றன. இறந்தவர்கள் பொருட்டு நாம் செய்கின்ற தானதர்மத்தின் பலன் அவர்களைச் சார்ந்து அவர்கள் நன்மை அடைகின்றார்கள்.

இறந்த தமது தந்தை பாண்டுவின் பொருட்டுப் பாண்டவர்கள் செய்த ராஜசூய வேள்வியின் பயனால் பாண்டு நற்கதி பெற்றான் என்று மகாபாரதம் கூறுகின்றது.

இறந்த உயிர்கள் சூட்சும சரீரத்தோடு உலாவுகின்றன. நாம் அவர்களுடைய உருவப்படத்தை வைத்து அவர்களுக்குப் பிரியமான பொருட்களை வைத்துப் படைப்பதால் அந்த உயிர்கள் திருப்தியடைகின்றன. (தொடரும்)

## அறிந்துகொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### அழகன் முருகப்பெருமானின் ஆயுதங்கள்

**கோடரி**

மரம் பிளக்கப் பயன்படும் கருவி போலப் பகைவரின் உடலைப் பிளக்க இது பயன்படும். இது இரும்பால் ஆகியது. வாய் கூர்மையாகவும் பின்புறம் கனமாகவும் இருக்கும். காம்பில் செருகப்பெற்று இருக்கும். 'பரசு' என்பதும் இதைப்போன்றே இருக்கும். ஆனால், வாய் சற்று வளைந்து கூரியதாக இருக்கும். இதுவும் காம்பில் செருகப் பெற்றிருக்கும். காங்கேய சுப்பிரமணியர் என்ற வடிவில் 'பரசு' ஆயுதம் உள்ளதாகக் காட்டப்படுகிறது.

**சூலம்**

சிவபிரானுக்குரிய சிறப்பான படைக்கலம் சூலமாகும். இது மூன்று நுனிகளை உடையது. சுரை வரையிலும் எஃகு இரும்பால் செய்யப்பெற்று நீளமான மரக்கம்பில் செருகியிருப்பார்கள்.

**கதை**

'திகிரி' என்ற பெயரை உடைய 'கதை' என்றவுடன் பஞ்சபாண்டவர்களில் பீமனது ஞாபகம் வரும். அல்லது ஆஞ்சநேயரின் கரத்திலுள்ள கதையும் பிரபலமான ஒன்று. இதற்கு 'குண்டாந்தடி' என்ற பெயரும் உண்டு. பகைவர்களை அடித்து நொறுக்கப் பயன்படுத்துவது. கையை விட்டு அகலாதபடி காவலாக இருந்து உடையவரை பாதுகாக்கும் அருமையான ஆயுதம்.

**சங்கம் (சங்கு)**

திருமாலுக்கு உரிய விசேட ஆயுதம். வெற்றியை அறிவிக்கும். பகைவர்களை இதன் ஒலியை கேட்டதுமே அடங்கி ஒடுங்கச் செய்யும். இதில் பல வடிவங்கள் உள்ளன. திருமாலின் சங்கம் 'பாஞ்ச சன்னியம்' என்று கூறப்படும். (தொடரும்)

# கொல்கத்தாவை சுருட்டியது பெங்களூர்



85 ரன்கள் வெற்றி இலக்காக நிர்ணயித்த நிலையில், 13.3 ஓவரில் 2 விக்கெட் இழப்பிற்கு 85 ரன்கள் எடுத்து ஆர்.சி.பி.அபார வெற்றி பெற்றது.

ஐ.பி.எல்.தொடரின் 39-வது லீக் ஆட்டம் அபுதாபியில் நேற்று முன்தினம் நடைபெற்றது. டொஸ் வென்று முதலில் பட்டிங் செய்த கொல்கத்தா நைட் ரைடர்ஸ் 20 ஓவர்கள் நிறைவில் 84 ரன்களே அடித்தது. மோர்கன் அதிகபட்சமாக 30 ரன்கள் அடித்தார். ஆர்.சி.பி. அணியில் முகமது சிராஜ் 3 விக்கெட் வீழ்த்தினார்.

பின்னர் 85 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆர்.சி.பி.அணியின் தேவ்தத் படிக்கல், ஆரோன் பிஞ்ச் ஆகியோர் களம் இறங்கினர். தேவ்தத் படிக்கல் 25 ரன்னிலும், பிஞ்ச் 16 ரன்னிலும் ஆட்டமிழந்தனர். இந்த ஜோடி 6.2 ஓவரில் 46 ரன்கள் சேர்த்தது.

பின்னர் களமிறங்கிய குர்கீரத் சிங் மான் 21 ரன்களும், விராட் கோலி 18 ரன்களும் அடிக்க ஆர்.சி.பி.13.3 ஓவரில் 85 ரன்கள் எடுத்து 8 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. (4)

## போட்டிகளிலிருந்து விலகுகிறார் பிராவோ




சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் வேகப்பந்து வீச்சு ஓல்ரவுண்டர் டுவெயின் பிராவோ எஞ்சிய போட்டிகளில் இருந்து விலகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெஸ்ட் இண்டீஸ் கிரிக்கெட் அணியின் சிறந்த வேகப்பந்து வீச்சு ஓல்-ரவுண்டர் டுவெயின் பிராவோ. சி.எஸ்.கேயின் வெற்றிக்கு இவரது பங்களிப்பும் முக்கியமானது.

ஐ.பி.எல்.2020 சீசன் தொடங்கும்போது காயத்தால் சில போட்டிகளில் விளையாடவில்லை. அதன்பின் அணியில் இடம்பிடித்து விளையாடினார்.

தன்னுடைய சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்த தயாராகி வந்த நேரத்தில் டெல்லி அணிக்கெதிராக விளையாடும் போது காயம் ஏற்பட்டது.

இதனால் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிக்கெதிராக விளையாடவில்லை. இந்நிலையில் எஞ்சிய போட்டிகளில் இருந்து பிராவோ விலகியுள்ளார். மேலும், இன்னும் ஓரிரு நாட்களுக்குள் சொந்த நாடு திரும்புவார் என்று சென்னை சுப்பர் கிங்ஸ் CEO தெரிவித்துள்ளார்.

சென்னை சுப்பர் கிங்ஸ் இன்னும் நான்கு போட்டிகளிலும் விளையாட உள்ளது. இதுவரை 10 போட்டிகளில் விளையாடி மூன்றில் மட்டுமே வெற்றி பெற்று பொயின்ட் டேபிளில் கடைசி இடத்தை பிடித்துள்ளது. (4)

## டோனியிடம் இருந்து சிறப்பு பரிசு பெற்ற பட்லர்




ராஜஸ்தான் அணி வீரரான ஜோஸ் பட்லருக்கு, சென்னை அணியின் தலைவர் டோனி சிறப்பு பரிசு ஒன்றை கொடுத்துள்ளார்.

ஐ.பி.எல்.தொடரில் இறுதியாக நடைபெற்ற சென்னை, ராஜஸ்தான் அணிக்கு எதிரான ஆட்டத்தில், சென்னை அணி தோல்வியடைந்தது.

இதன் மூலம் சென்னை அணியின் பிளே ஓப் சுற்று ஏறக்குறைய முடிந்துவிட்டது.


இந்நிலையில், அப் போட்டி டோனிக்கு 200-வது ஐ.பி.எல். போட்டி ஆகும், ஐ.பி.எல்.கிரிக்கெட் தொடரில் 200 போட்டிகளில் பங்கேற்ற முதல் வீரர் டோனி ஆவார்.

இதையடுத்து போட்டியில் ராஜஸ்தான் அணியின் வெற்றிக்கு காரணமான ஜோஸ் பட்லருக்கு ஆட்ட நாயகன் விருது கொடுக்கப்பட்டது.

ஆனால் ஆட்டநாயகன் பரிசை விடவும் அவருக்குக் கிடைத்த பெரும் பரிசு சென்னை அணியின் கப்டன் டோனியின் புகழ்பெற்ற 7 ஆம் எண் ஜெர்சி ஆகும்.

அதை சிறப்புப் பரிசாக டோனியிடம் இருந்து பட்லர் பெற்றுக் கொண்டார். 200வது ஐ.பி.எல்.ஆட்டத்தில் ஆடிய உண்மையான லெஜண்டின் மதிப்பு மிக்க 7ஆம் எண் ஜெர்ஸியை பரிசாகப் பெற்றது ஜோஸ் பட்லரின் கிரிக்கெட் வாழ்க்கையில் முக்கியமான தருணமாக இருக்கும் என்று பலரும் கூறிவருகின்றனர். (4)

## நியூஸிலாந்து அணிக்கெதிரான தொடர்; பிராவோவுக்கு பதிலாக புதிய வீரர்



நியூஸிலாந்து சுற்றுப்பயணத்திற்காக மேற்கிந்திய தீவுகள் இருபது-20 அணியில், சகல துறை வீரரான டுவைன் பிராவோவுக்கு பதிலாக ரொமாரியோ ஷெப்பர்ட் பெயரிடப்பட்டுள்ளார். நடப்பு ஐ.பி.எல். இருபது-20 தொடரில், ஒக்டோபர் 17ஆம் திகதி டெல்லி அணிக்கு எதிரான போட்டியின்போதுடுவைன் பிராவோ காயமடைந்தார்.

இதனால் அவர் தொடரிலிருந்து விலகினார். தற்போது அவர் ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து வெளியேறத் தயாராக உள்ளதாக சென்னை சுப்பர் கிங்ஸின் தலைமை நிர்வாக அதிகாரி காசி விஸ்வநாதன் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு ஆரம்பத்தில் அறிமுகமான 25 வயதான வலக்கை வேகப்பந்து வீச்சாளரான ரொமாரியோ செப்பர்ட், ஐந்து ஒருநாள் போட்டிகளில் விளையாடி 4 விக்கெட்டுகளையும், இரண்டு இருபது-20 போட்டிகளில் விளையாடி இரண்டு விக்கெட்டுகளையும் வீழ்த்தியுள்ளார்.

அத்துடன், நடப்பு கரீபியன் பிறீமியர் லீக்கின் அரையிறுதிக்கு முன்னேறிய கயானா அமேசான் வேரியர்ஸ் அணியில் இடம்பிடித்திருந்த அவர், ஆறு விக்கெட்டுகளை வீழ்த்தியிருந்தார். (4)


## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்


## பஞ்சாப் அணியின் தொடர் வெற்றி குறித்து அணித்தலைவர் ராகுல்

ஐ.பி.எல். கிரிக்கெட்டில் டுபாயில் அண்மையில் நடந்த லீக் ஆட்டத்தில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் புள்ளிப்பட்டியலில் முன்னணியில் உள்ள டெல்லி கப்பிட்டல்சுக்கு அதிர்ச்சி அளித்து ஆவது வெற்றியை பெற்றது.

இதில் டெல்லி அணி நிர்ணயித்த 165 ரன் இலக்கை பஞ்சாப் அணி 19 ஓவர்களில் எட்டிப்பிடித்து முந்தைய தோல்விக்கு பதிலடி கொடுத்தது. நிகோலஸ் பூரன் அரைசதம் அடித்து வெற்றிக்கு உதவினார். 106 ரன்கள் குவித்த டெல்லி வீரர் ஷிகர் தவான் ஆட்டநாயகன் விருது பெற்றார்.

வெற்றிக்கு பிறகு பஞ்சாப் அணியின் கப்டன் லோகேஷ் ராகுல் கூறுகையில், 'எங்கள் அணியின் ஒவ்வொரு ஆட்டத்திலும் எனது இதய துடிப்பு புதிய உச்சத்துக்கு எகிறுகிறது. இந்த ஆட்டத்தை 19வது ஓவரிலேயே வெற்றிகரமாக முடித்தது மகிழ்ச்சி அளிக்கிறது. மும்பை அணிக்கு எதிராக இரண்டு சுப்பர் ஓவர் முடிவில் கிடைத்த வெற்றிக்கு பிறகு அன்றைய தினம் இரவில் நீண்ட நேரம் தூங்கவில்லை.

இந்தப் பரபரப்பு, நெருக்கடியான சூழலுக்கு முன்பே அதாவது சுப்பர் ஓவருக்கு முன்னதாகவே எப்படி போட்டியை முடித்து இருக்க வேண்டும் என்பது குறித்து அதிகமாக சிந்தித்தேன்.




இந்த ஆட்டத்தில் 6 பட்ஸ்மன் மற்றும் ஒரு ஓல்-ரவுண்டருடன் ஆடியது போட்டியை விரைவாக முடிக்க உதவியதாக நினைக்கிறேன். ஒவ்வொரு அணியும், நிலைத்து நின்று ஆடும் பட்ஸ்மேன் ஆட்டத்தை வெற்றிகரமாக நிறைவு செய்ய வேண்டும் என்று சொல்கிறார்கள்.

இந்த விடயத்தை நாங்கள் சரிசெய்ய வேண்டும். சீனியர் வீரரான முகமது ஷமி ஒவ்வொரு ஆட்டத்திலும் சிறப்பாக பந்து வீசி வருகிறார். மக்ஸ்வெல் நன்றாக பட்டிங் செய்தார். அவருக்கு நாங்கள் ஆதரவாக இருக்க வேண்டும்.

அடுத்து வரும் போட்டிகளிலும் அவர் சிறப்பாக விளையாடுவார் என்று நம்புகிறோம்' என அவர் தெரிவித்தார். (4)

## குளவி கொட்டி...

சாயி ஒருவர் உயிரிழந்துள்ளார்

நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் புத்தடி விசுவமடுவைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான இராமலிங்கம் நடேசன் (வயது-55) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்

இது தொடர்பான விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர் (ம-3,315,316)

## இலங்கையில்..

இதனையடுத்து நாட்டில் கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 14 ஆக உயர்ந்துள்ளது. (ம-3)

## யாழ்.மாவட்ட..

வர்த்தகர்களுடன் வர்த்தக தொடர்புகளை பேணியவர்கள் தம்மை அடையாளப் படுத்துமாறு சுகாதார பிரிவு அவசர வேண்டுகோள் விடுத்திருக்கின்றது.

யாழ்.பருத்தித்துறை, தாளையடி, பாசையூர், கொழும்புத்துறை பகுதிகளில் இருந்து கூலர் வாகனங்களில் பேலியகொட மீன் சந்தைக்கு மீன் கொண்டு செல்லப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வந்துள்ளது.

இந்நிலையில் தொடர்புடையவர்கள் உடனடியாக தங்களை அருகில் உள்ள சுகாதார பணிமனையில் அல்லது கிராம சேவகர்கள் ஊடாக தங்களை அடையாளப் படுத்துமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ம-3)

## மதுச்சாலைகளை..

களை மூடுமாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் (GMOA) அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மதுபானக் கடைகளை மூடுவது மக்களின் நோய்த்தடுப்பு சக்தியை பலப்படுத்தும் என்று அவ்வறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

இதேவேளை, கொரோனா வைரஸை அரசியல் ஆதாயத்திற்காக பயன்படுத்தக்கூடாது என்று உலக சுகாதார அமைப்பு தெளிவுபடுத்தியுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.(ம-3)

## நாட்டை முடக்கு...

தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் விசேட அறிவிப் பொன்றை வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்தும் பேசிய அவர்,

கொழும்பு - பேலியகொடை மீன் சந்தைக் கட்டிடத் தொகுதியில் 40இற்கும் மேற்பட்டவர்களுக்கு நேற்றுமுன்தினம் கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டது.

அதேபோல களுத்துறை அகலவத்த பிரதேசத்தில் 05 பகுதிகளில் தனிமைப் படுத்தும் பயணத் தடைகள் விதிக்கப்பட்டன.

இதேபோல ஏனைய பிரதேசங்களிலும் தேவையேற்படின் தனிமைப்படுத்தும் ஊரடங்குச் சட்டம் விதிக்கவும் தீர்மானம் எடுக்க பின்நிற்க மாட்டோம். நாடு முழுவதிலும் முடக்கம் செய்யப்படலாம் என்று பலரும் கூறிவருகின்றனர்.

எனினும் கடந்தமுறை தொற்று பரவிய போது அவ்வாறு நடவடிக்கை எடுத்தோம்.

ஆனால் இம்முறை கடந்த காலத்தில் ஏற்பட்ட அனுபவத்திற்கு அமைய, குறிப்பிட்ட சில இடங்களில் மாத்திரமே ஊரடங்குச் சட்டங்களை விதித்து வருகின்றோம்.

இந்நிலையில் எதிர்வரும் நாட்களில் தேவையேற்படுகிற எந்த பிரதேசத்திலும் தனிமைப்படுத்தும் ஊரடங்குச் சட்டத்தை விதிக்க நாங்கள் பின்நிற்கமாட்டோம் என்றார். (ம-3)

## 20 பாராளுமன்..

நீதியமைச்சரினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 20ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டமூலம் மீதான விவாதம் இருதினங்களாக இடம்பெற்று வந்த நிலையில் நேற்று வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

இந்நிலையில், 20ஆவது திருத்தச் சட்டத்திற்கு ஆதரவாக 156 வாக்குகளும் எதிராக 65 வாக்குகளும் அளிக்கப்பட்டது.

இதனையடுத்து நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை பலப்படுத்தும் விதமாக அரசாங்கம் கொண்டுவந்த 20ஆம் திருத்த சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு, திருத்தங்களுடன் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அங்கீகாரத்தை பெற்று நிறைவேற்றப்பட்டது.

எதிரணி தரப்பில் 8 உறுப்பினர்களும் 20ஆம் திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களித்து அதிர்ச்சி அளித்துள்ளனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 5 எம்.பிக்களில் அக்கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம் தவிர்ந்த ஏனைய 4 எம்.பிக்களும் 20ஆவது திருத்தத்துக்கு ஆதரவாக நேற்று பாராளுமன்றில் வாக்களித்தனர்.


எம்.எஸ்.தவ்பீக், பைசல் காசிம், நசீர் அகமட் மற்றும் எச்.எம்.எம்.ஹரீஸ் ஆகிய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்களே இறுதி நேரத்தில் தாவி 20க்கு ஆதரவாக வாக்களித்தவர்களாவர்.

இதேபோன்று ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. டயா கமகே, இசாக் ரஹ்மான், தமிழ் முற்போக்கு கூட்டணி பாராளுமன்ற உறுப்பினரான அரவிந்தகுமார் மற்றும் எஸ்.எம்.ரஹீம் ஆகிய நான்கு பாராளுமன்ற உறுப்பினர்களும் 20க்கு ஆதரவாக வாக்களித்தனர்.

இதன்மூலம் எதிரணியில் இருந்து எட்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் 20 ஆம் திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## 20ஆவது திருத்தத்துக்கு எதிராக

# துப்பாக்கிச் சூட்டு அடையாளங்களுடன் சபையில் சஜித் அணி எம்.பிக்கள்



(கொழும்பு)

20ஆவது திருத்த யோசனை பாராளுமன்றத்தில் நேற்று பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்ட நிலையில் அதற்கெதிராக ஐக்கிய மக்கள் சக்தியினர் துப்பாக்கிச் சூட்டினால் காயமடைந்த அடையாளத்தை சபையில் வெளிப்படுத்தியுள்ளனர்.

இதற்காக அவர்கள் தங்களது மார்பு பகுதியில் துப்பாக்கியால் சுட்டதுபோன்ற காயத்தை ஒத்த ஸ்ரிக்கர்களை ஒட்டியபடி காட்சியளித்தனர். (ம-3)

## கோப்பாய்...

டுள்ளவர்களில் 3 பேர் திடீர் சுகயீனம் ஏற்பட்டதன் காரணமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியில் வெளி மாவட்டத்தைச் சேர்ந்த பலர் தனிமைப்படுத்தப்பட்டு உள்ளனர்.

இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களில் 3 பேருக்கு திடீரென சுகயீனம் ஏற்பட்டதன் காரணமாக நேற்றுமுன் தினம் இரவு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-3)

## இரட்டை பிரஜா..

சரத்துக்கு தனி வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என எதிர்க்கட்சி கோரியதையடுத்து பாராளுமன்றத்தில் இரட்டை பிரஜாவுரிமை சட்டத்திற்கு தனி வாக்கெடுப்பு நடத்தப்பட்டது

இந்நிலையில் இரட்டை பிரஜாவுரிமை சரத்து மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டது. இவ் வாக்கெடுப்பில் ஆதரவாக 157 வாக்குகளும் எதிராக 64 வாக்குகளும் அளிக்கப்பட்டன. (ம-3)

## +309...

க்கை 2712 ஆக அதிகரித்துள்ளது.

நாட்டில் கொரோனாவினால் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 6 ஆயிரத்து 287 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## கிணற்...

வீட்டுக் கிணற்றில் குதித்துள்ளார்.

அவரை மீட்ட உறவினர்கள் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர்.

எனினும் சிகிச்சை பலனின்றி முதியவர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் கெருடாவில் கிழக்கு தொண்டைமானாறைச் சேர்ந்த இராமுபிள்ளை யார் (வயது-76) என்ற முதியவராவார்.

இது தொடர்பான மரண விசாரணைகளை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1624 திகதி 2020/10/22
ஆங்கில எழுத்து I
வெற்றி இலக்கங்கள் 48 65 71 72

மெகா பவர்
திகதி 22/10/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0650
K 14 37 46 54 64

மஹஜன சம்பத
திகதி 2020/10/22
சீட்டிழுப்பு இலக்கம் 4283
E 1 8 2 5 7 9

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 22/10/2020
சீட்டிழுப்பு இலக்கம் 2578
ஆங்கில எழுத்து S
வெற்றி இலக்கங்கள் 7 32 72 79

உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 377 திகதி 22.10.2020 வர்ணம் நீலம்
ஆங்கில எழுத்து P வெற்றி இலக்கங்கள் 52 53 67 விதி எண் 5
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 10,128,780
Web: www.dlb.lk

ராசி
திகதி 22/10/2020 வெற்றி வாரம் 2960
சுப்பர் ஜக்பொட் ரூ. 30,23,021 வர்ணம் கபிலம்
வெற்றி இலக்கங்கள் 17 51 56 59 தனுசு
9983 619
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 7,836,900

அத கோடிபதி
வியாழக்கிழமை சீட்டிழுப்பு இல: 1079 வர்ணம் : நீலம் சீட்டிழுப்பு திகதி: 2020.10.22
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 80,294,185/-
வெற்றி இலக்கங்கள் 34 55 58 68 C

சனிதா
வியாழக்கிழமை சீட்டிழுப்பு திகதி: 2020.10.22 சீட்டிழுப்பு இல: 3409 வர்ணம் : சிவப்பு
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 31,176,756
வெற்றி இலக்கங்கள் 14 26 50 68 I
5492

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1253 நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 22.10.2020 தினம் வியாழக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் I 14 22 44 70
51,027,739.60
SUPER 500 9 3 1 6

# 20 ஆவது திருத்தத்தை கொண்டுவந்து பிரதமரின் முதுகில் குத்திவிட்டனர்

## ஜே.வி.பி தெரிவிப்பு

(கொழும்பு)

20 ஆம் திருத்தத்தை கொண்டுவந்து நீதி அமைச்சர் உள்ளிட்ட அரசாங்கம் பிரதமரின் முதுகில் குத்திவிட்டதாக குற்றச்சாட்டிய ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திசாநாயக மகிந்த ராஜபக்ச எதிர்க்கட்சியில் இருந்திருந்தால் நிச்சயமாக. 20ஐ எதிர்த்திருப்பார் எனவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று , 20 ஆம் திருத்த சட்டமூலம் மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

பிரதமரை முன் ஆசனத்தில் அமர வைத்துவிட்டு பின் ஆசனத்தில் அமர்ந்திருந்த நீதி அமைச்சர் அலி சப்ரி பிரதமரின் முதுகில் கத்தியால் குத்தியது போன்று நேற்று முன்தினம் சில சம்பவங்கள் இடம்பெற்றது.

இதைத்தான் முதுகில் குத்துவது என கிராமங்களில் கூறுவார்கள், அதனை நான் நேரில் பார்த்தேன்.

அதேபோல் 20 ஆம் திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ள நிலையில் அதனை பாராளுமன்றத்தின் முழுமையான அங்கீகாரத்துடன் கொண்டு வரவில்லை.

அரசாங்கத்தில் இருக்கும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அதிகாரத்தை சாதகமாக பயன்படுத்தியே கொண்டு வரப்பட்டுள்ளது என்றார். (ம-03)

# பாராளுமன்ற அமர்வில் பங்கேற்காத மைத்திரி

(கொழும்பு)

ஆளும் கட்சியைச் சேர்ந்த முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமான மைத்திரிபால சிறிசேன 20 ஆவது திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களிக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஏனெனில் நேற்றைய பாராளுமன்ற அமர்வில் அவர் பங்கேற்காமையே இதற்கு காரணமாகும்.

நேற்றையதினம் 221 எம்.பிக்கள் வாக்களித்துள்ளனர். இதில் 156 பேர் ஆதரவாகவும் 65 பேர் எதிர்த்தும் வாக்களித்துள்ளனர்.

ஐக்கியதேசிய கட்சி மற்றும் ரத்னதேரர் கட்சியைச் சேர்ந்தவர்கள் தமது தேசியப் பட்டியல் எம்.பியை இதுவரை நியமிக்கவில்லை.

இதனால் சபாநாயகர் உட்பட 223 எம்.பிக்களே தற்போது பாராளுமன்றில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் சாட்சியமளிக்க மைத்திரி சென்றதாலேயே பாராளுமன்ற அமர்வில் அவர் பங்கேற்கவில்லை என தெரிவிக்கப்படுகின்றது. (ம-03)

# பட்டப்பகலில் வீடுடைத்து துணிகரத் திருட்டு!

## கோண்டாவிலில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

பட்டப்பகலில் வீடு உடைத்து திருட்டு சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் நேற்று வியாழக்கிழமை கோண்டாவில் சந்திப்பகுதியில் இடம் பெற்றுள்ளது.

வீட்டில் இருந்தவர்கள் வேலைக்குச் சென்ற சமயம் பார்த்து கதவை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் மடிக்கணனி, தொலைபேசி, ரேடியோ மற்றும் ஒரு தொகைப் பணம் என்பவற்றை திருடிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பில் கோப்பாய் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளதுடன் பொலிஸார் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று பார்த்ததுடன் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டுள்ளனர். (ம. 03)

# 20 ஆவது திருத்தத்தால் வெளிநாட்டு தலையீடுகள் ஏற்பட வாய்ப்பு உருவாகும்

## சமூக நீதிக்கான தேசிய இயக்கம்

(கொழும்பு)

அரசியலமைப்பின் 20 ஆவது திருத்த யோசனை இரட்டைக்குடியுரிமை கொண்ட ஒருவர் நாட்டை நிர்வகிப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதன் ஊடாக வெளிநாட்டுத் தலையீடுகள் ஏற்படுவதற்கான வாய்ப்பை உருவாக்குகிறது என்று சமூக நீதிக்கான தேசிய இயக்கம் சுட்டிக்காட்டியிருக்கிறது.

எது எவ்வாறெனினும் பாராளுமன்ற உறுப்பினர்கள் 20 ஆவது திருத்தத்தை நிறைவேற்றத்தான் போகின்றார்கள் என்றால், அதிலுள்ள நாட்டிற்கு வெகுவாக தீங்கேற்படுத்தக்கூடிய கூறுகளையேனும் நீக்கவேண்டும் என்றும் அந்த இயக்கம் வலியுறுத்தியிருக்கிறது.

மக்களின் அபிப்பிராயத்திற்குப் புறம்பாக நாட்டின் நிர்வாகத்தை இரட்டைக்குடியுரிமையை கொண்டவரிடம் கையளிப்பதற்கு முன்னெடுக்கப்படும் முயற்சியைத் தோற்கடிப்போம் என்ற தலைப்பில் சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் சார்பில் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது.

வேறொரு நாட்டில் குடியுரிமையைக் கொண்டவரிடம் இலங்கையை நிர்வகித்தல் மற்றும் சட்டங்களை உருவாக்குவதற்கான பொறுப்பைக் கையளிப்பதற்கு ஏற்புடைய வகையில் அரசியலமைப்பில் திருத்தத்தை ஏற்படுத்துவது ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாததாகும். தேசிய பாதுகாப்பிலும் நாட்டின் நலனிலும் அக்கறைகொண்ட எந்தவொரு பிரஜையினாலும் இந்தத் திருத்ததை ஏற்றுக்கொள்ள முடியாது. அவ்வாறான திருத்தங்களை மேற்கொள்வதென்பது நாட்டின் 21 மில்லியன் மக்களின் அபிலாசைகளை அவமதிக்கும் விதமான செய்கையாகும்.

நீதியமைச்சினால் வெளியிடப்பட்ட அறிக்கையின் பிரகாரம், எமது நாட்டின் தேசிய அடையாளமாக விளங்கும் வாரியப்பொல ஸ்ரீசுமங்கல தேரர் உள்ளிட்டோர் மிகவும் தெளிவாகவும் உறுதியாகவும் ... ங்களாக அர்ப்பணிப்புடன் செயலாற்றிய பலரையும் அவமதிக்கும் வகையில் இரட்டைக்குடியுரிமை கொண்ட ஒருவர் பாராளுமன்ற உறுப்பினராக மாத்திரமன்றி, நாட்டின் ஜனாதிபதியாவதற்குக்கூட வாய்ப்பளிக்கும் சரத்து 20 ஆவது திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது என்றுள்ளது. (ம-03)





விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK- 1025/=Kg
0768226240
எமது நேரடிக்கிளைகள்
யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி • நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய் • புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை
(C-308)

காணி விற்பனைக்கு உண்டு
யாழ்ப்பாணம் ராச வீதியில் றோட்டுடன் 9 பரப்பு சீர் செய்யப்பட்ட காணி விற்பனைக்கு உண்டு.
1 1/2 பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.
தரகர் தேவையில்லை.
தொடர்பு
077 623 4204, 076 888 4625
(4443)

அமெரிக்க லொத்தர் விசா
பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன
2022ல் நீங்களும் அமெரிக்காவில்.
ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
0768226241
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற அரிய சந்தர்ப்பம்
குடும்பத்தினர்களுக்கு இரண்டு வாய்ப்புக்கள்
விண்ணப்ப முடிவு திகதி 10-11-2020
வெளிநாட்டில் வாழ ஒரு இலவச சந்தர்ப்பம்! தவறவிடாதீர்கள்!

| யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | நெல்லியடி | சாவகச்சேரி | திருகோணமலை |
|---|---|---|---|---|
| 0768226243 | 0768226240 | 0776699892 | 0768226242 | 0768226237 |
| மானிப்பாய் | சுன்னாகம் | புதுக்குடியிருப்பு | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை |
| 0768226238 | 0764550670 | 0764550673 | 0768226230 | 0776697960 |

V2 Travels www.facebook.com/v2tandt

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 2217603, 021 567 1532


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.10.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.